**கவனிக்க.-** இவ்வர்த்தமானியின் பகுதி IV (அ) மற்றும் பகுதி IV (ஆ) ஆகியன சிங்கள மற்றும் ஆங்கில பிரதி தனியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1684 - 2010 දෙසැම්බර් මස 10 වැනි සිකුරාදා - 2010.12.10

*1684 ஆம் இலக்கம் - 2010 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 10 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# *பகுதி IV(அ) - மாகாண சபைகள்*

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | 1784 |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | 1784 |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |
| | - |
| | - |


### *வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான*

### *முக்கிய அறிவித்தல்கள்*

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை - நண்பகல் 12.00 மணியாகும்***. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களாவன, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனையும் கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2010, திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2010, திசெம்பர் மாதம் 03 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2010 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# ஆளுநரின் நியமனங்களும் பிறவும்

**1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைச் சட்டத்தின் 33(1) ஆம் பிரிவின்கீழ் ஆளுநரால் செய்யப்பட்ட நியமனம்**

| தொடர் இலக்கம் | பெயர்/சேவை/வகுப்பு/தரம் | நியமிக்கப்பட்ட பதவி/அமைச்சு நடைமுறைக்கு வரும் திகதி |
|---|---|---|
| 1 | திரு. எச். சுமனபால | 2009.11.08 ஆந் திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்கு, மேல் மாகாண மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் உறுப்பினராக நியமனம் செய்யப் பட்டுள்ளார். |

எஸ். அலவி மௌலானா,
மேல் மாகாண ஆளுநர்.

மேல் மாகாண ஆளுநரின் செயலாளர் அலுவலகம்,
"யுனிற்றி பிளாசா",
கொழும்பு 4.
2010.11.11.

12-174

# மாகாண சபை அறிவித்தல்கள்

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபை**

ஊவா மாகாணத்தின் மாகாண சபையால் பிரேரிக்கப்பட்ட கூட்டுறவுச் சங்க விஞ்ஞாபனம்

ஊவா மாகாணத்தின் மாகாண சபைக்குள் செயற்படுத்துவதற்காக உத்தேசித்துள்ள மேல் குறிப்பிடப்பட்டுள்ள நகல் வரைவு விஞ்ஞாபனத்தை பொதுமக்களின் கருத்துகளை அறிந்துகொள்வதற்காக கீழே பிரசுரிக்கின்றேன்.

இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 10 நாட்களின் பின் ஊவா மாகாண மாகாண சபையின் அங்கீகாரத்திற்கு சமர்ப்பிக்கப்படும். இந்த விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்ட விடயங்கள் தொடர்பாக ஏதேனும் கருத்துகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் என்றால் இந்த அறிவித்தலின் பின் 10 நாட்களுக்குள் அந்த கருத்துக்களை எழுத்து மூலம் கீழ்க்காணும் எனது முகவரிக்கு அறிவிக்கவும்.

ஆர். எம். குமாரசிரி ரத்நாயக்க,
வீதி அபிவிருத்தி, வீடு, நீர் வழங்கல்,
நுகர்வோர் செயற்பாடு, கூட்டுறவு,
உணவு விநியோகம் மற்றும்
பகிர்ந்தளித்தல் அமைச்சர்,
ஊவா மாகாணத்தின் மாகாண சபை.

அமைச்சு அலுவலகம்,
இல. 301, ஆர். எச். குணவர்தன மாவத்தை,
பதுளை.
2010.11.23.

**இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபை**

ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் உத்தேச கூட்டுறவு சங்க நியதிச்சட்டம்

ஊவா மாகாணத்தில் வாழும் சமூகத்தின், பொருளாதாரம் மற்றும் சமூக நிலைமையை மேம்படுத்துவதற்காக அந்த துறையில் புதிய சங்கங்களை உருவாக்குவதும் மற்றும் கண்காணிப்பதும், கூட்டுறவு சங்கங்கள் பலன்தரக்கூடியதும் செயற்திறன்மிக்கதுமாக இயக்குவதும், ஆலோசனை வழங்குவதும் மற்றும் கூட்டுறவாளர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதும் மற்றும் கூட்டுறவுத்துறைக்கு தொடர்பான யாப்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை செயற்படுத்துவதற்குமாக, நியதிகளை உருவாக்குவதும் மற்றும் அதற்கு தொடர்புடைய பலன்தரும் விடயங்களுக்கான

நிபந்தனைகளை உருவாக்குவதற்குமான நியதிச்சட்டமாகும். இந்த நியதிச்சட்டம் 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்கம் கொண்ட கூட்டுறவு சங்க யாப்பிற்கு இசைவானதாகும்.

செயற்திறனுடன் பலனளிக்கக்கூடியதுமான நம்பிக்கையுடைய சிறந்த கூட்டுறவு பணியை முன்னெடுத்து செல்வதனூடாக ஊவா மாகாண மக்களின் சமூக பொருளாதார நிலைமையை மேம்படுத்துவதற்கு ஊவா மாகாணத்தின் மாகாண சபை கடமைப்பட்டிருப்பதால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் ஊவா மாகாணத்தின் மாகாண சபை இதை பிரகடனப்படுத்துகிறது. முகவுரை.

1. இந்நியதிச் சட்டம் ஊவா மாகாணத்தின் மாகாண சபையின் கூட்டுறவுச் சங்க நியதிச்சட்டம் என அழைக்கப்படும். இது இதற்குப் பின் ''ஆளுநராக'' குறிப்பிடப்படும் நபரால் ஊவா மாகாண ஆளுனர் அவர்கள் அங்கீகாரம் வழங்கும் நாளிலிருந்து அல்லது ஆநனர் அவர்கள் நிர்ணயிக்கப்பட்ட நாளிலிருந்து அமுலாகும். சுருக்கப் பெயரும் அமுலாக்கல் திகதியும்.

2. இந்நியதிச் சட்டம் கூட்டுறவு சங்கத்தின் ஒழுங்கமைப்பு, நிர்வாகம் மற்றும் அபிவிருத்திக்கான கீழ்க்காணும் பொதுவான இலக்குகளை அடைவதற்கு சட்ட நிபந்தனைகளை வழங்குகிறது :- இலக்கு.

(அ) கூட்டுறவு தொடர்பான மாகாண கொள்கை திட்டமிடலை, மேற்கொள்ளல் மற்றும் நீதி நிர்வாகம்
(ஆ) கூட்டுறவு நிறுவனத்திற்கு, சங்கத்திற்கு அல்லது அமைப்புகளுக்கு சட்ட ரீதியான தனித்துவத்தை பெற்றுக்கொடுத்தல்
(இ) கூட்டுறவுச் சங்க மற்றும் கூட்டுறவு நிறுவன ஊழியர்களின் உரிமைகள், பொறுப்புகள் மற்றும் சலுகைகளை உறுதிப்படுத்தல்
(ஈ) கூட்டுறவு சங்கங்களை முறைப்படுத்தல், பலப்படுத்தல் மற்றும் அபிவிருத்தி செய்தல்
(உ) கூட்டுறவு முயற்சியாண்மையை பரப்புதல் மற்றும் மேம்படுத்தல்
(ஊ) கல்வி மற்றும் பயிற்சிகளை மேற்கொள்ளல் மற்றும் கூட்டுறவு தொடர்பான அறிவை விரிவுபடுத்தல்

## I ஆம் அத்தியாயம்

### கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளர் அவர்களின் கடமைகள்

3. இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளை செயற்படுத்தும் அதிகாரமுடையவராக செயற்படும் விதத்தில், கூட்டுறவு ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்க பதிவாளர் (இதற்குமேல் ஆணையாளர் அல்லது பதிவாளராக அடையாளப்படுத்தப்படுபவர்) ஒருவரை நியமிக்க வேண்டும். கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவுச் சங்க பதிவாளர்.

4. பதிவாளரின் கடமைகள் கீழ்க்காணும் விதத்தில் இருத்தல் வேண்டும் :- பதிவாளரின் கடமைகள்.

(அ) கூட்டுறவுச் சங்கங்களை பதிவுசெய்தல் மற்றும் ஏனைய சட்டதிட்டங்களுக்கேற்ப விடயங்களை நிறைவேற்றுதல்
(ஆ) கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேவையான மூலதன வசதியை வழங்குதல் மற்றும் நிதி முகாமைத்துவம்
(இ) கூட்டுறவுச் சங்க நிதி ஒதுக்கீடுகளில் நடுவராக செயற்படல்
(ஈ) கல்வி நிகழ்ச்சிகள், பயிற்சி நிகழ்ச்சிகள் மூலம் அறிவைப் பெற்றுத்தரக்கூடிய நிகழ்ச்சிகளை நடாத்துதல்
(உ) முகாமைத்துவ ஆலோசனை சேவைகளையும் கூட்டுறவு நடவடிக்கைகளுக்குட்பட்ட ஆய்வுகளையும் மேற்கொள்ளல்
(ஊ) சர்வதேச மற்றும் தேசிய கூட்டுறவு சங்க ஒருங்கிணைப்பாளர்களுக்கிடையில் இணைப்பாளராக செயற்படுதல்
(எ) கூட்டுறவு நடவடிக்கைகளுக்குள் மற்றும் கூட்டுறவு நடவடிக்கைகளுக்கு தொடர்புள்ள முரண்பாடுகளை தீர்த்துவைத்தலும் முடிவுசெய்தலும்
(ஏ) முடிவுகளை அல்லது நிபந்தனைகளை நீதிமன்ற மூலமாக செயற்படுத்தல், நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தல் மற்றும் நீதிமன்றம் தொடர்புடைய பணிகளைப் பொறுப்பேற்றல்
(ஐ) கூட்டுறவுச் சங்கங்களின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுவான மற்றும் சிறப்பு பரிசோதனை நடாத்துதல் மற்றும் ஆலோசனை பற்றிய நடவடிக்கைகள்
(ஒ) செயற்திறனற்ற கூட்டுறவுச் சங்கங்களை கலைத்தல் மற்றும் அவைகளின் இறுதிப் பணிகளை மேற்கொள்ளல்
(ஓ) கூட்டுறவுச் சங்க கணக்காய்வுக்கான நிபந்தனைகளை ஏற்படுத்தல்
(க) அரச மற்றும் தனியார் தொழில் துணிவாளர்களை கூட்டுறவுச் சங்கங்களை ஒன்றிணைந்து செயற்படுவதற்கு இணைப்பாளராக கடமையாற்றுதல்

(ஙு) கூட்டுறவு நிறுவனங்களை ஒருங்கிணைத்தல், பகுதிகளாக்குதல் மூலதனம் மற்றும் பொறுப்புகளை வழங்குதல்

(ச) கூட்டுறவு ஊழியர்களை நிர்வாகம் செய்தல்

(ட) நியதிச்சட்டத்தின் இலக்கை அடைவதற்கு தேவைப்படும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பணிகளுக்கு தொடர்புடைய அல்லது வேறு அனைத்து செயற்பாடுகளையும் செய்தல்

கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம்.

5. (1) இந்த நியதிச்சட்டத்தின் இலக்குகளை அடைவதற்கு ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் என்ற பெயரால் அழைக்கப்படும் ஒரு நிறுவனம் (இங்கு இதற்கு மேல் திணைக்களம் என குறிப்பிடப்படும்) நடைபெறுவது சட்டபூர்வமாக இருக்க வேண்டும்.

(2) கூட்டுறவு அபிவிருத்தி திணைக்கள தலைமையானவர், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் கூட்டுறவு சங்க பதிவாளராக இருத்தல் வேண்டும்.

(3) பதிவாளருக்கு உதவுவதற்காக பிரதி சிரேஷ்ட உதவியாளர் அல்லது ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையான பதிவாளர்களை அல்லது தேவைப்படும் பட்சத்தில் வேறு அதிகாரிகளையும் நியமித்து கொள்ளலாம், எவ்வாறாயினும் பதுளை மற்றும் மொனறாகலை மாவட்டங்கள் இரண்டிற்காக, மாகாண திணைக்களத்தில் ஒரு பதவிக்கு திணைக்கள ஊழியர்கள் மூவரும், உதவி பதிவாளர்களாக மற்றும் உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர்களாக நியமிக்க வேண்டும்.

(4) கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் மற்றும் பதிவாளர் இலங்கை நிர்வாக சேவையில் முதற்தர அதிகாரியாக இருத்தல் வேண்டும்.

(5) (அ) இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அல்லது அதனடிப்படையில் உருவாக்கப்படும் அல்லது உருவாக்கியது என கருதப்படும், ஏதேனும் ஒரு விதி அடிப்படையிலான பதிவாளரின் அதிகாரங்கள் அனைத்தும் அல்லது அதில் ஓரளவு அதிகாரம் ஒரு பிரதி பதிவாளருக்கு, சிரேஷ்ட உதவி பதிவாளருக்கு அல்லது உதவி பதிவாளருக்கு எழுத்துமூலம் வழங்கக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

(ஆ) மேலே (5) (அ) பிரிவின் அடிப்படையில் வழங்கப்படும் ஏதேனும் ஒரு அதிகாரம் அங்கு அதிகாரம்பெற்ற பிரதி பதிவாளர் அல்லது சிரேஷ்ட உதவி பதிவாளர் அல்லது உதவி பதிவாளர் செயற்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

## *II* ஆம் அத்தியாயம்

### கூட்டுறவுச் சங்கங்களை அல்லது யூனியன்களை பதிவுசெய்தல்

பதிவு செய்யக் கூடிய சங்கங்கள் மற்றும் யூனியன்கள்.

6. (i) இங்கு இதன் பின் குறிப்பிடப்படும் நிபந்தனைகளின் அடிப்படையில் கீழே குறிப்பிடப்பட்டுள்ள கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் யூனியன்களை பதிவுசெய்யலாம் :-

(அ) தனிப்பட்ட அங்கத்தவர்களின் பொருளாதார, சமூக, கலாச்சார, கல்வி மற்றும் ஆன்மீக சுகநலத்திற்கு காரணியாக குறிப்பிட்ட சேவைகள் சர்வதேச கூட்டுறவு ஒன்றியத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் அடிப்படை வாதத்திற்கேற்ப அமைத்துக்கொள்வது தனிப்பட்ட இலக்குகளைக் கொண்ட சங்கமாகும்.

(ஆ) இந்த உப பிரிவின் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களின் செயற்பாடுகளை இலகுபடுத்தும் நோக்கத்துடன் அமைக்கப்பட்ட தனிப்பட்ட அங்கத்தவர்களை பதிவுசெய்த சங்கங்களை உள்ளடக்கப்பட்ட சங்கம்

(இ) கூட்டுறவுக் கல்வி, பயிற்சி மற்றும் முகாமைத்துவ சேவைகள், ஆலோசனைகள் ஊவா மாகாண கூட்டுறவு முறைமையை முன்னேற்றுவதற்குத் தேவையான வேறு சேவைகளை வழங்குவதை இலக்காகக் கொண்டு, நடாத்தப்படும் ஆரம்ப கூட்டுறவுச் சங்கங்கள், மாவட்ட கூட்டுறவுச் சங்கங்களில் அங்கத்துவம் பெற்ற மாவட்ட கூட்டுறவு சபைகள், அந்த இலக்குடனான மாவட்ட கூட்டுறவு சபைகள் மற்றும் மாகாண கூட்டுறவு சங்கங்களினால் உருவாக்கப்பட்ட கூட்டுறவுச் சபைகள்

(ஈ) இவ் உப பிரிவில் (அ) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள இலக்கை அடைவதற்கான வியாபாரத்தை நடாத்திக்கொண்டு செல்வதற்காக பதிவுசெய்யப்பட்ட சங்கங்களால் உள்ளடக்கப்பட்ட சங்கங்கள் அல்லது சபைகள்

(ii) (1) ஆம் உப பிரிவில் (அ) பந்தியின் அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள் வரையறைக்குட்பட்ட அல்லது வரையறுக்கப்படாத பொறுப்புகளுடன் பதிவுசெய்யக்கூடியதாகவும் (அ), (ஆ), (இ) பந்தியின் அடிப்படையிலுள்ள சங்கம் வரையறைக்குட்பட்ட பொறுப்புகளின் அடிப்படையில் மாத்திரம் பதிவுசெய்யப்பட வேண்டும். (அ) பந்தியின் அடிப்படையாகக் கொண்ட சங்கம், சங்கமாகவும் (ஆ), (இ) மற்றும் (ஈ) பந்தியின் அடிப்படையாகக் கொண்ட சங்கங்கள், யூனியன்கள் அல்லது சபையாக அடையாளப்படுத்தப்பட வேண்டும்.

(3) சங்கத்தில் அங்கத்தவர்களின் பொறுப்பு வரையறைக்குட்பட்ட சந்தர்ப்பத்தில் பதிவுசெய்யப்படாத எந்தவொரு சங்கத்தின் அங்கத்தவராலும் ஐந்திலொரு பங்கிற்குட்பட்ட அச்சங்கத்தின் பங்கு மூலதனத்தில் துணை விதிகளில் நிர்ணயிக்கப்படக்கூடிய அளவிற்கு மேற்படலாகாது.

*பதிவு செய்வதற்கான நிபந்தனைகள், பதிவு செய்வதற்காக விண்ணப்பித்தல் மற்றும் சமர்ப்பிக்கப் படவேண்டிய ஆவணங்கள்.*

7. (1) பதிவுசெய்யும் பணிகளுக்காக விதி மூலமாக உத்தரவு இட்டதுபோல் விண்ணப்பப்படிவத்தை சங்கம் அல்லது யூனியனால் பதிவாளருக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

(2) அந்த விண்ணப்பப்படிவம்-

(அ) ஆட்கள் மாத்திரம் உள்ளடக்கப்பட்டுள்ள அங்கத்தவர்கள் இருக்கும் ஒரு சங்கம் தொடர்புபடும்போது விண்ணப்பப்படிவம் அதிகாரத்திற்குட்பட்ட பிரதேசத்துக்கள் வசிக்கும் அல்லது அசையா சொத்துடைய அல்லது தொழிலில் ஈடுபட்டுள்ள அல்லது 18 வயதுக்கு மேற்பட்ட இருபது பேரால் கையொப்பமிட வேண்டும். அவ்வாறாயினும் இந்த வயது எல்லை பாடசாலையில் அமைக்கப்படும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு ஏற்புடையதல்ல.

(ஆ) பதிவுசெய்த சங்க அங்கத்துவம்பெற்ற சங்கமொன்று தொடர்புபடும்போது பதிவுசெய்த அவ்வாறான அனைத்து சங்கத்திற்கும் தகுந்தாற்போல் அதிகாரம்பெற்ற ஐந்து பேரினால்.

(இ) பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் யூனியன்களால் உள்ளடக்கப்பட்ட யூனியனாக இருக்குமாயின் தகுந்தாற்போல் அதிகாரம் வழங்கப்பட்ட சங்கம் மற்றும் யூனியன்களிலுள்ளவர்களில் குறைந்தபட்சம் ஐவர் மற்றும் ஆட்களினாலான அங்கத்தவர்களுடன் பத்து பேர் கையொப்பமிட வேண்டும்.

(3) விண்ணப்பப்படிவத்துடன்-

(அ) தலைவர் அல்லது செயலாளரால் முறைப்படி அத்தாட்சிப்படுத்தப்பட்ட சங்கங்கள் அல்லது யூனியன்களை பதிவுசெய்யப்படுவதற்கான பிரேரணையை, பிரேரித்து எடுத்த தீர்மானத்தின் பொதுக்கூட்ட அறிக்கையின் இரண்டு பிரதிகளும் மற்றும் வருகை பற்றிய விபரம் மற்றும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட உபவிதி யாப்பை பிரேரித்து எடுத்த தீர்மானத்தின் பொதுக்கூட்ட அறிக்கையின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட இரண்டு பிரதிகள்.

(ஆ) உத்தேச உபவிதி யாப்பு இந்நியதிச்சட்டத்தில் அல்லது அதன் அடிப்படையில் உருவாக்கப்பட்ட அல்லது உருவாக்கப்பட்டதாக கருதும் ஏதேனும் நியதிகளுக்கு முரணானது அல்லதென கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் அல்லது பதிவாளர் உத்தரவிடப்பட்ட, எவரேனும் ஒருவரிடம் அல்லது நிறுவனத்தின் அறிக்கை அல்லது பரிந்துரையுடன், உத்தேச சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்புகளின் பிரதிகள் இரண்டு.

(இ) சங்கம் அல்லது யூனியன் ஈடுபடுவதற்காக பிரேரித்துள்ள எதிர்கால நடவடிக்கைகளுக்கான தகுதிகாண் அறிக்கை.

(ஈ) விண்ணப்பப்படிவத்தை கையொப்பமிடும் அங்கத்தவர்களால் அங்கத்துவக் கட்டணம் செலுத்துவதை உறுதிப்படுத்தும் மற்றும் அப்பணம் அங்கு செயற்குழு பொறுப்பில் இருப்பதாக சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவால் கையொப்பமிட்ட அத்தாட்சிப்பத்திரம்.

(உ) விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிட்ட ஒவ்வொரு அங்கத்தவரினதும் வயது, ஆண்/பெண், விலாசம், தொழில் மற்றும் பெற்றுக்கொண்ட பங்குகளின் அளவை குறிப்பிடும் ஆவணம்.

(ஊ) அங்கத்தவர்களின் வாக்குகளால் தெரிவுசெய்யப்பட்ட செயற்குழுவினரின் பதவிகள் உள்ளடக்கப்பட்ட பெயர்ப்பட்டியல்.

(எ) சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளின் திறன் மற்றும் மேம்படக்கூடிய சாத்தியம் தொடர்பாக பதிவாளரால் ஏற்றுக்கொள்ளப்படும் ஒருவரின் அறிக்கை.

(ஏ) சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழு அங்கத்தவர்களுக்கிடையில் உள்ளடக்கப்பட்டுள்ளவர்களில் இருவரேனும் வயது பதினெட்டுக்கும் முப்பத்தைந்துக்கும் இடைப்பட்டவர்கள் இருவர் உபவிதி யாப்பில் உள்ளக்கப்பட்டிருக்கிறது என்பதை உறுதிசெய்யக்கூடிய தலைவர் மற்றும் செயலாளரினால் கையொப்பமிட்ட அத்தாட்சிப்பத்திரம்.

(ஐ) உத்தேச சங்கத்தில் அல்லது யூனியனில் பணிகளை முன்னெடுத்து செல்வதற்கான திறன் பற்றிய அறிக்கையின்படி, காண்பிக்கப்படும் முதலீட்டுத் தேவைகள் நூற்றுக்கு பத்து வீதம் அங்கத்தவர்களால் பங்குகளால் மற்றும் வைப்பாக செலுத்தி இருப்பதாக தலைவர் அல்லது செயலாளரால் கையொப்பமிட்ட சான்றிதழ்.

(4) இப்பிரிவின் பணிகளுக்காக எவரேனும் வயது, வதிவிடம், தொழில், சொத்து அல்லது வேறு தகைமைகள் தொடர்பாக ஏதேனும் பிரச்சினைகள் எழும்போது, பதிவாளரால் அது தொடர்பாக முடிவு எடுக்க வேண்டும். அத்துடன் அவரது தீர்மானம் இறுதி முடிவாக இருக்க வேண்டும்.

சங்கத்தை மற்றும் யூனியனை பதிவுசெய்தல் மற்றும் பதிவை புதுப்பித்தல்.

8. (1) கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியனால் இந்த நியதிச்சட்டத்தின் அல்லது விதியின் நிபந்தனைப்படி செயற்பட்டார் என்பதற்கு, அந்த கூட்டுறவு சங்கம் அல்லது யூனியன் ஈடுபடுவதற்கு எண்ணியுள்ள விடயங்கள் பொருளாதார ரீதியாக பயனுள்ளது அல்லது சங்கத்தின் அல்லது சங்கத்தின் உபவிதி யாப்பு, இந்த நியதிச்சட்டத்திற்கு அல்லது விதிகளுக்கு ஏற்புடையதென மேலே 7 (3) (ஐ) என்ற உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் உத்தேச உபவிதி யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது என பதிவாளர் திருப்தி அடைவாரேயானால் அந்த கூட்டுறவு சங்கம் அல்லது யூனியன், கூட்டுறவுச் சங்கமாக அல்லது யூனியனாக பதிவுசெய்யக்கூடியது என்பதுடன் அந்த உபவிதி யாப்பும் பதிவுசெய்யப்படலாம்.

(2) (அ) இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் பதிவுசெய்த வரையறுக்கப்பட்ட பொறுப்புகளைக் கொண்ட கூட்டுறவுச் சங்கத்தில் மற்றும் யூனியனின் பெயரில் 'வரையறுக்கப்பட்ட' என்ற சொல் முதல் சொல்லாக இருத்தல் வேண்டும், இல்லாவிட்டால் அதில் தமிழ் அல்லது ஆங்கில சொல் அந்த பெயரின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

(ஆ) இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் பதிவுசெய்த வரையறுக்கப்படாத பொறுப்புகளைக் கொண்ட கூட்டுறவுச் சங்கத்தில் மற்றும் யூனியனின் பெயரில் 'வரையறுக்கப்படாத' என்ற சொல் முதல் சொல்லாக இருத்தல் வேண்டும். இல்லாவிட்டால் அதில் தமிழ் அல்லது ஆங்கில சொல் அந்த பெயரின் ஒரு பகுதியாக இருக்க வேண்டும்.

(3) அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமும் மற்றும் யூனியனும் தங்களை பதிவுசெய்த நாளிலிருந்து ஆறு மாதத்திற்குள் மாவட்ட கூட்டுறவு சபையின் அங்கத்துவம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

(4) ஒரு கூட்டுறவு சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவுசெய்வதை பதிவாளர் நிராகரித்தல் அந்நிராகரிப்புக்கு எதிராக மேன்முறையீடு, அது தொடர்பாக நியதிச்சட்டத்தின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதாக கருதப்படும் விதிப்படி அமைச்சரிடம் சமர்ப்பிக்கலாம்.

(5) (அ) ஏதேனும் ஒரு சங்கத்தில் அல்லது யூனியனில் அல்லது சபையொன்றின் பதிவை புதுப்பிக்கப்படல் வேண்டும் என பதிவாளர் எண்ணுவாரேயானால், அவ்வாறு செய்ய வேண்டும் என பதிவாளர் உத்தரவு பிறப்பிக்கலாம். அதற்குப் பொருத்தமான விதியை அமைத்துக்கொள்ள வேண்டும்.

(ஆ) அவ்வாறு பதிவை புதுப்பிக்க வேண்டும் என உத்தரவைப் பெற்ற சங்கம் அல்லது யூனியன் அல்லது சபை அதன்படி பதிவை புதுப்பித்துக்கொள்ளாவிடின் அந்த சங்கத்தின் யூனியனில் அல்லது சபையின் பதிவை பதிவாளர் இரத்துச் செய்யலாம்.

உப விதிகளில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள்.

9. (i) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் உத்தேச உபவிதியில் கீழ்க்காணும் விடயங்கள் உள்ளடக்கப்படவேண்டும் :-

(அ) சங்கத்தின் அல்லது யூனியனின் பெயர், விலாசம் மற்றும் பிரதேசம்.

(ஆ) அங்கத்தவர்களின் பொதுத் தேவைகளை நிறைவேற்றுவதற்கான சங்கத்தின் குறிக்கோள் மற்றும் இலக்கு.

(இ) அங்கத்துவம் மற்றும் இணைந்த அங்கத்துவத்துக்கு தேவையான தகைமை மற்றும் இணைந்த அங்கத்துவம் பெறுவதற்கான வழிமுறைகள்.

(ஈ) அங்கத்தவர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் மற்றும் அங்கத்துவராக இருப்பதற்கான நிபந்தனைகள்.

(உ) அங்கத்துவத்தை மீளப்பெறல், இன்னொருவருக்கு வழங்குதல், அங்கத்துவத்தை நிறைவுசெய்யும் வழிமுறைகள், தொடர்ந்து இரண்டு வருடத்திற்கு சங்கத்துடன் அல்லது யூனியனுடன் கொடுக்கல் வாங்கல் செய்யாமையின் அடிப்படையில் அங்கு செயற்பாடுகளுக்கு பங்களிப்பு வழங்காமையினால் அங்கத்தவர்களின் அங்கத்துவம் இரத்தாகிவிடுவது பற்றிய விபரங்கள் உள்ளடக்கப்படுவது.

(ஊ) வாக்கெடுத்தலின்போது வாக்கைப் பயன்படுத்துதல் அல்லது போட்டியிடுதல் உட்பட அங்கத்துவ உரிமைகளை அனுபவிப்பதற்காக ஒவ்வொரு அங்கத்தவரும் வருடாந்தம் செய்யப்படவேண்டிய அடிப்படையான பங்களிப்பு, கூட்டம் மற்றும் கூட்டங்களில் கலந்துகொள்ளல் போன்ற பணிகளில் குறைந்தபட்ச தேவைகளை உறுதிசெய்தல்.

(எ) கூட்டத்திற்கு அழைக்கப்பட வேண்டிய விதம், தேவைப்படும் அங்கத்தவர்களின் எண்ணிக்கை, கூட்டம் தொடர்பான அறிவித்தல், பொதுச்சபையினதும் செயற்குழுவினதும் கடமைகள்.

(ஏ) பங்குளின் பெறுமதி, பங்குகளின் இலாபம், சங்கத்தின் முதலீட்டு தேவைகள், நிதி சேகரித்தல், வைப்பை சேகரித்தல், கடன் கொடுக்கல் வாங்கல் மற்றும் மீள் அறவிடல் போன்றவை.

(ஐ) கணக்கு மற்றும் கணக்காய்வு, கணக்காய்வுக்காக தயாராகுதல், பொதுச்சபையில் கணக்காய்வு குழுவை தெரிவுசெய்தல், நிதியாண்டு போன்றவை.

(ஒ) செயற்குழுவின், கணக்காய்வு குழுவின் மற்றும் வேறு உபகுழுவின் திட்டங்களும் பொறுப்பும்.

(ஓ) மீதம் அல்லது இலாபம் பற்றிய விடயங்களில் பலவிதமான நிதியம் ஏற்படுத்துவது போன்றவை.

(க) சொத்துக்கள், உபகரணங்கள், வேறு சொத்துக்களை வசப்படுத்திக்கொள்ளல், அப்புறப்படுத்தும் வழிமுறைகள்.

(ங) புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைப் பொறுப்பேற்றல்.

(ச) ஊழியர் மற்றும் ஊழியர்களின் கடமையும் ஈடுபாடும்.

(ஞ) பிணக்குகளைத் தீர்த்தல்.

(ட) உபவிதி யாப்பை திருத்தி அமைப்பதற்கான வழிமுறைகள்.

(ண) அங்கத்துவமற்றவர்களுக்கு விதிக்கப்படும் சேவை எல்லைகள்.

(த) உதவி செய்தல், இணைந்த பணிகள் போன்றவைகளுக்கான நிபந்தனைகள்.

(ந) சங்கத்தை அல்லது யூனியனை கலைப்பதற்கான வழிமுறைகள்.

(ப) சங்கத்தின் அல்லது யூனியனின் தேவைகள் மற்றும் செயற்பாடுகளுக்காக வேறு நெருக்கமான விடயங்கள்.

(ம) சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவை தெரிவுசெய்து நியமிப்பது மற்றும் விலக்கிக்கொள்வது மற்றும் இரத்துச்செய்யப்படுவது போன்றவைகளுக்கான நிபந்தனைகள்

*பதிவு செய்யப்படும் சாட்சிகள்.*

10. (1) பதிவாளரால் கையொப்பமிட்ட பதிவுசெய்யும் அத்தாட்சிப்பத்திரம், அந்த அத்தாட்சிப்பத்திரத்தில் குறிப்பிட்டுள்ள சங்கத்தில் அல்லது யூனியனில் இரத்துச்செய்யப்பட்டதாக உறுதிப்படுத்தப்பட்டாலொழிய, அந்த சங்கம் அல்லது யூனியன் முறையாக பதிவுசெய்யப்பட்டதாக தீர்மானமான சாட்சியாக வேண்டும்.

(2) சங்கம் அல்லது யூனியன் பதிவுசெய்யப்பட்டதும் விதியில் உத்தரவிட்டதுபோல் பதிவாளர் அந்த சங்கத்தை அல்லது யூனியனை பதிவுசெய்வதற்கான அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்பட வேண்டும்.

*சங்கத்தின் மற்றும் யூனியனின் உப விதிகளில் திருத்தங்களைச் செய்தல்.*

11. (1) பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியனில் இந்த நியதிச்சட்டத்திற்கு மற்றும் அதனடிப்படையில் அமைத்த விதிகளின் அடிப்படையில் ஒரு சங்கத்தின் அல்லது யூனியனின் பெயரை வெளியிடும் உபவிதி யாப்புடனான சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதியை திருத்தியமைக்கலாம்.

(2) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியனின் எந்தவொரு உபவிதியின் திருத்தம், இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் பதிவாளரால் பதிவுசெய்யப்பட்டாலொழிய செல்லுபடியாகாது. பதிவுசெய்வதற்காக அதன் திருத்தத்தின் இரண்டு பிரதிகள் பதிவாளருக்கு சமர்ப்பிக்க வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி தொடர்பான எந்தவொரு திருத்தமும் 7 ஆம் பிரிவில் (3) ஆம் உப பிரிவின் (ஆ) ஆவது பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைப்படி அறிக்கையொன்றை சமர்ப்பித்தாலேலொழிய, அந்த திருத்தம் பதிவுசெய்யப்படலாகாது.

(4) உபவிதிகளில் ஏதேனும் திருத்தம் இந்த நியதிச்சட்டத்திற்கு அல்லது அதனடிப்படையில் அமைக்கப்பட்ட விதிக்கு அல்லது அமைக்கப்பட்டுள்ளதென கருதும் விதிக்கு முரண்படாதது என பதிவாளர் திருப்தியடைவாரேயானால் அல்லது குறிப்பிட்ட திருத்தம் பொருத்தமானது என எண்ணுமிடத்து அவரால் அந்த திருத்தத்தை பதிவுசெய்யலாம். ஏதேனும் ஒரு உபவிதி யாப்பின் திருத்தியமைப்பு, பதிவுசெய்வதை பதிவாளர் நிராகரிப்பாரேயானால் அதற்கு எதிராக மேன்முறையீடு, அது தொடர்பாக இந்நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்டுள்ளது என எண்ணும் விதிப்படி அமைச்சரிடம் சமர்ப்பிக்கலாம்.

(5) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியின் பெயரை மாற்றும் திருத்தம் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் அல்லது அங்குள்ள அங்கத்தவரின் அல்லது முன்னாள் அங்கத்தவரின் ஏதேனும் உரிமை அல்லது பிணைப்பு காரணமாக

பாதிப்பை ஏற்படுத்தக் கூடாது. அச்சந்தர்ப்பத்தில் நடைமுறையில் இருக்கும் சட்டவிதிகளின்படி அதன் புதிய பெயரால், அச்சங்கத்தை அல்லது யூனியனை அல்லது சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு எதிராக தொடர்ந்து நடாத்தலாம்.

(6) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் உபவிதி யாப்பின் திருத்தத்தை பதிவாளர் பதிவினை மேற்கொள்ளும் சந்தர்ப்பததில், தன்னால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அந்த திருத்தத்தின் பிரதியொன்றை, அவரால் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு விநியோகிக்கலாம். அந்த திருத்தம் முறையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளது என அந்த திருத்தத்தை அத்தாட்சிப்படுத்திய பிரதி தீர்மானமான சாட்சியாக இருத்தல் வேண்டும்.

(7) இந்த பிரிவின் ''திருத்தம்'' என்பது புதிய உபவிதி யாப்பை அமைப்பது அல்லது உபவிதி யாப்பை மாற்றியமைப்பதும் அல்லது தடை செய்வதும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சங்கத்தின் மற்றும் யூனியனின் உப விதிகளின் மூலம் அங்கத்தவர்கள் இணைந்து கொள்வதாக.

12. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பிலிருந்தும் அவ் உபவிதி யாப்பு பதிவுசெய்த பின், அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் ஒவ்வொரு அங்கத்தவராலும் அந்த உபவிதி யாப்பு கையொப்பமிட்டிருப்பின் மற்றும் அவ்உபவிதி யாப்பின் நிபந்தனைகளை நடைமுறைப்படுத்துவதற்கு ஒவ்வொரு அங்கத்தவரும் கொடுத்த உத்தரவாதம் அந்த உபவிதி யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தால் அதே அளவிற்கு, அந்த சங்கத்துக்கும் அல்லது யூனியனுக்கும் அந்த அங்கத்தவர்கள் கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பில் விளக்கம் தொடர்பாக எழும் முரண்பாட்டை முடிவுக்கு கொண்டுவருவதற்கு பதிவாளரின் கவனத்திற்கு கொண்டுவரப்படல் வேண்டியதுடன், அது தொடர்பாக அவரின் தீர்மானம் இறுதியானதும் மற்றும் தீர்வானதுமாக அமைய வேண்டும். பதிவாளர் தனது முடிவை முப்பது நாட்களுக்குள் சம்பந்தப்பட்டவர்களுக்கு தெரிவித்தல் வேண்டும்.

வியாபாரத்தை தடை செய்யும் உப விதிகளை உருவாக்கும் அதிகாரம்.

13. ஏதேனும் ஒரு விதியில், ஒரு விடயம் சம்பந்தமாக உபவிதி யாப்பொன்றை அமைத்துக்கொள்வதற்கான அதிகாரத்தின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் சம்பந்தமாக அமைக்கப்படும் உபவிதி யாப்பொன்று, அதன் பணியை தடை செய்யும் ஒப்பந்தமாகும் என்ற காரணத்தை நோக்காகக் கொண்டு மாத்திரம் எந்த ஒரு நீதிமன்றத்திலும் கேள்விளை எழுப்புவதைத் தவிர்த்தல் வேண்டும்.

அங்கத்தவர் களிடமிருந்து அபராதம் அறவிடுவதற் கான உப விதி அதிகாரம்.

14. பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் அமைக்கப்பட்ட உபவிதி யாப்பின் மூலம் அந்த கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் உபவிதி மீறும் பட்சத்தில் அந்த அங்கத்தவருக்கு ஒரு அபராதத்தை அறவிடுவதற்கு ஒரு விதியை அமைக்கலாம். அவ்வாறாயின்,-

(அ) கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் அந்த அபராதத்தை அறவிடுவதற்கு தீர்மானித்திருப்பதையும், அதன் காரணத்தையும் அந்த அங்கத்தவர்களுக்கு கடிதம் மூலம் அறிவித்தாலொழிய, அவ்வாறாயின், மற்றும்

(ஆ) விதி மூலமாக உத்தரவிடப்பட்ட காலத்துக்குள் மற்றும் அதில் குறிப்பிட்ட விதத்தில் அந்த அபராதத்தை அறவிடுவதற்கு எதிராக போதுமான காரணத்தை தெரிவிக்க இயலாத பட்சத்திலின்றி, எந்தவொரு அங்கத்தவருக்கும் அந்த அபராதத்தை அறவிடக்கூடாது.

பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் யூனியன்களின் இருப்பை மற்றும் கடன்களை ஒன்றிணைத் தல், பகிர்தல் மற்றும் கையளித்தல்.

15. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமொன்றால் அல்லது யூனியனால் பதிவாளரின் முன் அனுமதியுடன் மற்றும் அந்த கூட்டுறவு சங்கத்தின் அல்லது யூனியன் அல்லது பொதுக்கூட்டத்திற்கு சமுகமளித்து, வாக்களிக்க தகுதியுடைய அங்கத்தவரால் அல்லது பிரதிநிதிகளில் மூன்றில் இரண்டிற்கு மேலான வாக்குகளால் வழிமொழிந்த பிரேரணை மூலம் :-

(அ) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் ஆதனம் அல்லது கடன் முழுமையாக அல்லது அதில் ஒரு பகுதி அல்லது ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட வேறொரு சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு கையளித்தல்.

அல்லது

(ஆ) கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன், கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன்கள் இரண்டு அல்லது அதற்குமேல் பிரித்து வைத்துக்கொள்ளல் போன்றவற்றைச் செய்யலாம்.

(2) ஒரு பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது இரண்டு யூனியன்கள் அல்லது அதற்கு மேலான எண்ணிக்கையிலானவைகளால் பதிவாளரின் முன் அங்கீகாரத்துடன் மற்றும் ஒவ்வொரு சங்கத்தின் அல்லது யூனியனின் அல்லது பொதுக்கூட்டத்திற்கு சமுகமளித்து, வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களிடமிருந்து அல்லது பிரதிநிதிகளிடமிருந்து அல்லது மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் ஆமோதிக்கப்பட்டு எடுக்கும் தீர்மானமொன்றில் ஒன்றிணைந்து புதிய கூட்டுறவுச் சங்கமொன்றை அல்லது யூனியனை அமைத்துக்கொள்ளலாம்.

(3) (அ) பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கமொன்று அல்லது யூனியனால் (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் அல்லது (2) ஆம் உபபிரிவின் அடிப்படையில் ஆமோதிக்கப்பட்ட பிரேரணையில் சந்தர்ப்பத்திற்கேற்ப கைளித்தல், பிரித்து ஒதுக்கிக்கொள்ளல், ஒன்றிணைத்தல் பற்றிய அனைத்து விபரங்களும் உள்ளடக்கப்பட வேண்டும். இந்த பிரேரணைகளில்

உள்ளக்கப்பட்டுள்ள விபரங்களின் தற்போதைய நிலைக்காக மற்றும் பதிவாளரால் நியமிக்கப்படும் கமிட்டியின் மூலம் ஆய்வுசெய்து, கமிட்டியின் சிபாரிசை அவருக்கு வழங்கி, பொதுச்சபையின் சம்பந்தத்துடன் அவரின் அங்கீகாரத்துடன் செயற்படுத்த வேண்டும்.

(ஆ) (i) உத்தேச கையளித்தல், பிரித்து கொடுத்தல் அல்லது ஒன்றிணைக்கும் பொருளாதார தகுதி தொடர்பாக பதிவாளரால் நியமிக்கப்படும் ஒருவரின் அல்லது நிறுவனத்தின் அல்லது பரிந்துரை செய்யும் அறிக்கை பெற்றிருக்காவிட்டால்,

(ii) பதிவுசெய்த சங்கம் அல்லது யூனியன் சந்தர்ப்பத்திற்கேற்ப பிரிக்கப்பட்டிருந்தால் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது ஒன்றிணைந்து இருப்பது சங்கத்துடனா அல்லது யூனியனுடனா அல்லது சங்கத்தில் அல்லது யூனியனில் அல்லது உபவிதி நியதிச்சட்டத்தில் அல்லது அதனடிப்படையில் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்டுள்ளதாக எண்ணப்படும் ஏதோ ஒரு விதியின் அல்லது நிபந்தனைக்கு பொறுப்பானது என பிரசுரிக்கப்படும் அறிக்கை 3 ஆம் உப பிரிவில் (அ) (1) உப பந்தியில் உத்தேச பணிக்காக ஒருவரிடம் அல்லது ஒரு நிறுவனத்தில் பெற்றுக்கொள்ளவில்லையென்றால், தங்களின் இருப்பு மற்றும் கடனை இன்னொரு பதிவுசெய்த சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு கையளிப்பதற்கு அல்லது அந்த சங்கம் அல்லது யூனியன் அல்லது சங்கங்கள் அல்லது யூனியன்கள் இரண்டுக்கு மேலாகப் பிரிப்பதற்கு அல்லது வேறு பதிவுசெய்த சங்கம் அல்லது யூனியனுடன் ஒன்றிணைய பதிவாளர் அனுமதி வழங்கக் கூடாது.

(4) பதிவுசெய்த சங்கம் அல்லது யூனியன் அவ்வாறான பிரேரணையை ஆமோதிக்கும் சந்தர்ப்பத்தில், அந்த சங்கம் அல்லது யூனியன் அல்லது சங்கத்தின் தனது அங்கத்தவர்கள் மற்றும் கடன்காரர்கள் அறிந்துகொள்வதற்காக பொது அறிவித்தல் விடுக்கப்படுவதுடன், முரண்பாடான உபவிதி அல்லது ஒப்பந்தம் உள்ளதா, அதனைப் பொருட்படுத்தாது எவரேனும் ஒரு அங்கத்தவர் அல்லது கடன்காரர் அல்லது அந்த அறிவித்தலின்பின் ஒருமாத காலத்தில் சந்தர்ப்பத்திற்கேற்பவாறு தனது பங்குகளை, வைப்பு அல்லது கடனை மீளப்பெற்றுக்கொள்ளும் அதிகாரம் அந்த அங்கத்தவர்களுக்கு அல்லது கடன்காரர்களுக்கு இருக்கவேண்டும்.

(5) (4) ஆம் உபபிரிவில் உறுதியாக குறிப்பிட்டுள்ள கால எல்லைக்குள் தான் விலக்கிக்கொள்ளும் அதிகாரத்தை செயற்படுத்தாத ஒரு அங்கத்தவர் அல்லது கடன்காரர் பிரேரணைக்கு சம்மதம் தெரிவித்ததாக கருதப்பட வேண்டும்.

(6) பதிவுசெய்த சங்கம் அல்லது யூனியனால் இந்த பிரிவின் அடிப்படையில் ஆமோதிக்கப்படும் பிரேரணைக்கு ஏதேனும் இறுப்பு அல்லது கடனை கைளிக்கப்படும் வேளையில், அச்சந்தர்ப்பத்தில் இருக்கும் ஒரு சட்டத்திற்கு முரணாக என்ன குறிப்பிடப்பட்டுள்ளதோ, அதைப் பொருட்படுத்தாது அங்கு ஆமோதிக்கப்பட்ட பிரேரணை மேலும் உறுதிப்படுத்தாமல் கையளிக்கப்பட்டவரிடம் அந்த இறுப்பு அல்லது கடனை அவருக்கு உரியதாக்குவதற்குப் போதுமான கையளிப்பாக கருத்தில் கொள்ளல் வேண்டும்.

சிலவேளைகளில் பதிவு செய்யப்பட்ட சங்கங்களின் மற்றும் யூனியன்களின் பதிவு செய்யப் படும் சான்றிதழ்களை இரத்துச் செய்தல்.

16. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் அல்லது இருப்பு மற்றும் கடன் அனைத்தும் பதிவுசெய்யப்பட்ட வேறு கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு இந்நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அனுகூலமாக கையளித்த சந்தர்ப்பத்தில், முன்னர் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவுகள் இரத்துச்செய்யப்பட வேண்டும். அத்துடன் அந்த கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் கலைக்கப்பட்டுள்ளது என்றவகையில் கருதப்பட வேண்டும் என்பதுபோல் கூட்டுத்தாபனமாக இருப்பதே இறுதியானது.

(2) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அல்லது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட எண்ணிக்கையான இந்த நியதிச்சட்டத்தில் நிபனந்தனைகளுக்கேற்ப புதிய சங்கம் அல்லது யூனியனாக ஒன்றிணைந்த சந்தர்ப்பத்தில் அவ்வாறு ஒன்றிணைக்கப்பட்ட ஒவ்வொரு கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவுசெய்யப்படும் புதிய சங்கம் அல்லது யூனியன் பதிவுசெய்யப்பட்ட தினமே இரத்தாக வேண்டும், ஒவ்வொரு சங்கம் அல்லது யூனியன் கலைக்கப்பட்டதாக கருதப்பட வேண்டும் என்பதுபோல் கூட்டுத்தாபனமாக செயற்படுவதும் நிறைவுபெற வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் அல்லது இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அனுகூலமாக இரண்டு சங்கங்கள் அல்லது யூனியன்கள் இரண்டிற்கும் மேலாக பிரிந்து செல்லும் வேளையில், அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவுசெய்யும் புதிய சங்கங்கள் அல்லது யூனியன்கள் பதிவின்பின் இரத்தாக வேண்டும் என்பதுடன், அந்தச் சங்கம் அல்லது யூனியன் கலைக்கப்பட்டதொன்றாக கருதப்படுவதுடன் கூட்டுத்தாபனமாக செயற்படுவதும் நிறைவுபெற வேண்டும்.

செலுத்த வேண்டிய கொடுப்பனவுகளை செலுத்தும் வரை அங்கத்தவர்களின் உரிமைகளை பாவிக்கக் கூடாது என்பது பற்றி.

17. (1) (அ) கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்தவர் தொடர்பான விதிகளில் அல்லது உபவிதி யாப்பில் விதிக்கக்கூடிய கொடுப்பனவை தான் செலுத்தியிருத்தலே தவிர அல்லது செலுத்தும்வரை, இல்லாவிடின் சங்கத்தில் அல்லது யூனியனில் அவ்வாறு நிர்ணயிக்கக்கூடிய ஏதேனும் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டாலொழிய அல்லது ஏற்படுத்திக்கொள்ளும்வரை பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அல்லது எந்தவொரு அங்கத்தவராலும் அங்கத்தவரின் உரிமையைப் பாவிக்கக்கூடாது.

(ஆ) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்களின் பொறுப்புகள் வரையறுக்கப்படும் வேளையில், பதிவுசெய்யப்படாத எந்தவொரு சங்கத்தின் அங்கத்தவராலும் சங்கத்தின் அல்லது யூனியனின் பங்கு, விதி மூலம் நிர்ணயித்தவாறு, ஆகக்கூடியது ஐந்தில் ஒன்று வீதத்தில் அமையவேண்டும்.

(2) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனுக்கு (1) ஆம் உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் கொடுப்பனவை செலுத்தாது அல்லது அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் அல்லது அந்த உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் ஒரு தொடர்பைப் பெற்றுக்கொள்ளாத சந்தர்ப்பத்தில் அந்த உறுப்பினரிடமிருந்து (1) ஆம் உப பிரிவில் குறிப்பிட்டுள்ள அந்த கொடுப்பனவு அல்லது அந்த தொடர்பு சட்டபூர்வமான சபை தொடர்பாக அறவிடப்படவேண்டிய தொகை அல்லது வேறு மற்ற பிரதிநிதியாக ஏதேனும் அட்டவணைப்படுத்தப்பட்ட விவசாய உற்பத்தியைக் கொள்வனவு செய்தல் தொடர்பாக அங்கத்தவருக்கு சங்கத்திலிருந்து அல்லது யூனியனிலிருந்து செலுத்தவேண்டிய ஏதாவது பணத்தில் சங்கம் கழித்துக்கொள்வது சட்டபூர்வமானதாக இருத்தல் வேண்டும்.

(3) (அ) அங்கத்தவர் மூலம் ஏதேனும் பங்கை கொள்வனவு செய்வதற்கு சங்கம் அல்லது யூனியன் பங்கின் பெறுமதியை ஒரே வேளையில் செலுத்தவேண்டும். சங்கம் அல்லது யூனியன் அல்லது உபவிதி யாப்பில் நிர்ணயிக்கப்பட்டவாறு அங்கத்தவரினால் பெறப்படவேண்டிய பங்குகளின் அளவு ஒன்றுக்கு மேற்படும்போது அந்த மேலதிக பங்குகளின் பெறுமதியை ஒரு வருடத்திற்குள் செலுத்தவேண்டும்.

(ஆ) அவ்வாறு வருடத்திற்குள் பெறப்படவேண்டிய ஆகக்குறைந்த பங்குகளுக்கு முழுமையாக பணம் செலுத்தாதவரின் அங்கத்துவம் தானாகவே பறிபோவதுடன், அவ்வாறான சந்தர்ப்பத்தில் செலுத்திய பங்குகளின் தவணைகளுக்கு அவருக்கு உரிமைகோர இயலாது இருத்தல் வேண்டும்.

(இ) அத்துடன் இந்த நியதிச்சட்டம் செயற்படும் தினம் ஒரு பங்குக்கு பணம் செலுத்தி முடிக்காத அங்கத்தவர்கள் அன்றைய தினத்திலிருந்து 12 மாதத்திற்குள் தனது பங்குகளுக்கான பணத்தைச் செலுத்தி இருத்தல் வேண்டும். அவ்வாறு செய்யாவிடின் அதன் காரணமாகவே அவரின் அங்கத்துவம் தானாகவே பறிபோக வேண்டும்.

செயற்குழு அங்கத்தவர்களுக்கான தகுதியின்மைகள்.

18. (1) கீழ்க்காணும் நபர்கள் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் அல்லது செயற்குழுவுக்கு அல்லது மாவட்ட அல்லது பிரதேச செயற்குழுவுக்கு தெரிவுசெய்ய இயலாது :-

(அ) கீழே 18(4) பந்தியின் நிபந்தனைகளின் அடிப்படையில் பதினெட்டு வயதுக்கு குறைந்தவர்கள்.

(ஆ) இலங்கையில் அல்லது வேறு ஒரு நாட்டில் நடைமுறையில் இருக்கும் ஒரு சட்டத்தின் அடிப்படையில் கடன் தீர்க்க வகையில்லாத நிலையில் அல்லது பொருட் சேதத்திற்கு உட்பட்ட ஒருவர் என அறிவிக்கப்பட்டு அந்த கடன் தீர்க்க வகையில்லாத ஒருவர் அல்லது பொருட்சேதத்திற்குட்பட்டவர் என்ற அறிவித்தலிலிருந்து விடுபடாத ஒரு நபராக இருந்தால்.

(இ) சுயநினைவற்ற ஒருவர்.

(ஈ) கடந்த மூன்று வருடத்துக்குள் துர்நடத்தை தொடர்பாக வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் அல்லது மூன்று மாதம் அல்லது அதற்கு மேலான காலம் சிறைத்தண்டனை அனுபவித்தவர்.

(உ) சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது வேறு பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது முடிவடைந்த ஒருவருக்கு செலுத்தவேண்டிய தொகையை, மூன்று மாதத்திற்கு மேல் செலுத்தாத ஒருவர் அல்லது ஒரு சங்கததிற்கு அல்லது யூனியனுக்கு அல்லது வேறு சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது வேறு முடிவடைந்த ஒருவருக்கு செலுத்தவேண்டிய பணத்தைச் செலுத்தாதவர்.

(ஊ) கூட்டுறவுச் சங்கத்துடன் அல்லது யூனியனுடன் ஏற்படுத்திக்கொள்ளும் உடன்பாடு அல்லது சங்கத்தின் அல்லது யூனியனுடான ஏதேனும் விற்பனை அல்லது கொள்வனவு அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் நிதி தொடர்பாக அவ்வேளையில் ஏற்படுத்திக்கொண்டதும், ஏற்படுத்திக்கொள்வதற்கு நிபந்தனைகளை அமைத்துக்கொண்டு போகிறவரும், ஒப்பந்தம் அல்லது கொடுக்கல் வாங்கல் தொடர்பாக ஒரு அங்கத்தவர் அல்லது ஒரு ஊழியராக அல்லாமல் தானாகவே அல்லது வேறு ஒருவர் மூலமாகவோ தொடர்புள்ள ஒருவர்.

(எ) சங்கத்தின் அல்லது யூனியனின் அபிவிருத்திக்கு இடையூறாகலாம் என பதிவாளர் தீர்மானிக்கும் ஒரு வியாபாரத்தில் அல்லது வேறொரு விடயத்திற்கு தானாகவோ அல்லது வேறொருவர் மூலமாகவோ ஈடுபட்டுள்ள ஒருவர்.

(ஏ) சங்கத்தில் அல்லது யூனியனில் அல்லது சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்துவம்பெற்ற வேறொரு சங்கத்தில் அல்லது யூனியனில் சம்பளம் பெறும் ஊழியர்,

(ஐ) ஏதேனும் ஒரு சங்கத்தினால் நிதி அல்லது பொருள் நஷ்டம் அல்லது வேறு ஏதேனும் சேதம் அல்லது நஷ்டம் ஏற்படுவதற்கு காரணியான முடிவெடுப்பதற்கு இணைந்துகொண்டவர் என பதிவாளர் முடிவுசெய்த ஒருவர்.

(ஒ) கூட்டுறவுச் சங்க பதிவாளர் வழங்கிய ஒரு பொது உத்தரவை அல்லது ஒரு முடிவை அல்லது ஒரு தீர்மானத்தின்படி செயற்படுத்துவதை தவிர்த்த அல்லது செயற்படுத்தாத செயற்படுத்துவதற்கு பின்வாங்கிய ஒருவர்.

(ஓ) இந்த நியதிச்சட்டத்தின்படி அல்லது அதனடிப்படையில் விதிக்கப்படும் விதிகளில் அல்லது உத்தரவுகளின் அல்லது உபவிதி யாப்பில் அல்லது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு சட்டதிட்டங்களில் அல்லது நிபந்தனைகளில் அடிப்படையிலான சங்கத்தின் அல்லது யூனியனின் பதவியிலிருந்து அல்லது சேவையிலிருந்து நீக்கப்பட்ட ஒருவர்.

(ஔ) சங்கத்தின் அல்லது யூனியனில் அல்லது பிரதேச செயற்குழுவிற்கு அல்லது செயற்குழுவிற்கு தெரிவுசெய்து நியமிக்கப்பட்ட ஒருவர் அவ்வாறு தெரிவுசெய்து நியமித்தலை பொறுத்தமற்றது அல்ல என பொய் வாக்குமூலம் அளித்த ஒருவர்.

(ஃ) சங்கத்தில் அல்லது யூனியனில் கடந்த மூன்று வருடத்துக்குள் பெற்றுக்கொண்ட கடன் மூன்று மாதத்திற்கு மேலாக காலத்தைக் கடத்தும் காரணத்தினால் செயற்குழுவிலிருந்து அல்லது பணிப்பாளர் பதவியிலிருந்து விலக்கப்பட்ட ஒருவர்.

(2) பாராளுமன்றத்தில், மாகாண சபையில், மாநகர சபையில், நகர சபையில் அல்லது பிரதேச சபையில் உறுப்பினர் அல்லது உறுப்பினராக இருக்கும் எவரேனும் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் செயற்குழு உறுப்பினராக தெரிவுசெய்யப்படுவதற்கு அல்லது அப்பதவியில் தொடர்ந்து பதவி வகிப்பதற்கு பொருத்தமற்றவர்.

(3) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனில் செயற்குழுவிற்கு அல்லது மாவட்ட செயற்குழுவிற்கு அல்லது பிரதேச செயற்குழுவிற்கு தெரிவுசெய்யப்பட்ட அங்கத்தவர் பதவி கீழ்க்காணும் காரணங்களினால் அந்த காரணங்களினாலேயே இல்லாமல் போகும் :-

(அ) கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்துவம் இல்லாமல் போகுதல்.

(ஆ) இந்த பிரிவில் (1) ஆம் உப பிரிவில் (அ) இல் இருந்து (க) வரையிலான தகைமையின்மை தோன்றுதல்.

(இ) கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் உபவிதி யாப்புக்கு அனுகூலமாக செயற்குழுவில் அல்லது மாவட்ட செயற்குழுவில் அல்லது பிரதேச செயற்குழுவில் அங்கத்தவராவதற்கான தகைமை இல்லாமல் போகுதல்.

(4) பகுதி செய்த கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்தவர்கள் நெசவுத் தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்கள் அல்லது பாடசாலை மாணவர்கள் அல்லது அவ்வாறான பதிவாளரால் தெரிவுசெய்யப்பட்ட, சங்கத்தின் அல்லது யூனியனில் அங்கத்தவர்கள் 18 வயதுக்குக் கீழ்ப்பட்டவர்களையும் செயற்குழுவுக்கு தெரிவுசெய்து நியமித்துக்கொள்வதற்கு பொருத்தமாக இருத்தல் வேண்டும்.

(5) அங்கத்துவத்திற்காக இணைத்துக்கொள்ளும் நாளிலிருந்து ஒரு வருடம் முடியும்வரை வாக்களிக்கும் உரிமை அல்லது பதவி வகிக்கும் உரிமை அங்கத்தவர் அனுபவிக்க கிடைக்கக்கூடாது.

(6) கூட்டுறவுச் சங்கத்தை அல்லது யூனியனை புதிதாகப் பதிவுசெய்வதற்கு பதிவாளருக்கு விண்ணப்பிக்கும் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்களுக்காக (5) ஆம் உப பிரிவின் நிபந்தனையின் அதிகாரத்தை செயற்படுத்தக் கூடாது.

(7) கூட்டுறவுச் சங்க பதிவாளர் இந்த நியதிச் சட்டத்தின் 56 அல்லது 58 ஆம் பிரிவின் அடிப்படையில் நியமிக்கப்பட்டாலொழிய ஊவா மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அல்லது ஊவா மாகாண கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவில் பணிபுரியும் எவரும் தேர்தலில் பதிவுசெய்த சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவுக்கு அல்லது மாவட்ட அல்லது பிரதேச செயற்குழுவுக்கு தெரிவுசெய்யக் கூடாது.

(8) எவ்வாறாயினும் அரச அல்லது மாகாண அரச சேவை அதிகாரிகளினால் அமைத்துக்கொள்ளும் அந்த அதிகாரிகளுக்கு மாத்திரம் மட்டுப்படுத்தப்பட்ட நிறுவனத்தின் அல்லது வேறு சில நிறுவனங்களுடன் இணைந்த சங்கத்தின் அல்லது யூனியனுக்கு செயற்குழுவை தெரிவுசெய்யும்போது மேலே (7) ஆம் உப பிரிவில் சேர்த்துக்கொள்ளக் கூடாது.

இணைந்த அங்கத்தவர்கள்.

19. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் உபவிதி யாப்பிற்கு அனுகூலமாக தன் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக உடன்பாட்டுக்கு வரும் எந்தவொரு நபரையும் அங்கத்தவராக உள்ளடக்கப்படலாம்.

(2) இணைந்த அங்கத்துவத்துக்கு கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் இருப்பு அல்லது இலாபத்தின் எந்தவொரு பகுதிக்கும் அல்லது அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஏதேனும் வாக்குப்பலத்தைப் பிரயோகிக்க அல்லது பதவி வகிக்கும் உரிமை கிடைக்கக்கூடாது.

(3) இந்தப் பிரிவின் நிபந்தனைகளுக்குப் புறம்பாக இணைந்த அங்கத்தவருக்கு சங்கத்திலோ அல்லது யூனியனிலோ உபவிதி யாப்பில் உறுதியாக குறிப்பிடக்கூடிய, அங்கத்தவரின் சலுகைக்கு மற்றும் உரிமைகளுக்கு உரித்தாவர் என்பதுடன் அங்கத்தவரின் பொறுப்புகளுக்கு உட்பட்டவராவார்.

(4) இணைந்த அங்கத்தவர் தொடர்பான நிபந்தனைகள் அந்தந்த சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பில் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

பராயமடையாத அங்கத்தவர்கள் சங்கத்துடன் அல்லது யூனியனுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள்.

20. ஏதேனும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவராக இயல்பாகவே உள்ளடக்கப்பட்ட ஒருவரின் இளம் வயது அல்லது அவர் சரியான வயதெல்லைக்கு வராமை இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அல்லது இந்த நியதிச்சட்டத்தில் அமைக்கப்பட்ட அல்லது அமைக்கப்பட்டிருக்கிறது எனக் கருதப்படுகிற விதியின் அடிப்படையில் அவரால் எழுதி கையொப்பமிடுவது, தேவையான சட்டபூர்வமான ஆவணம் ஒன்றை எழுதி கையொப்பமிடுவதற்கு அல்லது கொடுப்பதற்கான சுதந்திரத்தை வழங்க அவருக்கு தடங்கலாக இருக்கக்கூடாது. மேலும் அவ்வாறான ஒருவரால் சங்கத்துடன் அல்லது யூனியனுடன் ஏற்படுத்திக்கொண்ட ஒப்பந்தத்தை இரத்துச்செய்வதற்கு அல்லது தவிர்த்துக்கொள்வதற்காக அவ்விடயம் காரணமாக இருக்கக் கூடாது. அத்துடன் அவ்வாறான ஒருவரால் முக்கிய கட்சியினர் பிணையாளராக சங்கத்துடன் அல்லது யூனியனுடன் ஏற்படுத்தகிகொண்ட அவ்வாறான ஒப்பந்தமொன்று, அவரின் குறைந்த வயதை அல்லது சரியான வயதிற்கு வராததை பொருட்படுத்தாது, அவரால் அந்த நபருக்கு எதிராக சட்டப்படி செயற்படக்கூடியதாக இருக்க வேண்டும்.

அதிகாரிகள் சங்கத்துடன் அல்லது யூனியனுடன் செய்து கொள்ளும் ஒப்பந்தங்கள்.

21. பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் ஒரு அதிகாரியை நியமிக்கும்போது ஏதேனும் குறை அல்லது அவரைத் தெரிவுசெய்வதில் ஏதாவது பொருத்தமற்ற தன்மை பின்னால் அறிந்துகொள்ளல், அந்த சங்கத்திற்காக அவ் அதிகாரியால் ஏற்படுத்திக்கொள்ளும் ஏதேனும் உடன்பாட்டை இரத்துச்செய்வதற்கோ அல்லது தவிர்த்துக்கொள்வதற்கோ காரணியாக இருக்கக்கூடாது.

அங்கத்தவர் களின் வாக்குகள்.

22. ஒரு ஆரம்ப கூட்டுறவு சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவருக்கு சங்கத்தின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஒரு வாக்குக்கு மேல் இருக்கக் கூடாது. அவ்வாறாயின் வாக்குகள் சமமாகப் பிரியும் சந்தர்ப்பத்தில் தலைவருக்கு தீர்மானமான வாக்கொன்று இருக்கவேண்டும்.

வாக்களிக்கும் விதம்.

23. (1) ஒரு ஆரம்ப கூட்டுறவு சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்தவர் அந்த சங்கத்துக் கூட்டத்தில் தனிப்பட்ட ரீதியில் தனது வாக்கைப் பாவிக்க இயலாது. அவ்வாறாயின் பிரதிநிதிகள் ஊடாக வாக்களிக்க சங்கத்தின் அல்லது யூனியனில் உபவிதி யாப்பின் அடிப்படையில் நிபந்தனைகள் ஏற்படுத்தியுள்ள வேளையில் சங்கத்தின் அல்லது யூனியனின் ஒரு கூட்டத்தில் அவ்வாறு வாக்களிக்கலாம்.

(2) வேறொரு பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்தவரான ஒரு சங்கத்தால் அல்லது யூனியனினால் அங்கு வேறொரு சங்கத்தின் அல்லது யூனியனின் பணிகளை முன்னெடுத்துச் செல்வதற்காக, தனது சங்கத்தின் அல்லது யூனியனின் தலைவர் அல்லது செயற்குழுவின் பெரும்பான்மையினரின் சம்மதத்துடன் செயற்குழு அங்கத்தவரை நியமிக்கலாம்.

பங்குகள் அல்லது தொடர்பை இருப்பது பற்றிய எல்லை.

24. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்தவரின் அல்லது முன்னால் அங்கத்தவரின் அல்லது இறந்துபோன அங்கத்தவரின் முதலீட்டு பங்கு அல்லது வேறு தொடர்பில் கையளித்தல் மற்றும் உரிமையாக்கிக்கொள்ளக்கூடிய ஆகக்கூடுதலான அளவு தொடர்பாக இந்த நியதிச்சட்டத்தில் அல்லது விதியின் மூலம் உத்தரவிடக்கூடிய நிபந்தனைகளுக்கு உட்பட வேண்டும்.

(2) வரையறையற்ற பொறுப்புகளுடனான பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் தொடர்புபடும்போது எந்தவொரு அங்கத்தவராலும் :-

(அ) தான் ஒரு பங்கை அல்லது தொடர்பை ஒரு வருடத்திற்கு குறையாத காலம் வகித்தாரேயானால் மற்றும்

(ஆ) சங்கத்திற்கு அல்லது சங்கத்தின் அங்கத்தவருக்கு அல்லது அங்கத்துவத்திற்காக விண்ணப்பப்படிவத்தை, செயற்குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டவருக்கு வழங்கப்படுமேயானாலொழிய, தன்னால் சங்கத்தின் மூலதனத்தில் ஒரு பகுதியை அல்லது தொடர்பை அல்லது அதன் ஒரு பங்கை எவருக்கும் வழங்கக் கூடாது.

(3) செயற்குழுவிற்கு அல்லது பொதுச்சபைக்காகச் சமர்ப்பிக்கப்படும் நம்பிக்கையில்லா பிரேரணைகளின்போது இரகசிய வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும்.

## III ஆம் அத்தியாயம்

### பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களில் மற்றும் யூனியன்களின் உரிமை, சம்பந்தம் மற்றும் சலுகை

*சங்கத்தின் அல்லது யூனியனின் முகவரி.*

25. அறிவித்தல் மற்றும் கடிதம் அனுப்புவதற்கு விதிப்படி பதிவுசெய்யப்பட்ட விலாசமொன்று அனைத்து பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கும் அல்லது யூனியனுக்கும் இருத்தல் வேண்டும். அந்த விலாசத்தில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்ட பின் ஏழு நாட்களுக்குள் அந்த மாற்றத்தை பதிவாளருக்கு அறிவிக்க வேண்டும்.

*நியதிச் சட்டம், விதிகள், உப விதிகள், செயற் குழு நிபந்தனைகள் போன்றவைகளின் பிரதிகளை பார்வையிடுவதற்கு வெளிப்படையாக வைக்க வேண்டும் என்பது பற்றி.*

26. பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் மூலம், இந்த நியதிச்சட்டத்தின் மற்றும் விதி மற்றும் சங்கத்தின் அல்லது யூனியனில் உபவிதி யாப்பினதும் செயற்குழு கட்டளையின் பிரதியையும், சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்களின் பெயர் விபரங்களுடனான பட்டியலுடன், கட்டணம் செலுத்தாத அனைத்து நியாயமான வேலைகளையும் பரீட்சித்துப் பார்ப்பதற்காக சங்கத்தினை அல்லது யூனியனை பதிசெய்த விலாசத்தில் வைத்தல் வேண்டும்.

*சங்கங்கள் அல்லது யூனியன்கள் கூட்டுத்தாபனமாக இருக்க வேண்டும் என்பது பற்றி.*

27. ஒரு சங்கம் அல்லது யூனியன் பதிவுசெய்வதை காரணமாகக் கொண்டு அந்த பதிவுசெய்த பெயரின் அடிப்படையில், நிரந்தரமாக்க தொடர்ந்து இருக்கும் பரம்பரையினர் மற்றும் பொது முத்திரையுடைய மற்றும் சொத்துக்களைக் கொண்டு இருப்பதும், ஒப்பந்தத்தில் உள்ளடக்கப்படுவதும், வழக்கு மற்றும் வேறு சட்ட செயற்பாடுகளைக் கையளித்தல் மற்றும் அவைகள் தொடர்பாக நிலைப்படுத்தக்கூடிய விளக்கம் கூறுதலும் சங்கம் அல்லது யூனியன் அமைக்கும் விடயங்களுக்கு தேவையான அனைத்தும் செய்யக்கூடிய அதிகாரமுள்ள கூட்டுத்தாபனமாக இருத்தல் வேண்டும்.

*சங்கங்கள், யூனியன்கள் மூலமாக அல்லது யூனியன்கள், சங்கங்கள் பொருட்களை விற்பனை செய்தல்.*

28. (1) விவசாயம் மற்றும் கால்நடைகள் வளர்த்தலுக்கான பொருட்கள் அல்லது தொழிற்சாலையில் உற்பத்தி செய்த வகைகளை விற்பனை செய்யும் ஒரே நோக்கத்துடன் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால்,-

(அ) அவ்வாறு ஏதேனும் ஒரு பொருள் உற்பத்தி செய்யும் சங்கத்தின் அல்லது யூனியனின் அனைத்து அங்கத்தவர்கள் மூலம் அப்பொருள் முழுமையாக அல்லது அங்கு ஒரு குறிப்பிட்ட பகுதி, விகிதம் அல்லது வர்க்கம் அந்த சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது சங்கத்தின் அல்லது யூனியனூடாக விற்பனை செய்ய வேண்டுமென மற்றும்,

(ஆ) உபவிதி யாப்பு மற்றும் ஒப்பந்தத்தை மீறும் குற்றத்திற்கு குற்றவாளியாக விதி மூலம் நிர்ணயிக்கக்கூடிய விதத்தில் நிரூபிக்கப்பட்ட அல்லது முடிவு செய்யப்பட்ட அங்கத்தவராகுவதன் மூலம் விதியின் அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பின் மூலம் நிர்ணயிக்கக்கூடிய ஏதேனும் விதத்தில் நிர்ணயிக்கப்பட்ட அல்லது மதிப்பீடு செய்யப்பட்ட பணத்தைக் குறிப்பிட்ட நஷ்டமாக சங்கத்திற்குச் செலுத்தப்பட வேண்டுமென, சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்புகளில் நிபந்தனைகளை அமைப்பதற்கும் அல்லது அதன் அங்கத்தவர்களுடன் ஒப்பந்தத்திற்கு வரவும் முடியும்.

(2) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியனினால் (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தில் அந்த ஒப்பந்தத்திற்கு தொடர்புடைய உற்பத்தி அல்லது உற்பத்தி செய்வதற்கு அதனூடான அனைத்துப் பொருட்களையும் பற்றி சங்கத்தின் அல்லது யூனியனின் அனுகூலம் முதன்மையானதாக இருக்க வேண்டும்.

(3) (1) ஆம் பிரிவின் அடிப்படையில் செயற்படும் ஒப்பந்தத்தில் தோன்றும் ஏதேனும் சட்ட செயற்பாடுகளில் அது வியாபாரத்தடையான ஒப்பந்தம் என நியாயப்படுத்தக்கூடாது.

(4) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனின் அங்கத்தவர் அந்த சங்கத்தில் அல்லது யூனியனின் அங்கத்தவராக முன் தனது பொருட்களை வேறு ஒருவருக்கு கொடுப்பதற்கு உடன்பட்டு இருப்பதன் காரணத்தினால் அந்தப் பொருட்கள் பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு கொடுக்க அவரால் முடியாமல் போனால் அந்த உற்பத்தியை சங்கத்திற்கோ அல்லது யூனியனுக்கோ கொடுப்பதை தனக்கு உத்தரவிடும் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் ஏதேனும் உபவிதி யாப்பொன்றுக்கு அங்கத்தவரால் மீறப்பட்டதாக கவனத்தில் கொள்ளக்கூடாது.

(5) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தின் அல்லது யூனியனில் அங்கத்துவத்திற்காக விண்ணப்பிக்கும் ஒவ்வொருவரும் ஒரு பொருளை வேறு ஒருவருக்கு கையளிப்பதற்கு தான் ஏற்படுத்திக்கொண்டதன் உடன்பாடு தொடர்பான விபரத்தை தன் விண்ணப்பப்பத்திரத்தில் வெளியிடும்படி சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவால் உத்தரவிடப்பட்டால் அவ்வாறு செய்யவேண்டும்.

மூலப்பொருட்கள் உற்பத்தி மற்றும் கால்நடைகள் சங்கத்தின் அல்லது யூனியனின் உரிமை.

29. கடன்காரனின் சொத்துக்கள் தொடர்பாக அரசின் முக்கியத்துவ உரிமைக்கும் மற்றும் கூலி அல்லது கூலியாக அறவிடக்கூடிய ஏதேனும் நிதி தொடர்பாக காணி உரிமையாளரின் அர்ப்பணிப்பு உரிமைக்கு அல்லது உரிமை கோருவதற்கு மற்றும் அசையா சொத்து தொடர்பாக அதில் முன்னர் பதிவுசெய்யப்பட்ட ஏதேனும் பிணைப்புக்கு உட்பட்டது.

(1) ஒரு அங்கத்தவர் அல்லது முன்னைய அங்கத்தவர் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு செலுத்தவேண்டிய கடனைத் திருப்பிக் கொடுக்காததை பற்றிய வேண்டுகோள் :-

(அ) அந்த உறுப்பினர் அல்லது முன்னாள் அங்கத்தவரால் அந்த கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனில் பெற்ற கடனில் முழுமையாக அல்லது உற்பத்தி செய்த பயிரின் ஒரு பகுதியை அல்லது அவ்வாறு பெற்றுக்கொண்ட வேறு விவசாயப் பொருட்கள் பற்றி முதல் கடப்பாடாக இருத்தல் வேண்டும்.

(ஆ) அந்தக் கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அங்கத்தவரை அல்லது முன்னைய அங்கத்தவருக்கு கொடுக்கப்பட்ட பணத்தில் அல்லது பொருள்களினால் ஒரு விதத்தில் முழுமையாக அல்லது அவரால் கொள்வனவு செய்த அல்லது அவருக்கு விநியோகம் செய்த ஏதேனும் மிருகங்கள், மிருகங்களுக்கான உணவு, மீன்பிடித்தல், விவசாய அல்லது தொழினுட்ப உபகரணங்கள் அல்லது உற்பத்திக்கான மூலப்பொருள் அல்லது தொழிற்சாலை, களஞ்சியம் மற்றும் வியாபார ஸ்தாபனத்துடன் முதல் பிணைப்பு இருக்க வேண்டும்.

(இ) அவ்வாறாயின் இங்கு உள்ளடக்கப்பட்ட எதுவும் அவ்வாறான பயிர்ச்செய்கை அல்லது வேறு விவசாயப் பொருட்கள், கால்நடைகள், கால்நடைக்கான உணவு மற்றும் மீன்பிடித்தொழில் மற்றும் தொழினுட்ப உபகரணங்கள் அல்லது உற்பத்திக்கான மூலப்பொருள் முன்அறிவித்தலின்றி நல்லெண்ணத்துடன் கொள்வனவு செய்யும் கொள்வனவாளரிடம் அல்லது வழங்குபவரின் உரிமைகளைப் பற்றி அதிகாரத்திற்குட்படுத்தக் கூடாது. மேலும்,

(ஈ) சட்டத்திற்குட்பட்ட சபைக்கு எடுத்துக்கொள்பவராக ஏதேனும் அட்டவணைப்படுத்திய விவசாய உற்பத்தியைக் கொள்வனவு செய்வது தொடர்பாக அந்த அங்கத்தவருக்கு கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் மூலம் கிடைக்கக்கூடிய பணம் தொடர்பாக முதலில் பிணைக்க வேண்டும்.

(2) வீட்டுக்கூலி, பங்குக் கடன் தொகை அல்லது கொள்வனவு தொடர்பாக ஒரு உறுப்பினர் அல்லது முன்னாள் உறுப்பினர் வீட்டுச் சபைக்கு செலுத்தவேண்டிய பணத்தை செலுத்தாமல் அல்லது செலுத்தாத கட்டணம் அந்த சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு செலுத்தவேண்டிய வேறு ஏதேனும் உரிமை பணம் சங்கத்தின் அல்லது யூனியனின் அசையா சொத்து பற்றி அவரது தொடர்பு பற்றிய முதல் கடப்பாடாக இருத்தல் வேண்டும்.

அங்கத்தவர்களின் பங்குகள் அல்லது தொடர்புகள் பற்றிய பிணைப்பு மற்றும் கழித்தல்.

30. அங்கத்தவரிடம், முன்னாள் அங்கத்தவரிடம் அல்லது இறந்துபோன அங்கத்தவரின் சொத்தில்,

(அ) அந்த கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு செலுத்தவேண்டிய ஒரு கடன்,

(ஆ) வேறு ஏதேனும் பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு செலுத்தவேண்டிய கடன்,

அல்லது

(இ) ஒரு பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனிலிருந்து முடித்தவருக்கு செலுத்தவேண்டிய பணம், தீர்ப்பதற்காக அந்த அங்கத்தவரின், முன்னாள் அங்கத்தவரின் அல்லது இறந்துபோன அங்கத்தவரின் முதலீட்டில் பங்குகள் அல்லது வேறு தொடர்பு மற்றும் வைப்பு பற்றி, அங்கத்தவருக்கு அல்லது முன்னாள் அங்கத்தவருக்கு அல்லது, இறந்துபோன அங்கத்தவரின் சொத்துக்காக செலுத்தவேண்டிய ஏதேனும் ஆதாயம், ஊக்குவிப்புப் பணம் அல்லது இலாபத்தை நோக்காகக் கொண்டு பதிவுசெய்த சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு பிணைப்பு இருக்க வேண்டும். அங்கத்தவரின் அல்லது முன்னாள் அங்கத்தவரின் அல்லது இறந்துபோன அங்கத்தவரின் சொத்துக்கு வரவுவைக்கும் அல்லது செலுத்தவேண்டிய பணத்தை கழித்துக்கொள்ளல் அல்லது அவ்வாறான கடனை அல்லது பணத்தைக் கொடுப்பதில் அல்லது

செலுத்துவது தொடர்பாக சந்தர்ப்பத்திற்கேற்ப வேறு ஒரு சங்கததிற்கு அல்லது யூனியனுக்கு அல்லது முடித்துக்கொண்டவருக்கு அந்தப் பதிவுசெய்த சங்கம் அல்லது யூனியனால் செய்யலாம்.

*31.* மேலே 30 ஆம் பிரிவின் நிபந்தனை அடிப்படையில் பதிவுசெய்த சங்கத்தின் அல்லது யூனியனின் முதலீட்டு அங்கத்தவரின் பங்கு, பங்களிப்புப் பணம் அல்லது வேறு தொடர்புகள் அந்த அங்கத்தவரால் ஏற்படுத்திக்கொண்ட ஒரு கடன் அல்லது பொறுப்பு தொடர்பான நீதிமன்றத்தின் ஏதேனும் தீர்ப்பு அல்லது கட்டளையின் அடிப்படையில் தடைசெய்வதற்கு அல்லது விற்பதற்கு உட்படக்கூடாது. அவ்வாறு கடனைத் தீர்க்க வழியற்றதாகும்போது நியமிக்கப்படும் உரிமையை ஏற்பவர் சிவில் வழக்கு நிபந்தனைக் கோவையில் "எல்" அத்தியாயத்தின்கீழ் நியமிக்கப்படும் பொறுப்பேற்பவருக்கு அந்தப் பகுதிக்கு, பங்களிப்பு பணத்திற்கு அல்லது வேறு எந்த தொடர்புக்கும் எவ்வித உரிமையும் அல்லது அந்த தொடர்பில் உரிமை கோர எவ்வித உரிமையும் இருத்தல் கூடாது அல்லது அது தொடர்பில் உரிமையை பிரதிநிதித்துவப்படுத்துவற்கு எந்த உரிமையும் இருக்கக் கூடாது.

*பங்குகளுக்கு பங்களித்த பணம் மற்றும் வேறு தொடர்பு களை தடை செய்வதற்கு அல்லது விற்பனை செய்வதற்கு இலக்காகாமை.*

*32.* (1) ஒரு அங்கத்தவர் இறந்தபின் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் இறந்துபோன அங்கத்தவரின் பங்கை அல்லது வேறு தொடர்பை அதற்காகவே அமைக்கப்பட்டுள்ள விதியின்படி தெரிவுசெய்யப்பட்ட நபருக்கு அல்லது பொறுப்பு சம்பந்தமாக அவ்வாறு தெரிவுசெய்வதற்கு எவரும் இல்லை என்றால் இறந்துபோனவரின் சட்டபூர்வமான உரித்துடையவர் அல்லது பிரதிநிதியாக செயற்குழுவிற்கு அறியக்கூடிய வேறு ஒருவருக்கு வழங்கலாம், இல்லாவிடின் நியதி அல்லது உபவிதி யாப்பின்படி நிர்ணயிக்கப்பட்ட அந்த அங்கத்தவரின் பங்கை அல்லது வேறு தொடர்புகளுக்கு பெறுமதிக்குச் சமமான பணத்தைத் தெரிவுசெய்யப்பட்டவருக்கு, உரிமையாளருக்கு அல்லது சட்டபூர்வமான பிரதிநிதிக்குச் செலுத்தலாம் :-

*அங்கத்தவர் இறப்பினால் தொடர்புகளை கைமாறு செய்தல்.*

(அ) அவ்வாறாயின் வரையறையற்ற பொறுப்புகளின் சங்கம் தொடர்புபடும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப தெரிவுசெய்யப்பட்டவர், உரித்துடையவர்களுக்கு அல்லது சட்டபூர்வமான பிரதிநிதியால் இறந்துபோன அங்கத்தவரின் பங்கை அல்லது வேறு தொடர்பின் தொடர்பாக மேல்கூறப்பட்டதுபோல் நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியை சங்கத்தை செலுத்துமாறு கோரலாம்.

(ஆ) வரையறுக்கப்பட்ட பொறுப்புகளிலான ஒரு கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் தொடர்புபடும்போது சங்கம் அல்லது யூனியனால், இறந்துபோன அங்கத்தவரின் பங்கை அல்லது வேறு தொடர்பை சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்துவத்திற்காக விதி மற்றும் உபநிதி யாப்பின்படி தகைமையுடைய, சந்தர்ப்பத்திற்கேற்ப தெரிவுசெய்யப்பட்ட ஒருவர், உரிமையாளர் அல்லது சட்டபூர்வ பிரதிநிதிக்கு அல்லது இறந்துபோனவரின் இறப்பின்பின் ஆறு மாதத்திற்குள் அவரால் கோரப்பட்ட விண்ணப்பத்தில் உறுதியாக குறிப்பிட்டுள்ள அவ்வாறு தகைமையுடைய வேறு ஒருவருக்கு வழங்கலாம்.

(2) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் அந்த சங்கத்தின் அல்லது யூனியனில் இறந்துபோன அங்கத்தவருக்கு செலுத்தவேண்டிய வேறு அனைத்து பணத்தையும் சந்தர்ப்பத்திற்கேற்ப தெரிவுசெய்யப்பட்டவருக்கு, உரித்துடையவருக்கு அல்லது சட்டபூர்வமான பிரதிநிதிக்கு செலுத்தவேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் மூலம் இந்தப் பிரிவின் நிபந்தனைப்படி செய்யப்பட்ட அனைத்துக் கயைளிப்பு மற்றும் பணம் செலுத்தல் வேறு ஒருவரால் சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு சமர்ப்பிக்கப்படும் ஒரு வேண்டுகோளுக்கு எதிராக செல்லுபடியானதாகவும் அதிகாரமுடையதாகவும் இருக்க வேண்டும்.

*33.* (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் பராயமடையாதவர்களிடமிருந்து அல்லது அவர்களின் சேமலாபத்திற்காக வைப்பை பொறுப்பேற்கலாம். அந்த வைப்புக்கு வழங்கக்கூடிய வட்டியை அந்த பராயமடையாதவர்களிடமிருந்து பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் செலுத்துவது சட்டபூர்வமானதாக இருக்க வேண்டும். பராயமடையாதவர்களால் செய்யப்படும் வைப்புக்களுக்கு அதற்கான வட்டியுடன் அந்த பராயமடையாதவருக்கு செலுத்தலாம். மேலும், பராயமடையாதவரின் சேமிப்புடன் சேர்த்து வட்டியுடன் அந்த பராயமடையாதவரின் பயனுக்காக அந்த பராயமடையாதவரின் பாதுகாவலருக்கு செலுத்தலாம்.

*பராயமடை யாதவர்களால் அல்லது அவர்களுக்காக வைப்பிலிடுதல்.*

(2) இந்தப் பிரிவின் அடிப்படையில் வேறொரு கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் பராயமடையாதவர்கள் செலுத்தும் பணத்திற்காக அவரிடமிருந்து பெற்றுக்கொள்ளும பற்றுச்சீட்டு அந்தப் பணம் சம்பந்தமாக அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் பொறுப்புகளை நிறைவேற்றியதாக போதுமான விடுப்பு விடுத்ததாக இருக்க வேண்டும்.

*34.* (1) முன்னால் அங்கத்தவர் அங்கத்தவராக இருக்கும் காலம் முடியும்போது, நடாத்தப்பட்ட பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் கடன் தொடர்பாக அவரின் பிணைப்பு அந்த தினத்திலிருந்து கணக்கெடுக்கப்படும். இது இரண்டுவருட காலப்பகுதியில் தொடர்ந்து நடந்திருக்க வேண்டும்.

(2) அங்கத்தவர் இறந்த நாளிலிருந்து கணக்கெடுக்கப்படும் இரண்டு வருடக் காலப்பகுதியில் அவரின் சொத்து, அவர் இறந்துபோன தினத்தில் இருந்து சங்கத்தின் கடன் தொடர்பாக பிணைப்பு இருக்க வேண்டும்.

*சங்கத்தின், யூனியனின் தொடர்பாக முன்னாள் அங்கத்தவர் மற்றும் இறந்த அங்கத்தவரின் சொத்து இணைந்து இருப்பதாக.*

அங்கத்தவர்களின் இடாப்பு.

35. ஒரு பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் நடாத்தப்படும் ஒரு பெயர் இடாப்பை அல்லது பட்டியலை அங்கு குறிப்பிடப்பட்டுள்ள கீழ்க்காணும் விடயங்களில் ஏதேனும் விபரத்தைப் பற்றிப் பார்க்கும்போதே ஏற்றுக்கொள்ளக்கூடிய சாட்சியாக இருக்க வேண்டும் :-

(அ) அங்கத்தவராக ஒருவரின் பெயர் அந்த இடாப்பில் அல்லது பட்டியலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதி.
(ஆ) அவ்வாறான அங்கத்தவர் தன் அங்கத்துவத்தை நிறுத்திக்கொண்ட தினம்.
(இ) அங்கத்தவரால் தெரிவுசெய்யப்பட்டவரின் பெயர், மற்றது தெரிவுசெய்யப்பட்ட தினம்.

சங்கத்தின். யூனியனின் புத்தகங்கள் மற்றும் ஆவணங்களிலுள்ள குறிப்புகளை உறுதிப் படுத்தல்.

36. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் கொடுக்கல் வாங்கலின்போது முறையாக வைக்கப்பட்டுள்ள புத்தகத்தில் உள்ள ஏதேனும் ஒரு குறிப்பின் பிரதி விதிமூலம் நிர்ணயிக்கக்கூடியது என ஏதோ ஒருவிதத்தில் உறுதிப்படுத்தினால், அந்த குறிப்பு இருந்திருக்கிறது என பார்த்தமாத்திரத்தில் நம்பக்கூடிய சாட்சியாக ஒரு சிவில் குற்றவியல் சட்டதிட்டத்தில் ஏற்றுக்கொள்ள வேண்டும். மேலும் அந்த ஆரம்ப குறிப்பு ஏற்றுக்கொள்ளும் எல்லா சந்தர்ப்பத்திலும் மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு அந்த பிரதியின் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள், கொடுக்கல் வாங்கல் மற்றும் கணக்கைப் பற்றிய சாட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனின் தரப்பினராக அல்லாத ஒருவரின் சட்ட செயற்பாடுகள் (1) ஆம் உப பிரிவின்படி உறுதிப்படுத்தக்கூடிய விடயங்கள் அடங்கிய அந்த சங்கத்தின் அல்லது யூனியனில் புத்தகங்களில் ஒரு புத்தகத்தை சமர்ப்பிக்கும்படி அங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதேனும் விடயங்கள் கொடுக்கல் வாங்கல் அல்லது கணக்கை உறுதிப்படுத்துவதற்கு சாட்சியாக நிற்கும்படி நீதிமன்றத்தால் விசேட காரணத்தைக் கொண்டு அவ்வாறு செய்வதற்கு ஆணை பிறப்பித்தாலேலொழிய, அந்த சங்கத்தில் அல்லது யூனியனில் எந்தவொரு அதிகாரமுள்ளவருக்கும் கட்டாயப்படுத்தக் கூடாது.

சங்கத்தின் அல்லது யூனியனின் அடமானமாக கடன் அட்டைகளை வைப்பிலிடுதல்.

37. தற்சமயம் அதிகாரமுள்ள எழுத்துமூலச் சட்டத்தை அல்லது வேறு சட்டத்தை பொருட்படுத்தாது பதிவுசெய்யாத கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனினால்,

(அ) பொதுக் கணக்கு சமப்படுத்துவதற்கு பிணையாக அந்த சங்கம் அல்லது யூனியனுக்குச் சொந்தமான கடன் பத்திரத்திற்கு உத்தரவாதம் வழங்கலாம்.

மற்றும்

(ஆ) கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் வெளியிடப்பட்ட அறிவித்தல் முடிவடையும் தினத்தில் பணம் செலுத்தாவிட்டால் நீதிமன்றத்திற்கு செல்லாமல் அந்த கடன்பத்திரத்தை ஒரு சிலவற்றை அல்லது அனைத்தையும் விற்று அதில் கிடைக்கும் பணத்தைக் கொண்டு கணக்கை ஈடுசெய்வதற்கு கடனாளிக்கு அதிகாரமளிக்கலாம்.

சொத்துக்களை சுவீகரித்தல் மற்றும் விற்பனை செய்யும் உரிமை.

38. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அதன் நோக்கத்தை அடையும் பணிக்காக காணி, கட்டிடம் அல்லது அசையும் மற்றும் அசையாத சொத்துக்களை கொள்வனவு செய்தல், குத்தகைக்கு எடுத்தல் அல்லது இனாமாக அல்லது வேறு விதத்தில் சுவீகரித்தல் மற்றும் குத்தகைக்கு விடல், அடகுவைத்தல், விற்பனை செய்தல், கைமாறு செய்தல் மற்றும் வேறுவிதத்தில் வழங்கலாம்.

(2) அவ்வாறாயின், ஏதேனும் ஒரு அசையா சொத்துக்கு அல்லது வேறு நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அதற்காக அமைக்கப்பட்ட விதியில் உறுதியாக குறிப்பிட்டுள்ள இந்த அசையா சொத்து சம்பந்தமாக இந்ததப் பிரிவின் முன்நிபந்தனையில் குறிப்பிட்டுள்ள ஒரு கொடுக்கல் வாங்கல் தொடர்புபடும்போது பதிவாளரின் முன் அங்கீகார கடிதத்துடன் பெற்றுக்கொள்ள வேண்டும்.

காணி மற்றும் கட்டிடங்களை நிச்சயமாக சுவீகரித்தல்.

39. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அதன் நோக்கத்திற்கு தொடர்புடைய ஏதேனும் விடயத்திற்கு ஒரு காணியோ அல்லது கட்டிடம் தேவைப்படும் வேளையில் அது பொதுப்பணியாக கருதுவதுடன் அந்தச் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு காணியைச் சுவீகரிக்கும் சட்ட உடன்பாடு அடிப்படையில் அந்தக் காணியை அல்லது கட்டிடத்தை சுவீகரிக்கலாம்.

(2) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியனுக்கு அரசாங்கத்தால் அல்லது மாகாண சபையால் அரசாங்கக் காணியை சுவீகரிக்க சட்டத்தின் அடிப்படையில் ஒரு காணியை அல்லது கட்டிடத்தைச் சுவீகரிக்க வேண்டிய வேளையில் அந்த சங்கம் அல்லது யூனியன் அந்தக் காணியின் அல்லது கட்டிடத்தைப் பற்றி அந்தச் சட்டத்தின் நிபந்தனைகள் அடிப்படையில் உத்தரவு பிறப்பிக்கமுன், அந்தக் காணி அல்லது கட்டிடம் தொடர்பாக செலுத்தவேண்டிய நஷ்டஈடாக அந்தச் சட்டத்தில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை மற்றும் சுவீகரிக்கும்போது அரசால் அல்லது மாகாண சபையால் மேற்கொள்ளும் செலவை, அரசாங்கத்திற்கு அல்லது மாகாண சபைக்குச் செலுத்த வேண்டும்.

(3) அவ்வாறான சந்தர்ப்பத்தில், அந்தச் சட்டத்தின் அடிப்படையில் நஷ்டஈட்டை நிர்ணயிப்பதற்கு முன் ஏதேனும் ஒரு அவசர காரணம் நிமித்தம் ஒரு காணியை அல்லது கட்டிடத்தை சுவீகரிக்க தேவையேற்படும் வேளையில் அந்தக் காணி அல்லது கட்டிடம் தொடர்பாக செலுத்தவேண்டிய நஷ்டஈடாக, நிர்ணயிக்கக்கூடியது என சுவீகரிக்கும் அதிகாரி கருதும் ஒரு தொகையை அந்த உத்தரவை இடும்முன் அந்த சங்கம் அல்லது யூனியன் அரசாங்கத்திற்கு அல்லது மாகாண சபைக்கு செலுத்த

வேண்டும். அத்துடன் மிகுதித் தொகை இருப்பின் அந்த மிகுதிப் பணத்தை அந்த சட்டத்தின் பிரகாரம், நஷ்டஈடு தொகையை நிர்ணயித்தபின் செலுத்த வேண்டும்.

## IV ஆம் அத்தியாயம்

### முத்திரைக் கட்டணத்திலிருந்து மற்றும் கட்டணங்களிலிருந்து விடுபடல்

*முத்திரைக் கட்டணம் மற்றும் கட்டணங்களிலிருந்து விடுபடல்.*

40. (1) பதிவுசெய்யப்பட்ட சகல கூட்டுறவுச் சங்கமும் யூனியனும்-

(அ) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தால் அல்லது யூனியனினால் அல்லது அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் அனுகூலத்தைக் கருத்திற்கொண்டு எழுதி கையொப்பமிடப்படும் ஒரு சட்டபூர்வமான ஆவணம் தொடர்பாக அல்லது 69 ஆவது பிரிவின் நிபந்தனைகளின்படி நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் ஏதேனும் ஒரு ஆவணம் தொடர்பாக இந்த உபபிரிவின் மூலம் விடுவித்துக்கொள்வதற்காக இல்லையென்றால் அறவிடும் கட்டணத்தைச் செலுத்துவதற்கு அந்தச் சங்கம் அல்லது யூனியன் உட்படும் வேளையில் அந்த சட்டபூர்வ ஆவணம் அல்லது வேறு ஆவணம் சம்பந்தமாக ஒரு எழுதப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் அறவிடக்கூடிய ஒரு முத்திரை கட்டணத்தில் மற்றும்,

(ஆ) ஆவணங்களைப் பதிவுசெய்வதற்கு தற்சமயம் நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் அடிப்படையில் செலுத்தவேண்டிய ஒரு கட்டணத்திலிருந்து விடுபடல்.

(2) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனில் அங்கத்தவராக பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் அனுகூலத்திற்கு அல்லது யூனியனின் வியாபார நடவடிக்கைக்காக எழுதி கையொப்பமிட்ட ஏதேனும் சட்ட ஆவணம் தொடர்பாக இந்த உப பிரிவின் மூலம் விடுவிப்பதற்காக அல்ல என்றால், அறவிடும் கட்டணத்தைச் செலுத்துவதற்கு அந்த உறுப்பினர் உட்படவேண்டிய வேளையில் அந்தச் சட்டபூர்வமான ஆவணம் தொடர்பாக ஏதேனும் எழுத்துமூலச் சட்டத்தின் அடிப்படையில் அறவிடக்கூடிய ஒரு முத்திரைக் கட்டணத்தைச் செலுத்துவதன் மூலம் அனைத்து அங்கத்தவரும் விடுபட வேண்டும்.

## V ஆம் அத்தியாயம்

### பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் வியாபார சொத்து மற்றும் நிதிய முகாமைத்துவம்

*வியாபார நடவடிக்கைகள் மற்றும் வருடாந்த அபிவிருத்தி செயற்திட்டங்கள்.*

41. (1) சங்கத்தின் அல்லது யூனியனின் நோக்கங்களுக்காக மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அபிவிருத்தி நிகழ்ச்சி மற்றும் வரவுசெலவு மதிப்பீடுகளுக்கு அனுகூலமாக, அங்கத்தவர்களின் தேவைகள் நிறைவேற்றும் விதமாக அங்கு வியாபார செயற்பாடுகள் நடாத்தப்படுவது சங்கத்தினதும், யூனியனினதும், சங்கத்தின் மற்றும் யூனியனின் செயற்குழுவினதும் மற்றும் ஊழியர்களினதும் பொறுப்பாகும். கவனயீனம், வேண்டுமென்றே கடமையிலிருந்து விலகி நிற்றல், அங்கீகரிக்கப்படாத செலவுகள் அல்லது அங்கீகாரமற்ற முதலீடுகளினால் சங்கத்திற்கு ஏற்படும் நஷ்டத்திற்கு செயற்குழு மற்றும் நிறைவேற்று மட்டத்திலான முகாமைத்துவம் பொறுப்பேற்க வேண்டும்.

(2) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் முழு நோக்கங்களும் நிறைவேறும் விதமாக வருடாந்த செயற்திட்டம் தயாரித்தல், நடைமுறைப்படுத்தல் மற்றும் வளர்ச்சியை முறையாக நிறைவேற்றுவது செயற்குழுவினராலும் மற்றும் முகாமைத்துவத்தாலும் நடாத்தப்பட வேண்டும்.

(3) சங்கத்தின் அல்லது யூனியனில் எதிர்வரும் வருடத்திற்காக சங்கத்தின் அல்லது யூனியனின் அபிவிருத்தித் திட்டம் நிதியாண்டு ஆரம்பிப்பதற்கு, குறைந்தபட்சம் மூன்று மாதத்திற்கு முன் தயாரித்த பொதுச்சபையின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிப்பதற்காக செயற்குழுவும் முகாமைத்துவமும் செயற்பட வேண்டும்.

*பதிவு செய்யப் பட்ட சங்கங்கள் மற்றும் யூனியன்கள் மூலம் வழங்கப்படும் கடன்கள்.*

42. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் அங்கத்துவம் அற்ற எவருக்கும் ஏதேனும் பணத்தை அல்லது வேறு எந்த பொருளையும் கடனாக வழங்கக்கூடாது.

(2) அவ்வாறாயின் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் பொதுச்சபையின் அங்கீகாரத்துடன் விதிக்கப்பட்ட நிபந்தனையூடாக பதிவுசெய்யப்பட்ட ஏனைய கூட்டுறவு சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது இணைந்த அங்கத்தவருக்கு அல்லது அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் ஊழியருக்கு கடன் வழங்கலாம், வியாபார நடவடிக்கைகளுக்காக சங்கத்தின் அல்லது யூனியனின் பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட ஒருவர் அல்லது வேறு நிறுவனத்துடன் முறையான ஒப்பந்தப்படி பொருட்களை கடனாக வழங்கலாம்.

(3) பொதுச்சபையின் அங்கீகாரமின்றி பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் விவசாய உற்பத்தி அல்லாத ஒரு அசையும் சொத்தை பிணையாக வைத்துக்கொண்டு (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவினருக்கு பணம் வழங்கக் கூடாது. ஆனாலும் ஒரு நம்பிக்கையான கடன் பத்திரத்தை அல்லது நிரந்தர சொத்தை அடகாக வைத்துக்கொண்டு கடனாகப் பணம் வழங்கலாம்.

பதிவுசெய்யப் பட்ட சங்கங்கள் மற்றும் யூனியன்கள் மூலம் ஏற்றுக் கொள்ளப்படும் வைப்பு மற்றும் கடன்.

43. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கம் அல்லது யூனியன் விதிமூலம் அல்லது உபவிதி மூலம் நிர்ணயிக்கக்கூடிய அளவிற்கு மற்றும் அவ்வாறு நிர்ணயிக்கக்கூடிய நிபந்தனைகளின் அடிப்படையில் மாத்திரம் அங்கத்தவரல்லாத ஒருவருக்கு வைப்பு மற்றும் கடன் வழங்கலாம்.

(2) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் ஒரு அசையும் அல்லது அசையாத சொத்துக்கு வங்கிக் கடனாக பணத்தை வழங்கும் வேளையில், ஆவணம் பதிவுசெய்யும் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் அந்த அடகுப் பதிவு செய்யும் தினத்திற்கு முன் கட்டளைச் சட்டத்தின் அடிப்படையில் முறையாக பதிவு செய்யப்பட்டிருந்தாலும் அந்த சொத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் அடகு அல்லது அவ்வாறு பதிவுசெய்யப்பட்ட அடகுமூலம் பாதுகாப்பான அவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் கொடுப்பனவுக்கு கட்டுப்படுவதை தவிர அந்த சொத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும் பதிவுசெய்த சங்கமோ, யூனியனோ சங்கத்தின் எந்தவொரு அல்லது மற்ற அனைத்து கடனுக்கும் அல்லது அவ்வாறு பாதிப்பை ஏற்படுத்தும் அனைத்து அடகுக்கும் அல்லது பணம் செலுத்துவதற்கான கடப்பாட்டுக்கு மேலாக முக்கியத்துவத்துடன் அந்த அடகுப் பதிவுசெய்த தினத்திலிருந்து மற்றும் அதன் பின் அந்த அடகு அடிப்படையிலான பணத்தைச் செலுத்துவதற்கு அந்த சொத்து கட்டுப்பட்டிருக்க வேண்டும்.

அங்கத்தவர் களற்ற நபர் களுடன் செய்து கொள்ளப்படும் கொடுக்கல், வாங்கல்களை வரையறை செய்தல்.

44. பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்துவம் பெறாத ஒருவருடன் செய்யப்படும் கொடுக்கல் வாங்கல் இந்த நியதிச்சட்டத்தின் 42 ஆம் மற்றும் 43 ஆம் பிரிவுகளின் நிபந்தனைகளில் அமைத்திருப்பதுபோல் அல்லாமல் நியதிகள் மூலம் உத்தரவிடப்பட்டுள்ள தடைகள் மற்றும் வரையறைக்குட்பட்டவைகளுக்கு உட்பட வேண்டும்.

சங்கத்தின் அல்லது யூனியனின் நிதியத்தை முதலீடு செய்தல்.

45. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் பொறுப்பிலுள்ள கட்டளைச் சட்டத்தில் 20 ஆம் பிரிவில் உறுதியாக குறிப்பிடப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் முதல் அடகாக இல்லாத ஏதேனும் கடன் பத்திரிகைக்குள் ஒரு வங்கியாளருடன் அல்லது வங்கியாளராக செயற்படும் ஒருவருடன் அல்லது வேறு ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் அல்லது கூட்டுறவு கம்பனியில் அல்லது பங்குகளில் அல்லது பிணையாக அல்லது நியதி மூலம் அனுமதியுடன் கூடிய வேறொரு விதத்தில் சங்கத்தில் அல்லது யூனியனில் நிதியத்தில் வைப்பிலிடுவது அல்லது முதலீடு செய்வதை மேற்கொள்ளலாம். அரச வங்கியை தவிர்ந்த வேறு ஒரு வங்கியில் முதலீடு செய்வதென்றால் அந்த வங்கி அல்லது நிறுவனம் இலங்கை மத்திய வங்கியால் அங்கீகாரம்பெற்ற வங்கியாக அல்லது நிறுவனமாக இருத்தல் வேண்டும்.

(2) இந்த நியதிச்சட்டம் செயற்படுத்தப்பட்டிருந்தால் செல்லுபடியானதாகவிருந்த இந்த நியதிச்சட்டம் ஆரம்பமாவதற்கு முன்னர் செய்த ஒரு சேமிப்பை அல்லது முதலீட்டை இத்தால் செல்லுபடியானதாக செய்து உறுதியாக்கப்படுகிறது.

கூட்டுறவு அபிவிருத்தி நிதியத்தை அமைத்தல்.

46. கூட்டுறவு அபிவிருத்தி நிதியம் என்ற பெயரால் நிதியம் ஒன்று அமைக்க வேண்டும். வருடாந்த கணக்காய்வில் நிர்ணயம் செய்த சங்கத்தின் அல்லது யூனியனின் முழு இலாபத்தில் நூற்றுக்கு 10 ஐ (பத்து) அந்த நிதியத்திற்கு அதன் பங்களிப்பாக வழங்கி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு செலுத்த வேண்டும். குறிப்பிட்ட நிதியாண்டுக்குள் சங்கம் யூனியனின் இலாபத்தை ஈட்டாத பட்சத்தில் நூறு ரூபா (ரூ. 100) நிதியத்துக்கு செலுத்த வேண்டும். இவ்வனைத்து கொடுப்பனவும் அவ்வாறு கொடுக்கும்படி பதிவாளர் எழுத்து மூலம் அறிவிக்கும் தினத்துக்கு முன்னர் செலுத்தப்படல் வேண்டும். இந்த நிதியம் விதி மூலம் அமைக்கப்படும் நிபந்தனைகளுக்கேற்ப பதிவாளரின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

சங்கத்தின் அல்லது யூனியனின் புதைந்துள்ள நிதியம் அல்லது சட்ட திட்டங்களுக் குட்பட்ட குழாமை அமைத்தல்.

47. பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் வருடாந்த கணக்காய்வில் உறுதிப்படுத்தப்பட்ட முழு இலாபத்தில் நூற்றுக்கு இருபத்தைந்து (25%) குறையாத பணத்தை சங்கத்தின் நிதியத்துக்கு அல்லது சட்டபூர்வமான குலாமுக்கு மாற்றலாம். இந்த நிதியத்தை நிர்வகிப்பதற்கு அமைச்சர் விதியை அமைக்க வேண்டும்.

அங்கத்தவ அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியம் அமைத்தல்.

48. (1) அங்கத்துவ அபிவிருத்தி நலன்புரி நிதியம் என்ற பெயரால் ஒரு நிதியம், அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் அமைக்கப்பட வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் கூட்டுறவுச் சங்கத்திலும் அல்லது யூனியனிலும் கணக்காய்விலும் வெளியாகும் முழு இலாபத்தில் நூற்றுக்கு பத்து (10%) அங்கத்துவ அபிவிருத்தி மற்றும் நலன்புரி நிதியத்துக்கு தனது பங்களிப்பாக செலுத்த வேண்டும்.

(3) இந்த நிதியம் கூட்டுறவு சங்கத்தின் அல்லது யூனியனின் பொதுக்கூட்டத்தால் தீர்மானித்து தயாரிக்கப்படும் செயற்குழு விதி மூலம் அமைக்கப்படும் நிபந்தனைகளுக்கு ஏற்ப செயற்குழுவினால் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும்.

49. பதிவுசெய்த அனைத்து சங்கத்தின் அல்லது யூனியனின் 51 ஆம் பிரிவின்கீழ் கணக்காய்வாளர் நிர்ணயிப்பதன் மூலம் ஏதேனும் நிதியை அங்குள்ள முழு இலாபத்தில் மேல் குறிப்பிட்டுள்ள 46, 47, 48 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள நிதியத்துக்கு ஒதுக்கியபின் மிகுதியாக இருக்கும் தூய இலாபத்தின் மிகுதியை கீழ்க்காணும் அனைத்து பணிக்காகவும் அல்லது அதில் சில தேவைகளுக்காகப் பாவிக்கலாம் :- மிகுதி இலாபத்துக்கு பொருத்தமான வகையில் செயற்படுதல்.

(அ) அங்கத்தவர்கள் மூலம் செலுத்தி நிறைவுசெய்த பங்கு முதலீட்டுக்காக வருடாந்த இலாபத்தில் நூற்றுக்குப் பத்து பகுதியை அல்லது பகுதி இலாபத்தில் நூற்றுக்கு பத்து என்ற இரண்டு அளவில் கூடுதலானதை இலாபமாகச் செலுத்துதல்.

(ஆ) அங்கத்தவர்கள் சங்கத்துடன் அல்லது யூனியனுடன் செய்யப்பட்ட கொடுக்கல் வாங்கல் பிரகாரம் மற்றும் அது சம்பந்தமான உபவிதி யாப்பில் குறிப்பிட்ட அளவுக்கு மற்றும் ஒரு விதத்தில் தள்ளுபடி செலுத்துதல்.

(இ) உபவிதி யாப்பில் நிர்ணயிக்கக்கூடிய ஒரு நிதியத்துக்கு பங்களிப்பாக பணம் செலுத்துதல்.

(ஈ) சங்கத்தின் அல்லது யூனியனின் ஊழியர்களுக்கு ஊக்குவிப்பு பணம் வழங்குதல் அல்லது அவர்களின் நலன்புரி சங்கத்திற்கு பணம் வழங்குதல்.

(உ) ஏதேனும் சமூக கலாசார அல்லது உல்லாச விடயங்களுக்காக அல்லது பிரதேச அல்லது மக்கள் பயன்பெறக்கூடிய அல்லது வேறு ஏதேனும் சமூக அபிவிருத்தியை இலக்காகக் கொண்ட விடயத்தைப் பூர்த்தி செய்வதற்காக, செலவு செய்வதற்கு பொது நலன்புரி நிதியத்துக்கு தூய இலாபத்திலிருந்து நூற்றுக்கு பத்து என்ற விகிதத்துக்கு கூடாத ஒரு தொகையை செலுத்துதல்.

## *VI* ஆம் அத்தியாயம்

### பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் வரவு செலவு கணக்கும் மற்றும் கணக்காய்வும்

50. (1) (அ) அனைத்து பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கமும் அல்லது யூனியனும், அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் வருமானம் அல்லது செலவு, இருப்பு மற்றும் கடன் மற்றும் சகல கொடுக்கல் வாங்கல் தொடர்பாக இலங்கை கணக்கு தரத்திற்கேற்ப முறையாக கணக்குகளை நடாத்த வழி அமைக்க வேண்டும். சங்கத்தின் அல்லது யூனியனின் கணக்கு, வரவு செலவு ஆவணங்களைத் தயாரித்தல்.

(ஆ) பதிவாளரால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் நிர்ணயிக்கப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளுக்கான வருடாந்த நிதி நிலவர அறிக்கையை அனைத்து பதிவுசெய்யப்பட்ட சங்கமும் அல்லது யூனியனும் தயாரிக்க வேண்டும். அந்த நிதி அறிக்கை குறிப்பிட்ட நிதியாண்டு நிறைவுபெற்று மூன்று மாதத்திற்குள் பதிவாளருக்கு அல்லது அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட வேறு ஒருவருக்கு அல்லது சங்கத்தால் அல்லது யூனியனால் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(2) (அ) சகல பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவு சங்கம் அல்லது யூனியன், வருமான இலக்கு, மூலதன செலவு, நிதி மற்றும் நிதி வளங்கள், பணம் முதலீடு வரவு செலவுகளின் இலாப நஷ்ட கணக்கு, வருமானம் மற்றும் செலவு கணக்கு மற்றும் பொறுப்பு அட்டவணைகளைக் காட்டும் வரவு செலவு ஆவணம் மற்றும் மேலே 41 ஆம் பிரிவின் நிபந்தனைகளின்படி அபிவிருத்தி திட்டம் ஒவ்வொரு நிதியாண்டும் தயார்செய்ய வேண்டும்.

(ஆ) வரவு செலவு அறிக்கைக்கான நிதியாண்டை ஆரம்பிப்பதற்கு இரண்டு மாதத்திற்கு முன்னதாக, அங்கீகாரத்துக்காக சங்கத்தின் அல்லது யூனியனின் பொதுச்சபைக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

(இ) அந்த வரவு செலவு அறிக்கையில் பிரதியொன்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 41 ஆம் பிரிவின் நிபந்தனைகளின்படி தயாரிக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டத்தின் பிரதியொன்று குறிப்பிட்ட நிதியாண்டு ஆரம்பமாவதற்கு ஒரு மாதத்திற்கு முன்னர் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும்.

(ஈ) அந்த வரவு செலவு அறிக்கை தயாரிக்கப்பட வேண்டிய மாதிரியையும், விதத்தையும் அதில் உள்ளடக்கப்பட வேண்டிய ஆகக்குறைந்த தகவல்களை பதிவாளர் முடிவு செய்யும் விதத்தில் நடைபெற வேண்டும்.

(உ) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை மற்றும் அதன் வருமானத்தையும் செலவையும் கவனத்தில் கொண்டு இந்த பிரிவின் நிபந்தனைகளின் ஊடாக ஒரு சங்கம் அல்லது ஒரு யூனியன் விடுவிப்பது சந்தர்ப்பத்திற்கேற்பதென அமைச்சர் கருதும் வேளையில் சிறப்பு அல்லது பொது உத்தரவின் மூலம் ஒரு சங்கத்தை அல்லது யூனியனை அமைச்சர் விடுவிக்கலாம்.

(ஊ) இந்த பிரிவின் நிபந்தனைகளின்படி செயற்படுவதை பதிவுசெய்த ஒரு சங்கம் அல்லது யூனியன் தவறும் சந்தர்ப்பத்தில் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவின் சகல அங்கத்தவர்களும் இந்த நியதிச்சட்டத்தின் 53, 54 மற்றும் 55 ஆம் பிரிவுகளில் ஒரு பிரிவின்கீழ் நடாத்தப்படும் விசாரணை அல்லது சோதனையின் பின் குற்றத்திற்கு குற்றவாளி என பதிவாளர் முடிவு செய்தால் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவின் அனைத்து அங்கத்தவர்களும் அல்லது

நிறைவேற்று மட்டத்திலான அதிகாரியொருவரை தனது பதவியிலிருந்து அல்லது சேவையிலிருந்து அகற்றுவதற்கான உரிமை பதிவாளருக்கு உண்டு.

(எ) மேலும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சங்கத்தின் அல்லது யூனியனின் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை நடாத்துவதற்கு 58 ஆம் பிரிவின் நிபந்தனையின்படி பதிவாளர் செயற்படலாம்.

கணக்காய்வு.

51. (1) (அ) ஒவ்வொரு வருடமும் ஒரு முறையேனும் பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவரிடம் அல்லது ஒரு நிறுவனத்திடம் கணக்குகளை கணக்காய்வு செய்து கொள்வது பதிவுசெய்யப்பட்ட சகல கூட்டுறவுச் சங்கத்தினதும் யூனியனினதும் செயற்குழுவினதும் பொறுப்பாக இருத்தல் வேண்டும்.

(ஆ) ஒவ்வொரு வருடமும் பதிவுசெய்யப்பட்ட சகல சங்கமும் அல்லது யூனியனும் கணக்கை, பதிவாளரின் எழுத்து மூலமான அதிகாரத்தை பெறும் ஒருவருக்கு அல்லது ஒரு நிறுவனத்துக்கு வழங்கி இலங்கை கணக்காய்வு தரத்திற்கேற்ப கணக்காய்வு செய்யப்படல் வேண்டும்.

(இ) உரிய தகைமைகள் மற்றும் கூட்டுறவு கணக்காய்வை மேற்கொள்ளும் திறன் இருக்கிறது என திருப்தியடைந்தாலொழிய எவரையும் அல்லது எந்த நிறுவனத்தையும் கணக்காய்வுக்காக பதிவாளர் அங்கீகரிக்கக் கூடாது.

(2) மேலே (1) ஆம் உப பிரிவின் அடிப்படையிலான கணக்காய்வில்–

(அ) காலம் கடந்த கடன் சம்பந்தமாக பரிசீலனை

(ஆ) பதிவுசெய்யப்பட்ட சங்கங்களின் மற்றும் யூனியன்களின் இருப்பு மற்றும் கடன் பற்றிய மதிப்பீடும் மற்றும் உண்மைத் தன்மையும்

(இ) முறையான நிதி நிர்வாகம் கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்பாடு தொடர்பாக தொடர்ந்து மதிப்பீடு செய்யக்கூடியதாக இருப்பதற்கு தகவல்களைச் சமர்ப்பிக்க அத்தாட்சிப்படுத்துவதற்கு ஏற்பாட்டு முறைமை, செயல்முறைகள், புத்தகங்கள், அறிக்கைகள் மற்றும் வேறு ஆவணங்களை முறையாக மற்றும் அளவாக திட்டமிடப்பட்டுள்ளதா மற்றும் அந்தந்த முறையில், செயல்முறை, புத்தகங்கள், அறிக்கை மற்றும் வேறு ஆவணங்கள் பலன்தரக்கூடிய விதத்தில் செயற்படுகிறதா என்பதைப் பற்றிய பரிசீலனை

(ஈ) கூட்டுறவுச் சங்கத்தை அல்லது யூனியனை நடாத்துவதை, இந்த நியதிச்சட்டத்தில் அல்லது அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விதி, கட்டளை அல்லது உபவிதி யாப்பின் நிபந்தனைகளுக்கு அனுகூலமாக இருக்கிறதாவென, சங்கத்தின் அல்லது யூனியனின் நிர்வாகம் இந்த நியதிச்சட்டத்தின் விதிகளுக்கு கட்டளைகளுக்கு அல்லது உபவிதி யாப்பிற்கு அனுகூலமாக இருக்கிறதா, சங்கத்தின் அல்லது யூனியனின் நிர்வாகம் இந்த நியதிச்சட்டத்தின் விதிகளுக்கு, கட்டளைகளுக்கு அல்லது உபவிதி யாப்பிற்கு அனுகூலமாக செய்யப்படுகிறதா என்பதைப் பரீட்சிப்பது

(உ) நிதியத்தை பாவிப்பதில் செயற்றிறனாகவும், சிக்கனமாகவும் செயற்படுத்தப்படுகிறதா என பரீட்சிப்பது

(ஊ) பதிவுசெய்யப்பட்ட சங்கத்துக்கு அல்லது யூனியனுக்குச் சொந்தமான மற்றும் அந்த நிர்வாகத்தின்கீழ் இருக்கும் நிதி, சொத்துக்கள் பாதுகாக்கப்படுவதை உறுதிப்படுத்துவதற்கு திருப்தியடைக்கூடிய செயற்பாடுகள் அமைக்கப்பட்டுள்ளனவா என பரீட்சிப்பது

(எ) கணக்கு, பணத்தை இடுதல் மற்றும் மதிப்பீடு செய்தல் போன்றவற்றின் கோட்பாடு பற்றி முழுக் கவனத்துடன், கவனத்தில் கொள்ளவேண்டிய கால எல்லை தொடர்பாக சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகள் தொடர்பாக உண்மையானதும், சரியானதுமான கணக்கைச் சமர்ப்பிப்பதற்காக கணக்காய்வு செய்யப்பட்ட கணக்குகளுக்கான திட்டம் உள்ளதா என்று பரீட்சிப்பது

(ஏ) வேறு குறிப்பிட்ட விடயங்கள் உள்ளக்கப்பட வேண்டும்.

(3) (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் கீழ் கணக்காய்வு பணிகளுக்காக பதிவாளர் அல்லது அந்த கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒரு நபருக்கு–

(அ) பதிவாளரின் அல்லது அந்த கண்காய்வுக்காக அவரால் அதிகாரமளிக்கப்பட்ட நபரின் கருத்துப்படி கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் ஏதேனும் கொடுக்கல் வாங்கல் அல்லது அங்கு பணிகள் தொடர்பான முகாமைத்துவம் தொடர்பாக முக்கியமான தகவல் வழங்கக்கூடிய, முன்னால் இருந்த அல்லது தற்சமயம் சங்கத்தில் இருக்கும் ஒரு அதிகாரி, பிரதிநிதியொருவர், ஊழியர் ஒருவர் அல்லது அங்கத்தவர் அல்லது வேறு ஒருவரை அழைப்பதற்கு,

(ஆ) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய ஒரு புத்தகம் அல்லது ஆவணம் அல்லது சங்கத்தின் ஏதேனும் பணம், கடனட்டை அல்லது வேறு சொத்தை சமர்ப்பிக்கும்படி அதை தன்வசம் வைத்திருப்பவர் அல்லது அதற்குப் பொறுப்பாக இருப்பவர், அல்லது முன்னால் அல்லது தற்சமயம் இருக்கும் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் அதிகாரிக்கு, பிரதிநிதியொருவருக்கு, ஊழியருக்கு, அங்கத்தவருக்கு அல்லது வேறு ஒருவருக்கு உத்தரவிடும், மற்றும்

(இ) அந்த கணக்காய்வில் தான் ஒரு மோசடியைக் கண்டுபிடிக்கும் சந்தர்ப்பத்தில் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் கணக்குகள், புத்தகங்கள் மற்றும் ஆவணங்களைத் தான் பொறுப்பேற்கவும், பாதுகாப்பிற்காக சங்கத்தின் பொறுப்பான ஒரு அதிகாரியிடம் வழங்கவும் அதிகாரம் இருக்க வேண்டும்.

(4) பதிவாளருக்கு அல்லது பதிவாளரால் அவ்வேளையில் செய்யப்படவேண்டிய விசேட காரியத்துக்காக எழுத்துமூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தால் அல்லது யூனியனால் நடாத்தப்படும் அனைத்துப் புத்தகங்களையும், ஆவணங்களையும், கணக்குகளையும், கடிதங்களையும், கடனட்டைகளையும் மற்றும் கையிருப்பில் இருக்கும் பணத்தை பரீட்சிப்பதற்கான உரிமை இருக்க வேண்டும். மேலும் மேற்குறிப்பிட்டுள்ளவைகளுக்கு பொறுப்பாக இருக்கும் அல்லது நடாத்தும் அல்லது தன்வசம் வைத்திருப்பவர்கள் அனைவரும் அவைகளை பதிவாளருக்கு அல்லது அந்த அதிகாரத்தை வழங்கப்பட்டவருக்கு சமர்ப்பிக்கப்படல் வேண்டும். இல்லாவிடின் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் கொடுக்கல் வாங்கல் மற்றும் பணிகள் தொடர்பாக பதிவாளரால் அல்லது அந்த பரிசீலிப்பு அல்லது கணக்காய்வு பெறும் நபரால் உத்தரவிடப்படும் தகவல் வழங்க வேண்டும்.

(5) பதிவாளர் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அனைவரும் தண்டனை சட்டக்கோவையின்படி அரச ஊழியர்கள் என கவனத்தில் கொள்ள வேண்டும்.

(6) (அ) சங்கத்தில் அல்லது யூனியனில் ஏற்பாடுகளுக்கு மற்றும் முகாமைத்துவத்துக்கு பொறுப்பாக இருக்கும் அல்லது பொறுப்பாக இருந்த அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் ஊழியர் அல்லது ஏதேனும் சந்தர்ப்பத்தில் பணிபுரிந்த எவரேனும் ஒருவரால் இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அல்லது வேறு சட்டத்தின் அடிப்படையில் அல்லது விதிக்கப்பட்ட நியதியில் பதிவாளர் அங்கீகரித்த கூட்டுறவுச் சங்கங்களுக்கு அல்லது யூனியன்களுக்கு அல்லது நிதி செயல்முறை விதிகளுக்கு இல்லாவிடின் உத்தரவுகளுக்கு அல்லது பதிவாளரால் அல்லது கூட்டுறவு ஊழியர் ஆணைச்சபை மூலம் வெளியிடப்பட்ட பொது நிபந்தனைகள் எதிலும் அல்லது சங்கத்தின் உபவிதி யாப்பில் அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழு விதிகளின் நிபந்தனைகளுக்கு முரணாகப் பணம் செலுத்தி இருப்பதாக அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் நிதியத்தைப் பாவித்து இருப்பதாக (1) ஆம் உப பிரிவிற்கு கீழுள்ள கணக்காய்வுகள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டால், பதிவாளர் அவ்வாறான சகல செலுத்துதலுக்கும் மற்றும் அவ்வாறான சகல நிதியத்தையும் பாவிப்பதற்கு இடமளிக்கக்கூடாது. அந்த சட்ட விரோத செலுத்தல் அல்லது நிதியத்தை பாவிப்பது அல்லது அதைச் செய்வதற்கு அதிகாரமளிப்பவர் அதனைத் தாங்கிக்கொள்ள வேண்டும். மேலும் அவரின் கவனயீனம் அல்லது துர்நடத்தை காரணமாக ஏற்பட்ட குறைபாடுகள் அல்லது நட்டம் என்பவற்றிற்கு அந்த நபர் கணக்கு காட்ட வேண்டும். ஆனால் அவர் அவ்வாறு காட்டாத பணத்தை அந்த நபரிடம் அறவிட வேண்டும். மேலும் ஒவ்வொரு சந்தரப்பத்திலும் அந்த நபரிடமிருந்து அறவிடவேண்டிய பணத்தை அத்தாட்சிப்படுத்தி தன் முடிவை கடிதம் மூலம் அந்த நபருக்கு பதிவாளர் அறிவிக்க வேண்டும்.

(ஆ) ஒருவருக் இடமளிக்காது இருப்பதற்கு அல்லது ஈடுசெய்யப்பட வேண்டிய செலவை அறவிடுவதற்கு முன், பதிவாளர் அல்லது அவருக்கு பதிலக கடிதமூலம் அதிகாரமளிக்கப்பட்ட ஒருவரால் பொருத்தமானது, தகுந்தது என எண்ணக்கூடிய விடயம் தொடர்பாக கருத்து தெரிவிப்பதற்கு அல்லது கருத்தைச் சமர்ப்பிக்க அந்த நபருக்கு சந்தர்ப்பம் வழங்கப்பட வேண்டும். அவ்வாறாக இடமளித்து அல்லது ஈடுசெய்யப்படவேண்டிய தகாத செலவை அறவிடும்படி உத்தரவிட்டால் பதிவாளர் அல்லது அவரால் அதிகாரமளித்தவரின் தீர்மானத்திற்கான காரணத்தைக் கோரி அவருக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்ட பின் இடமளிக்காததையும் அல்லது தகாத செலவை ஈடுசெய்வது தொடர்பாக தனது முடிவை கடிதம் மூலம் அந்நபருக்கு அறிவிக்க வேண்டும்.

(இ) பதிவாளர் அவ்வாறான இடமளிக்கப்படாததை அல்லது தகாத செலவை அறவிடுவது அல்லது அதிருப்திக்குட்பட்ட ஒருவர் பதிவாளர் முடிவை தனக்கு தெரிவித்த நாளிலிருந்து 14 நாட்களுக்குள் கூட்டுறவு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் செயலாளருக்கு அந்த தீர்மானத்துக்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம். அது சம்பந்தமாக அமைச்சரின் செயலாளரின் முடிவு தீர்மானமானதாகவும் இறுதித் தீர்வாகவும் அமைய வேண்டியதுடன், அந்த தீர்ப்பு போதுமாக எந்தவொரு நீதிமன்றத்திலும் கேள்விக்குட்படக்கூடாது.

(ஈ) பதிவாளர் மூலம் எடுக்கும் தீர்மானத்திற்கு அனுகூலமாக செயற்படாமல் இருக்கும் சந்தர்ப்பத்தில், கீழே 74 (2) ஆம் பிரிவின் நிபந்தனைகளுக்குத் தேவையான மாற்றங்களுடன் பொருந்துதல் வேண்டும்.

52. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்பாடுகளில் ஏதேனும் குறைபாடுகள் மேலே குறிப்பிடப்பட்டுள்ள 51 ஆம் பிரிவின் அடிப்படையில் செய்யப்பட்ட கணக்காய்வில் தெரியவந்தால் பதிவாளரினால் அந்த குறைபாடுகளை, சங்கம் அல்லது யூனியன் தெரிந்துகொள்வதற்கும் மற்றும் அந்த சங்கம் அல்லது யூனியன் அல்லது வேறொரு சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்துவம் பெற்றிருப்பாரேயானால் அந்தக் கூட்டுறவுச் சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு தெரியச்செய்ய வேண்டும். கணக்காய்வின் குறைபாடுகளை சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு அறிவித்தல்.

(2) பதிவாளரினால் வெளிப்படுத்திய குறைகளை தீர்ப்பதற்காக, பதிவாளரின் உத்தரவில் ஸ்திரமாக குறிக்பிடக்கூடிய ஏதேனும் ஒரு நடவடிக்கையை அந்த உத்தரவில் குறிப்பிட்ட காலத்திற்குள் நடவடிக்கை எடுக்குமாறு சங்கத்தினுள் அல்லது யூனியனிலுள்ள அதிகாரமுள்ளவர்களால் உத்தரவைப் பிறப்பிக்கலாம்.

(3) பதிவாளர் இடும் உத்தரவுகளை மீறும் அல்லது அலட்சியம் செய்யும் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது அதிகாரம் பெற்றவர்களுக்கு எதிராக இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகள் மூலம் வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின்படி பதிவாளர் செயற்படலாம்.

## VII ஆம் அத்தியாயம்

### பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின், யூனியனின் விசாரணை மற்றும் பரிசீலனை

விசாரணை மற்றும் பரீட்சை.

53. (1) (அ) பதிவாளர் தன் இயக்கத்தாலேயே பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் இணைப்பு, செயற்பாடு, நிதிநிலை முதலியவைகளை பரிசீலனை செய்யலாம். மேலும் அந்தச் சங்கத்தின் செயற்குழுவில் பெரும்பான்மையினர் அல்லது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்காக உபவிதி யாப்பின் மூலம் தகுதி பெற்றுள்ள அங்கத்தவர்கள் பிரதிநிதிகள் மூன்றில் ஒன்றுக்கு (1/3) குறையாதவர்கள் அல்லது முழு அங்கத்தவர்களில் மூன்றில் ஒன்றுக்கு குறையாத எண்ணிக்கையானோர் அல்லது எழுத்து மூலமாக வேண்டுகோள் விடுத்தபோது அவ்வாறான சோதனையை பதிவாளர் நடாத்த வேண்டும். அத்தோடு பதிவாளர் தற்சமயத்துக்கு எழுத்துமூல உத்தரவின்மூலம் அதிகாரம் வழங்கிய நபருக்கு பதிவுசெய்த சங்கத்தின் அல்லது யூனியனின் இணைப்பை, செயற்பாட்டைப் பற்றியதும் நிதி நிலைமை தொடர்பாகவும் விசாணை நடத்தும்படி பணிக்கலாம்.

(ஆ) அவ்வாறாயின் இதில் (1) ஆம் உபபிரிவில் நிபந்தனை விதித்ததுபோல் விசாரணை நடாத்த அல்லது சோதனை நடாத்துவதற்காக நிபந்தனைகள் விதிக்க வேண்டும் என எண்ணினால் அவ்வாறான சோதனையைச் செய்வதற்குப் போதுமான விடயங்கள் இருக்கின்றனவா என்பதைப் பற்றி திருப்திபடக்கூடிய விதத்திலான ஆரம்ப சோதனையொன்றை நடத்துவதற்கு அல்லது அதற்கான உத்தரவைப் பிறப்பிப்பதற்கு பதிவாளருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அந்த ஆரம்ப சோதனையில் பரிந்துரை எதுவாக இருப்பினும் அதைக் கவனத்தில் கொள்ளாது 53 (1) ஆம் பிரிவின் அடிப்படையில் சோதனைகளை நடாத்தவும் அல்லது நிபந்தனைகளை விதிக்கவும் ஆணையாளருக்கு முடியும்.

(2) (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் சோதனை நடாத்த பதிவாளருக்கு அல்லது சோதனை நடாத்த அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு–

(அ) பதிவாளரின் அல்லது அந்நபரின் கருத்தின்படி சங்கத்தில் அல்லது யூனியனில் ஒரு கொடுக்கல் வாங்கலை அல்லது அவ்விடயம் தொடர்பான முகாமைத்துவம் தொடர்பாக முக்கிய தகவல்களை வழங்கக்கூடிய சங்கத்தின் அல்லது யூனியனின் முன்னால் இருந்த அல்லது தற்சமயம் இருக்கும் அதிகாரியை, பிரதிநிதியை, ஊழியரை அல்லது அங்கத்தவரை அல்லது வேறு ஒருவரை அழைப்பதற்கு,

(ஆ) சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகள் தொடர்புடைய புத்தகம் அல்லது ஆவணம், சங்கத்திற்கு அல்லது யூனியனுக்குச் சொந்தமான பணம் அல்லது வேறு சொத்துக்கள் தன்வசம் உள்ளவர் அல்லது அதற்குப் பொறுப்பாக இருப்பவர் அல்லது வேறு சங்கத்தில் அல்லது யூனியனில் முன்னால் இருந்த அல்லது தற்சமயம் இருக்கும் அதிகாரியொருவர், பிரதிநிதியொருவர், ஊழியர் ஒருவரை அல்லது வேறு ஒருவரை முன்னிலைப்படுத்துமாறு உத்தரவிடுவதற்கு,

(இ) தான் சமர்ப்பிக்கும் ஒரு விடயத்தை தீர்மானிப்பதற்காக, தான் குறிப்பிடும் ஒரு நேரத்தில் அல்லது இடத்தில் சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்துவ பொதுக்கூட்டத்தை கூட்டுவதற்கு, மற்றும்

(ஈ) அந்த விசாணையின் அல்லது ஆரம்ப விசாரணையின் இடையே மோசடி அல்லது முறைகேடுகள் இடம்பெற்றதாக நம்புவதற்கு தனக்கு காரணம் இருக்கும் வேளையில் சங்கத்தின் அல்லது யூனியனின் கணக்குப் புத்தகங்களை மற்றும் ஆவணங்களை தான் பொறுப்பேற்கும் உரிமையுண்டு.

(3) (2) ஆம் உப பிரிவின் (இ) பந்தியின் அடிப்படையில் அழைக்கப்படும் பொதுச்சபை கூட்டத்திற்கு சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பின்கீழ் கூட்டப்படும் பொதுக்கூட்டத்திற்கு அனைத்து அதிகாரங்களும் இருக்க வேண்டும். மேலும் அந்தக் கூட்டத்தில் சமுகமளிக்கும் நபர்கள் எண்ணிக்கை பொருட்படுத்தப்பட மாட்டாது மற்றும் பொதுச்சபை கூட்டத்திற்கு விடுக்கும் அறிவித்தலில் கால எல்லையைப் பற்றிய உபவிதி யாப்பில் இருக்கும் நிபந்தனகள் அந்தக் கூட்டத்திற்கு ஏற்புடையதல்லாத சிறப்பைத் தவிர, அந்த உபவிதி யாப்பில் அந்தப் பணிகள் நெறிப்படுத்தப்பட வேண்டும். பதிவாளர் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய ஒரு நபரால் அந்தக் கூட்டத்தின் தலைமைத்துவத்தை வகித்த போதிலும் அவருக்கு வாக்கு இருக்க முடியாது. (வாக்குகள் சமமாகப் பிரியும் வேளையில் அவர் தீர்மான வாக்கை அளிக்கக்கூடியதாக இருக்க வேண்டும்.)

(4) இந்தப் பிரிவின் அடிப்படையில் விசாணையை முடிப்பதற்கு முன் செயற்குழுவுக்கு எதிராக முதலில் பார்க்கும்போதே குற்றம் நிரூபிக்கப்பட்டிருக்கிறது என்பது பதிவாளரின் கருத்தாக இருந்தால், அந்தச் செயற்குழுவை ஆறு

மாதத்திற்கு இடைநிறுத்தவும், சங்கத்தின் அல்லது யூனியனில் நடவடிக்கைகள் முகாமைத்துவம் மற்றும் நிர்வாகத்தை மேற்கொள்ள சபையை அமைக்கவும், அவருக்கு அதிகாரம் உண்டு. அந்தச் செயற்குழு இடைநிறுத்தம் செய்த நாள் முதல் ஆறு மாதத்திற்குள் அந்த விசாரணையை பதிவாளர் நிறைவுசெய்ய வேண்டும். அத்துடன் அந்த செயற்குழு நிரைக்கப்படுவது தொடர்பாக 57 ஆவது பிரிவின் அடிப்படையில் இறுதி முடிவை எடுக்க வேண்டும்.

(5) இந்தப் பிரிவின் அடிப்படையில் விசாரணை நடாத்தப்படும் வேளையில் பதிவாளர் அந்த விசாரணையின் முடிவை சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு மற்றும் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்துவம்பெற்ற இன்னொரு சங்கம் அல்லது யூனியன் ஏதேனும் இருப்பின் அந்தச் சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு, சங்கம் அல்லது யூனியன் ஏதேனும் ஒரு வங்கிக்கு கடன்பட்டிருந்தால் அந்த வங்கிக்கும் அறிவிக்க வேண்டும்.

(6) பதிவாளர் மற்றும் இந்தப் பிரிவின் அடிப்படையில் விசாரணை அல்லது பரீட்சை நடத்துவதற்கு அவரால் அதிகாரம்பெற்ற ஒவ்வொருவரும் தண்டனை சட்டக்கோவையில் அரச ஊழியராக அர்த்தப்படும் என கவனத்தில் கொள்ள வேண்டும்.

சங்கத்தின் அல்லது யூனியனின் புத்தகங்களை பரிசீலனை செய்தல் மற்றும் அவற்றின் செயற்பாடுகளை கண்காணித்தல்.

54. (1) பதிவாளர் தனது தேவையின் அடிப்படையில் அல்லது அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவின் பெரும்பான்மையினர் அல்லது பொதுக்கூட்டத்தில் கலந்துகொள்வதற்கு உபவிதி யாப்பின் பிரகாரம் தகைமையுடைய அங்கத்தவர்கள் அல்லது பிரதிநிதிகள் மூன்றில் இரண்டு எண்ணிக்கையானோரின் வேண்டுகோளுக்கிணங்க அல்லது வெளியேயுள்ள சேமிப்பாளாக உள்ளவர் அல்லது கடன்காரரின் எழுத்துமூல வேண்டுகோளின் அடிப்படையில் அல்லது முழு அங்கத்தவர்களின் மூன்றில் ஒன்று அல்லது நூற்றுக்கு என்ற இரண்டில் குறைந்த எண்ணிக்கையின் வேண்டுகோளின்படி பதிவுசெய்யப்பட்ட அல்லது யூனியனின் புத்தகங்கள் பற்றிய சோதனைகளை மேற்கொள்ளலாம். இல்லாவிடில் அதற்கான கடிதத்தின் மூலமாக அல்லது உத்தரவின் மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு அந்தப் புத்தகங்களின் சோதனைகளை நடாத்தும்படி உத்தரவிடலாம். அவ்வாறாயின் விண்ணப்பதாரர் வெளி சேமிப்பு வைத்திருப்பவர், கடன்காரர் என்றால் அவரால்,-

(அ) ஒரு குறிப்பிட்ட பணம் அவருக்கு கிடைக்கவேண்டும் என்றும், அவர் அதைச் செலுத்தும்படி வேண்டுகோள் விடுத்ததாகவும், நியாயமான காலத்தில் அவருக்கு அது கிடைக்கவில்லை என உறுதிப்படுத்தப்பட்டால்,

மற்றும்

(ஆ) உத்தேச கட்டணத்தைப் பதிவாளர் நிர்ணயிக்கக்கூடிய ஒரு தொகையை பிணையாக பதிவாளரிடத்தில் சேமித்து வைத்தாலோ தவிர கடன்காரரின் வேண்டுகோள்படி அவ்வாறான புத்தக சோதனை நடத்தக் கூடாது.

(2) பதிவாளர் தனது தேவையின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் பணிகளை ஆராயலாம். இல்லாவிடின் அவரால் அதிகாரம் வழங்கப்பட்ட ஒருவருக்கு அவ்வாறான ஆராய்வை செய்யும்படி உத்தரவிடலாம்.

(3) பதிவாளர் அல்லது இந்தப் பிரிவின்கீழ் பதிவாளர் அதிகாரம் வழங்கிய ஒருவருக்கு,

(அ) பதிவுசெய்த சங்கத்தில் அல்லது யூனியனில் உள்ள அனைத்துப் புத்தகங்கள், கணக்குகள், ஆவணங்கள், கடன் பத்திரங்கள் பரீட்சித்துப் பார்ப்பதற்கு எவ்வேளையிலும் உரிமை இருக்க வேண்டும். கையிருப்பில் இருக்கும் பணத்தைப் பரீட்சித்து அல்லது ஆராய்ந்து பார்ப்பவருக்கு தேவைப்படக்கூடிய, சங்கத்தின் அல்லது யூனியனின் கொடுக்கல் வாங்கல் மற்றும் செயற்பாடு தொடர்பாக ஏதேனும் தகவல்கள் சங்கத்தின் அல்லது யூனியனின் சகல அதிகாரிகளும் மற்றும் உறுப்பினர்களும் வழங்க வேண்டும். மேலும்,

(ஆ) பரீட்சிக்கும்போது அல்லது விசாரிக்கும்போது ஒருவர் மோசடியில் ஈடுபட்டதாக தெரியவரும் சமயத்தில் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் கணக்குப் புத்தகங்களையும் மற்றும் ஆவணங்களையும் தான் பொறுப்பேற்கும் அதிகாரம் இருக்க வேண்டும்.

(4) அவ்வாறான ஒரு சோதனையில் அல்லது விசாரணையின் பலனை,

(அ) பதிவாளரின் தேவையின் அடிப்படையில் சோதனை அல்லது விசாரணை நடத்தப்படும் வேளையில், பதிவாளர் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு, சங்கம் அல்லது யூனியன் ஏதேனும் வங்கியில் கடன் பெற்றிருந்தால் அந்த வங்கிக்கு,

(ஆ) வெளியக சேமிப்பு வைத்திருப்பவர் ஒருவரின் அல்லது கடன்காரரின் வேண்டுகோளின்படி அந்த சோதனை அல்லது விசாரணை நடக்கும் வேளையில் பதிவாளர் வெளியக சேமிப்பு வைத்திருப்பவருக்கு அல்லது கடன்காரருக்கு சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு அறிவிக்க வேண்டும்.

(5) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் கடன்காரரின் வேண்டுகோளின்படி (1) ஆம் உபபிரிவின்கீழ் சோதனை நடத்தும் வேளையில் பதிவாளர் பொருத்தமானது என எண்ணும் விதத்தில் அந்த சோதனைக்கான கட்டணம் அல்லது அந்தக் கட்டணத்தில் ஒரு பகுதியை சங்கம் அல்லது யூனியனுக்கு மற்றும் கடன்காரர்களுக்கிடையே பகிர்ந்து அறவிடலாம்.

(6) ஒரு சங்கம் அல்லது யூனியன் வெளியக சேமிப்பு வைத்திருப்பவர் அல்லது கடன்காரர் தொடர்பாக இந்தப் பிரிவின்கீழ் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்ட ஒரு தொகையை அறவிடும்படி அந்த சங்கம் அல்லது யூனியன் பதிவுசெய்த அலுவலகம் அமைந்துள்ள அல்லது அந்த வியாபாரம் நடத்தப்படும் இடம் அல்லது வெளி சேமிப்பாளர் அல்லது கடன்காரரின் வதிவிடம் பற்றி அல்லது நீதிமன்ற அதிகாரமுள்ள நீதவான் நீதிமன்றத்துக்கு வேண்டுகோள் விடுத்ததும் அந்த நீதிமன்றத்தால் விதிக்கும் தண்டப்பணத்தை அறவிடும் விதத்தில் அறவிடலாம்.

(7) பதிவாளர் பதிவுசெய்த சங்கத்தில் அல்லது யூனியனில் புத்தகங்களைச் சோதனை செய்வதற்கு அல்லது அங்கு நடவடிக்கைகளை விசாரிப்பதற்கு அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அனைவரும் தண்டனை சட்டக்கோவையின் அரச ஊழியர்கள் என கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

(8) இந்தப் பிரிவின் நிபந்தனைகள் அடிப்படையில் சோதனை அல்லது விசாரணை செய்யும் விடயங்களில் பதிவாளருக்கு அல்லது அவர் வழங்கிய சோதனை அல்லது விசாரணையை மேற்கொள்வதற்கு அதிகாரமளித்த ஒருவருக்கு :-

(அ) சங்கத்தின் அல்லது யூனியனின் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக அல்லது அதன் நடவடிக்கைகளை நிர்வகிப்பது தொடர்பாக அல்லது முக்கியமான தகவல்களை வழங்கக்கூடியவர் என பதிவாளர் அல்லது அந்நபர் எண்ணும் சங்கத்தின் அல்லது யூனியனின் அல்லது சங்கத்தின் முன்னால் இருந்த அல்லது தற்சமயம் இருக்கும் அதிகாரி ஒருவர், பிரதிநிதி ஒருவர், ஊழியர் ஒருவர் அல்லது அங்கத்தவரொருவர் இல்லாவிடின் வேறு ஒருவரை அழைப்பதற்கு

(ஆ) சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய ஒரு புத்தகத்தில், ஆவணத்தில், பணத்தில், பிணையில் அல்லது வேறு சொத்தின் உரிமை இல்லாவிடின் பொறுப்பை வகிக்கும் சங்கத்தின் அல்லது சங்கத்தின் முன்னால் இருந்த அல்லது தற்சமயம் இருக்கும் அதிகாரி ஒருவர், பிரதிநிதி ஒருவர், ஊழியர் ஒருவர், அங்கத்தவரொருவர் அல்லது வேறு ஒருவருக்கு அவைகளை ஒப்படைக்குமாறு உத்தரவிடுவதற்கு

(இ) தான் உத்தரவிட்ட விடயத்தில் முடிவு செய்வதற்காக தான் நிர்ணயம் செய்யும் நேரத்தில் மற்றும் இடத்தில் சங்கத்தில் அல்லது யூனியனில் ஊழியர்களின் பொதுச்சபைக் கூட்டத்தைக் கூட்டுவதற்கு, மற்றும்

(ஈ) அவ்வாறான சோதனையின் அல்லது ஆராய்வின்போது மோசடி அல்லது முறைகேடு இருப்பதாக நம்புவதற்கு இவருக்கு காரணம் இருக்கும் சந்தர்ப்பத்தில், சங்கத்தில் அல்லது யூனியனில் கணக்கு மற்றும் ஆவணங்களைத் தான் பொறுப்பேற்கும் அதிகாரம் இருக்க வேண்டும்.

*பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கங்கள் அல்லது யூனியன்களின் பொதுவான பரிசீலனைகளை நடாத்தும் அதிகாரம்.*

55. (1) பதிவாளருக்கு அல்லது அவர் கடிதம் மூலம் முறையாக அதிகாரம் வழங்கிய மாகாண கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தின் அதிகாரிகளுக்கு மாகாணத்தில் பதிவுசெய்யப்பட்ட அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் அல்லது யூனியன்களின் நடவடிக்கைகளுக்கு தொடர்புடைய சாதாரண சோதனைகளை நடாத்த அதிகாரமுண்டு. மேலும் பதிவாளர் அல்லது அவர் அதிகாரம்பெற்ற அல்லது பெற்றுக்கொள்ளும் ஒருவர் எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் சோதனைக்கு தொடர்புடைய புத்தகங்கள் மற்றும் ஆவணங்களை பெற்றுக்கொள்வதற்கு, சோதனை செய்வதற்கு, மீதமுள்ளவைகளை எண்ணுவதற்கு, கையிருப்பிலிருக்கும் பணத்தை பரிசீலனை செய்வதற்கு மற்றும் அதிகாரிகளிடம் மற்றும் ஊழியர்களிடம் தேவையான தகவல்களை விசாரிப்பதற்கும் வாக்குமூலம் பெறுவதற்கும் அதிகாரம் இருக்க வேண்டும்.

(2) பதிவாளர் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் சோதனை நடாத்துவதற்கான அதிகாரம் வழங்கிய அனைவரும் தண்டனைக் கோவையின்படி அரச ஊழியர்களாக கவனத்தில்கொள்ள வேண்டும்.

## *VIII ஆம் அத்தியாயம்*

### *பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் பதவி வகிப்பவர்களின் சேவையை இடைநிறுத்தல் அல்லது வேலையிலிருந்து விலக்கல், பதவிகளிலிருந்து அகற்றுதல் மற்றும் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் செயற்குழுவைக் கலைத்தல், செயற்குழுவுக்கு அங்கத்தவர்களைத் தெரிவுசெய்தல்*

சங்கங்கள் அல்லது யூனியன் களை கலைத்தல் மற்றும் செயற் குழு உறுப்பி னர்களை பதவி நீக்கம் செய்தல், சம்பளம் பெறும் அதிகாரிகளின் சேவைகளை இடைநிறுத்துதல் அல்லது பணி நீக்கம் செய்தல் மற்றும் சம்பளம் பெறும் அதிகாரி களை அகற்றுதல் போன்றவை.

56. (1) ஆம் உப பிரிவின் அடிப்படையிலான விசாரணையில் அல்லது 51 ஆம் பிரிவின் அடிப்படையிலான சோதனையில் அல்லது ஆராய்வின்பின் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழு அல்லது கூறப்பட்ட செயற்குழுவின் அங்கத்தவர் எவரேனும் தனது கடமையைச் சரிவர நிறைவேற்றுவது இல்லை என்பது பதிவாளரின் கருத்தாக இருந்தால் கூறப்பட்ட செயற்குழுவைக் கலைப்பதற்கு அல்லது கூறப்பட்ட செயற்குழு அங்கத்தவர் எவரையும் பதவியில் இருந்து அகற்ற அல்லது அது சம்பந்தமாக ஏதேனும் எதிர்ப்பு இருந்தால் அந்த எதிர்ப்பை எழுத்துமூலம் சமர்ப்பிப்பதற்காக அவர் கூறப்பட்ட செயற்குழுவிற்கு அல்லது கூறப்பட்ட செயற்குழுவின் உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கி முன்வைக்கப்பட்ட எழுத்துமூல முறைப்பாடாக இருப்பின் அவைகளைக் கவனத்தில் கொண்டபின்,

(அ) பதிவாளர் அல்லது அவர் அதிகாரம் வழங்கிய ஒருவர் அழைக்கப்படும் பொதுச்சபையில் விடயத்தை தெளிவுபடுத்தி, தவறுசெய்த செயற்குழுவை அகற்றி புதிய செயற்குழுவை நியமிக்கும்படி அல்லது செயற்குழுவின் ஒரு அங்கத்தவரை அகற்றி வேறு அங்கத்தவரை நியமிக்கும்படி உத்தரவிடலாம்.

(ஆ) மேலே (அ) உப பிரிவின்படி பொதுச்சபை செயற்படுமேயானால் செயற்குழுவைக் கலைக்க வேண்டும் என்ற நிலையில் பதிவாளர் கூறப்பட்ட செயற்குழுவைக் கலைத்து மூன்று அரச அதிகாரிகளை தற்காலிகமாக நிர்வாக சபையாக நியமிக்கலாம்.

அவ்வாறு நிர்வாக சபையொன்று நியமிக்கப்பட்ட பின் அதுவரை இருந்த செயற்குழு அங்கத்தவர்களின் செயற்குழு அங்கத்துவம் முடிவடைந்துவிடும். பதிவாளர் நியமிக்கப்படும் நிர்வாக சபையில் தலைவர், உபதலைவர் பதிவாளரால் தெரிவுசெய்யப்பட வேண்டும்.

(இ) 53 ஆம் பிரிவின் அடிப்படையிலுள்ள விசாரணையில் அல்லது 54 ஆவது பிரிவின் அடிப்படையிலுள்ள விசாரணையின் தீர்வாக மேலே (ஆ) உபபிரிவின்படி பதிவாளர் நியமிக்கும் தற்காலிக நிர்வாக சபை மூன்று மாதம் கடக்க முன் உபவிதி யாப்பிற்கு அனுகூலமாக பொதுச்சபையைக் கூட்டி புதிய செயற்குழுவை நியமிக்க வேண்டும். அவ்வாறு நியமிக்கப்படும் செயற்குழு அங்கத்தவர்களின் பதவிக்காலம் முதலில் இருந்த செயற்குழுவின் மீதமுள்ள பதவிக்காலத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படும்.

(2) இந்த நியதிச் சட்டத்தில் 53 ஆம் பிரிவின் அடிப்படையிலுள்ள விசாரணையில் அல்லது 54 ஆவது பிரிவின் அடிப்படையில் உள்ள சோதனையில் இல்லாவிடின் விசாரணையின்பின் ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் முறையாக நிறைவேற்ற அல்லது முன்னால் செயற்குழு அங்கத்தவர் தனது கடமையை முறையாக நிறைவேற்ற முடியாது என பதிவாளர் கருதுவாரேயானால் அவ்வாறான சந்தர்ப்பத்தில் செயற்குழு தொடர்பாக அல்லது கூறப்பட்ட செயற்குழுவின் முன்னாள் அங்கத்தவர் தொடர்பாக மேலே (1) ஆம் உப பிரிவின் நிபந்தனை பிரகாரம் செயற்படுவதன்பின் கடித மூலமாக உத்தரவின் மூலம் கூறப்பட்ட முன்னாள் செயற்குழுவுக்கு அல்லது ஏதேனும் அங்கத்தவர்களுக்கு கூறப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் அல்லது வேறு ஒரு கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவுக்கு உத்தரவு பிறப்பித்த நாளிலிருந்து ஐந்து வருடம் வரை, மீண்டும் தெரிவுசெய்யப்படுவதை தடை செய்வதற்கு பதிவாளர் உத்தரவு பிறப்பிக்க வேண்டும். அவ்வாறான உத்தரவிற்கு உட்படும் ஒரு நபர் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது யூனியனிற்கு தெரிவுசெய்யப்படுவது சட்டபூர்வமானதாக இருக்கக்கூடாது.

(3) மேலே (1) ஆம் உப பிரிவில் (அ), (ஆ) ஆம் உப பிரிவின் கீழ் வெளியிடும் உத்தரவின் அடிப்படையில் நியமிக்கப்படும் நிர்வாக சபை அல்லது செயற்குழுவில் ஒருவரின் பதவிக்காலம் 56 ஆம் பிரிவில் (1) ஆம் உப பிரிவின்கீழ் விலக்கப்பட்ட ஒருவரின் மீதமுள்ள பதவிக்காலத்திற்கு வரையறுக்கப்பட வேண்டும். அவ்வாறாயின் ஒரு பதிவுசெய்த கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் உபவிதி யாப்பிற்கு அனுகூலமாக பொதுச்சபையை ஸ்தாபித்து செயற்குழுவை நியமிக்கும்வரை, அவ்வாறு நியமிக்கப்படும் ஒருவரின் பதவிக்காலத்தை நீடிப்பதற்கு பதிவாளருக்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். மேலும் அவ்வாறான பொதுச்சபையை ஸ்தாபிப்பதற்காக தடை ஏற்படும் விதத்திலான ஏதேனும் உபவிதி யாப்பு நிபந்தனைகள் இருப்பின், குறிப்பிட்ட நிபந்தனைகளிலிருந்து விலகி பொதுச்சபைகளை ஸ்தாபிப்பதற்கு உகந்த உத்தரவைப் பிறப்பிக்க பதிவாளருக்கு அதிகாரம் உண்டு.

(4) பதிவாளர் மேலே (1) ஆம் உபபிரிவின் அடிப்படையில் ஒரு உத்தரவை பிறப்பிக்கும் வேளையில், அந்த உத்தரவில் அல்லது பின்னர் விதிக்கப்பட்ட உத்தரவின் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளை மற்றும் நிர்வாகத்தைக் கொண்டுசெல்ல பொருத்தமானவை மற்றும் சரியான ஒரவரை அல்லது அதற்கு மேலான எண்ணிக்கையானோரை நியமிக்க வேண்டும் என்பதுடன் அவ்வாறு நியமிக்கப்படும் ஒருவர் எவ்வேளையிலும் விலக்குவதற்கு அல்லது வேறு ஒருவரை நியமிப்பதற்கு அல்லது மேலதிகமாக ஒருவரை பதிவாளரால் நியமிக்கலாம்.

(5) பதிவாளரின் பொதுவான உத்தரவுக்கு மற்றும் நிர்வாகத்தின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் நடவடிக்கைகளை முகாமைத்துவம் மற்றும் நிர்வாகம் செய்வதற்கு இந்தப் பிரிவின்கீழ் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு-

(அ) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் இருப்பை அறவிடுவதற்கும் மற்றும் பிணைப்பை நிறைவேற்றுவதற்கும் அதன் நன்மைக்காக தேவைப்படக்கூடிய வேறு நடவடிக்கை எடுக்கக்கூடிய அதிகாரம் இருக்க வேண்டும். மேலும்,

(ஆ) கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் இயல்பாக கூட்டுத்தாபனப்படுத்திய செயற்குழுவுக்கு அங்கு அனைத்து அதிகார உரிமைகள் மற்றும் சலுகைகள் இருக்க வேண்டும். அத்துடன் அவைகளை செயற்படுத்தலாம். மேலும் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் பணிகள் செயற்திறன் மிக்கதாக முகாமைப்படுத்துவதற்காக தேவைப்படும் வேளையில் பொதுச்சபைக்குள்ள அதிகாரங்களுக்குள் அவ்வாறு தேவைப்படும் அதிகாரம் அந்தப் பொதுச்சபைக்கு வழங்கும் விதத்தில் இருக்க வேண்டும். அவைகளைச் செயற்படுத்தலாம்.

(6) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக இந்தச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்டவர்கள் சட்டத்திற்கு அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்புக்கு முரணாக செயற்பட்டால் அவ்வாறு செய்த ஏதேனும் ஒரு செயலினால் சங்கத்திற்கு ஏற்பட்ட நஷ்டத்திற்கு அல்லது இடையூறுக்கு அல்லது சங்கம் அல்லது யூனியனின் அதற்கு உட்பட்ட தண்டனைக்கு அந்நபர்கள் ஒட்டுமொத்தமாக அல்லது ஒவ்வொருவராக பொறுப்பாளியாவர்.

(7) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக இந்தப் பிரிவின்கீழ் பதிவாளரால் நியமிக்கப்பட்ட ஒருவருக்கு செலுத்தவேண்டிய ஊதியத்தை அவரே தீர்மானிக்கலாம். இந்த ஊதியம் மற்றும் இந்தச் சங்கத்தில் அல்லது யூனியனில் முகாமைத்துவத்தால் ஏற்றுக்கொள்ளவேண்டிய வேறு செலவுகள் இருப்பின் அந்தச் செலவை கூறப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் நிதியத்தால் செலுத்தப்படல் வேண்டும்.

(8) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கையை நிர்வகிப்பதற்கு இந்தப் பிரிவின்கீழ் நியமித்து மேலே (1) ஆம் உப பிரிவில் (இ) ஆம் பந்தியின் அடிப்படையிலான உத்தரவு, அதிகாரம் நிறுத்தும் தினத்திற்கு முன்னர் தினத்தில் பதவி வகிக்கும் ஒருவர் கூறப்பட்ட தினத்திற்கு முன் இந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பின்படி புதிய செயற்குழுவை நியமிப்பதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்வது அவரின் கடமையாகும்.

அதிகாரிகளின் சேவையை இடைநிறுத்துதல் அல்லது பதவி நீக்கம் செய்தல் போன்றவை.

57. (1) 53 ஆம் பிரிவின் அடிப்படையிலான சோதனையில் அல்லது 54 ஆம் பிரிவின் அடிப்படையிலான விசாரணையில் அல்லது கண்காணிப்பில் அல்லது 55 ஆம் பிரிவின் அடிப்படையிலான பொது விசாரணையின் பின் ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் ஒரு அதிகாரி அல்லது ஊழியர் தனது பணியைச் சரியான முறையில் நிறைவேற்றுவதில்லையென அல்லது செயற்திறனுடன் தம் பணியை நிறைவேற்றுவதற்கு பொருத்தமற்றது என அல்லது வேறு விதத்தில் செய்ய இயலாதது என அல்லது அந்தச் சங்கத்தில் யூனியனுக்குச் சொந்தமான நிதி அல்லது பொருள் வேறு சொத்துக்கு அல்லது நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் விதத்திலான செயற்பாடுகள் இடம்பெறுவதாக பதிவாளரின் கருத்தாக இருந்தால், இந்த நியதிச் சட்டத்தின் அல்லது வேறு எந்தவொரு சட்டத்தின் என்ன குறிப்பிட்டிருந்தாலும் தனது எதிர்ப்பை தெரிவிப்பதற்கு இந்தப் பதவி வகிப்பவருக்கு அல்லது ஊழியருக்கு சந்தர்ப்பம் வழங்கியபின் முறையான ஒழுக்காற்று நடவடிக்கை முடியும்வரை அவர் எழுத்துமூல உத்தரவு மூலமாக சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் அந்தப் பதவி வகிப்பவரின் அல்லது ஊழியரின் சேவை இடைநிறுத்த அல்லது வேலை நீக்கம் செய்யலாம். இந்த விசாரணையின்பின் அந்தப் பதவி வகிப்பவரை மற்றும் ஊழியரை பதவி நீக்கம் செய்யலாம்.

அவ்வாறாயின் இந்த உப பிரிவின்கீழ் விலக்கப்படுவதற்கான உத்தரவின் பேரில் அதிருப்தியைக் கொண்ட ஒரு ஊழியர் 30 நாட்களுக்குள் மாகாண சபை கூட்டுறவு ஆணைக்குழுவுக்கு அதற்கு எதிராக மேன்முறையீடு செய்யலாம்.

(2) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் பணிபுரிந்த அல்லது பணிபுரியும் அதிகாரி ஒருவருக்கு அல்லது ஊழியருக்கு எதிராக அவர் சேவை செய்த அல்லது பணிபுரியும் சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவால் ஏதேனும் ஒழுக்காற்று விசாரணை நடாத்த எண்ணினால் அதற்கு ஒரு பரிசோதகரை அல்லது அதிகாரிகளை நியமிப்பது, பதிவாளர் ஆலோசனையுடன் அல்லது பதிவாளர் தெரிவுசெய்பவர் மாத்திரமே. இவ்வாறான சந்தர்ப்பத்தில் பரிசோதகர் அதிகாரிகளை நியமனம் செய்வதற்கு பதிவாளர் அவ்வாறான தகைமையுடைய அதிகாரிகளின் குழாமை நடத்துவதற்கு பொருத்தமான செயற்றிட்டத்தில் ஈடுபட வேண்டும்.

(3) (1) ஆம் உப பிரிவின்கீழ் ஒரு பதவி வகிப்பவர் அல்லது விலக்கப்பட்ட ஊழியராக இருப்பாராயின், அந்த விலக்கப்படுவதற்கான உத்தரவை கூட்டுறவு ஊழியர் ஆணைச்சபை உறுதிப்படுத்தப்பட்டிருந்தால் இல்லாவிடின் 30 நாட்களுக்குள் இந்த உத்தரவுக்கு எதிராக மேன்முறையீடு செய்யாத சந்தர்ப்பத்தில் வேறு பதவி வகிப்பவர் அல்லது ஊழியர் சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் தெரிவுசெய்யப்படுவது அல்லது நியமிப்பது தொடர்பாக பொருத்தமான நிபந்தனைகள் பிரகாரம் செயற்படலாம்.

(4) மேலே (1) ஆம் உப பிரிவின்கீழ் பதிவாளர் எடுக்கும் முடிவின்படி பதவியிலிருந்து நீக்கத்துக்குட்பட்ட அல்லது பதவியிலிருந்து விலக்கப்படுவதற்கு ஆளாகிய ஒருவர் அந்த பந்தியில் குறிப்பிட்டுள்ள விசாரணையின் பின் குற்றமற்றவர் என நிரூபிக்கப்படுவதால் மீண்டும் சேவைக்கு அழைப்பதற்கு அல்லது வேலையிலிருந்து இடைநிறுத்திய காலத்திற்கான பாக்கி சம்பளத்தை அல்லது கொடுப்பனவை வழங்குவதற்கு தீர்மானித்தால் கூறப்பட்ட பாக்கிப் பணம் அவர் பணிபுரிந்த சங்கத்தால் அல்லது யூனியனால் செலுத்தப்பட வேண்டும்.

58. (1) அரச அல்லது மாகாண சபை நிதியத்தில் செயற்படும் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளை செயற்திறன்மிக்க முகாமைத்துவம் செய்வதை உறுதிப்படுத்தும் விடயத்துக்காக அல்லது இந்த சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அரசாங்கத்தால் அல்லது மாகாண சபையால் செய்யப்பட்ட முதலீடு அல்லது நிதியால், அல்லது பொருளால் கொடுக்கப்பட்ட முற்பணம் அல்லது பாதுகாப்பை அல்லது முகாமைத்துவம் மேற்கொள்வதற்கு அப்பதிவு செய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவுக்கு அங்கத்தவராக ஒரு எண்ணிக்கையானவர்களை தெரிவுசெய்வதற்குத் தேவையென அல்லது சந்தர்ப்பத்திற்கேற்பதென பதிவாளரின் கருத்தாக இருக்கும்போது இந்த நியதிச்சட்டத்தில் அல்லது வேறு ஒரு சட்டத்தில் அல்லது அதே சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்புகளில் அல்லது முரணாக என்ன குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ அவர் அவரின் கருத்துப்படி தேவைப்படும் அல்லது சந்தர்ப்பத்திற்கேற்ற விதத்தில் அந்தப் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் செயற்குழு அங்கத்தவராக ஒரு எண்ணிக்கையானோர்களைத் தெரிவுசெய்யலாம். அவ்வாறு தெரிவு செய்யப்படுபவர்களுக்கிடையில் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் தலைவர் அல்லது உப தலைவர் பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கலாம். அவ்வாறு தெரிவுசெய்யப்படுவதுடன் தற்சமயம் பதவி வகிப்பவரின் பதவி இரத்தாகிவிடும். அவ்வாறு இருப்பின் அவ்வாறு தெரிவுசெய்யப்படும் அங்கத்துவ எண்ணிக்கை இந்த செயற்குழு எண்ணிக்கையில் அரைவாசிக்குமேல் குறைய வேண்டும். *அரச நிதியம் செயற்படும் சங்கத்தை அல்லது யூனியனை முகாமைத்துவம் செய்தல்.*

(2) (அ) அரச அல்லது மாகாண சபை நிதியத்தில் செயற்படும் பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளை செயற்திறன்மிக்க முகாமைத்துவம் செய்வதை உறுதிப்படுத்தும் விடயத்துக்காக அல்லது இந்த சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அரசாங்கத்தால் அல்லது மாகாண சபையால் செய்யப்பட்ட முதலீடு அல்லது நிதியால், அல்லது பொருளால் கொடுக்கப்பட்ட முற்பணம் அல்லது பாதுகாப்பை அல்லது முகாமைத்துவம் மேற்கொள்வதற்கு அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்புக்களில் குறித்துரைக்கப்பட்ட பதவிக்காலம் முடிவடைந்தவுடன் அப்பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவுக்காக புதிய நிர்வாக சபையொன்று நியமிப்பது தேவையென அல்லது சந்தர்ப்பத்திற்கேற்பதென பதவிளாரின் கருத்தாக இருக்கும்போது இந்த நியதிச்சட்டத்தில் அல்லது வேறு ஒரு சட்டத்தில் முரணாக என்ன குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ மூன்று அரச அல்லது மாகாண சபை அதிகாரிகள் மூவர் கொண்ட நிர்வாக சபையொன்றை நியமிக்க பதிவாளருக்கு இயலுமாவதுடன், அவ்வாறு தெரிவுசெய்யப்படுபவர்களுக்கிடையில் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் தலைவர் அல்லது உபதலைவர் பதவிகளுக்கு ஆட்களை நியமிக்கலாம்.

(ஆ) மேலே (அ) உப பிரிவின்படி புதிய நிர்வாக சபையொன்று தெரிவுசெய்வதுடன் அச்சங்கத்தின் அல்லது யூனியனில் இருக்கிற செயற்குழு இரத்தாகிவிட வேண்டும். புதிய நிர்வாக சபையின் பதவிக்காலம் ஆறு மாதங்களுக்கு வரையறுக்கப்படல் வேண்டியதுடன் அவ்வாறு மாதத்திற்குள் சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பிற்கு அனுகூலமாக புதிய செயற்குழுவொன்றை தெரிவுசெய்வதற்கு புது நிர்வாக சபை செயற்பட வேண்டும்.

(இ) மேலே (அ) உப பிரிவின்படி தெரிவுசெய்யப்படும் நிர்வாக சபைக்கு அச்சங்கம் அல்லது யூனியனுக்காக சொத்துக்களை கையேற்பதற்கு அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் சொத்துக்களை முடிவுபெறச் செய்வதற்கு அல்லது ஆளணிக்காக ஊழியர்களை அல்லது அலுவலர்களை சேர்த்துக்கொள்வதற்கு அதிகாரம் இருக்கக்கூடாது.

(ஈ) வேறு ஒரு சட்டத்தில் முரணாக என்ன குறிப்பிடப்பட்டிருக்கின்றதோ, மேலே (அ) உப பிரிவின்படி நிர்வாக சபை தெரிவுசெய்வது நிறுத்துவதற்கு அல்லது தடுத்து நிறுத்தல் அல்லது அவ்வாறு தெரிவுசெய்யப்படும் நிர்வாக சபைக்கு அதிகாரமற்றிருப்பதற்கு அல்லது தடைப்படுத்துவதற்கு அல்லது கலைப்பதற்கு அல்லது அதனின் நடவடிக்கைகளை நிறுத்துவதற்குரிய அல்லது ஏதேனும் விடயமொன்ற தொடர்பில் அல்லது ஏதேனும் சிவில் நீதிமன்றமொன்றுக்கு நீதிமன்ற அதிகாரம் இருக்கக்கூடாது.

## IX ஆம் அத்தியாயம்

### பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தை அல்லது யூனியனைக் கலைத்தல்

59. (1) 53 ஆம் பிரிவின்கீழ் விசாரணையின் பின் அல்லது 54 ஆம் பிரிவின்கீழ் விசாரணையின் அல்லது கண்காணிப்பின் அல்லது பதிவுசெய்த ஒரு சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்களில் நான்கில் மூன்று பங்கினர் சங்கத்தை அல்லது யூனியனை கலைக்கும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டபின் மற்றும் அந்த சங்கத்தில் அல்லது யூனியனில் தனது எதிர்ப்பை தெரிவிப்பதற்கு, சங்கத்தின் அல்லது யூனியனின் கடன்காரர்களுக்கு சந்தர்ப்பம் வழங்கிய பின், சங்கத்தை அல்லது யூனியனைக் கலைக்க வேண்டும் என பதிவாளர் எண்ணினால், அவருக்கு எழுத்துமூல உத்தரவு பிறப்பிப்பதன் மூலம் சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவை இரத்துச் செய்யலாம். *கலைத்தல்.*

(2) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் ஒரு அங்கத்தவர் அல்லது ஒரு கடன்காரர் (1) ஆம் பிரிவின் அடிப்படையிலான உத்தரவு பிறப்பித்த நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் இந்த உத்தரவிற்கு எதிராக அமைச்சரிடம் மேன்முறையீடு செய்யலாம்.

(3) கூட்டுறவுச் சங்கத்தில் அல்லது யூனியனில் பதிவை இரத்துச்செய்ய உத்தரவிடும் நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் எவ்வித மேன்முறையீடும் செய்யாத வேளையில் அந்த உத்தரவு காலம் சென்றபின் செயற்பட வேண்டும். இரண்டு மாதத்திற்குள் மேன்முறையீடு செய்த சந்தர்ப்பத்தில் மேன்முறையீட்டின் பின் உத்தரவு உறுதிசெய்யப்படும் வரை அந்த உத்தரவை நடைமுறைப்படுத்தக் கூடாது.

(4) கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவை பதிவாளர் (1) ஆம் உபபிரிவின்கீழ் இரத்துச் செய்யப்படும் சந்தர்ப்பத்தில் சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவை இரத்துச்செய்யும் உத்தரவை செயற்படுத்தும் வரை அல்லது மேன்முறையீட்டில் அமைச்சர் அந்த உத்தரவை இரத்துச்செய்யும் வரை அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் வேறு சொத்துக்கள் போன்றவற்றை பொறுப்பேற்க மற்றும் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் நடவடிக்கைகளை நிர்வகிப்பதற்காக ஒருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களை பதிவாளர் நியமிக்கலாம். அந்நபர் அல்லது நபர்களை நியமிக்கப்பட்டதும் சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழு அச்சங்கத்தின் அல்லது யூனியனின் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் வேறு சொத்துக்களுக்கு பொறுப்பாக இருக்கும் வேறு ஒருவரால் அந்தப் புத்தகங்கள், ஆவணங்கள் மற்றும் சொத்துக்கள் முதலில் குறிப்பிட்ட நபருக்கு அல்லது நபர்களுக்கு பொறுப்பளிக்க வேண்டும். புதிவு இரத்துச் செய்யும் உத்தரவு செயற்படும்வரை அல்லது அமைச்சர் மேன்முறையீட்டில் அந்த உத்தரவை இரத்துச்செய்யும் வரை செயற்குழு செயற்படக் கூடாது.

சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவை இரத்துச் செய்தல்.

60. பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவு–

(அ) அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்கள் குறைந்தபட்சம் இருபது பேராவது இருக்க வேண்டுமென பதிவுசெய்யும் நிபந்தனையில் இருக்கும் வேளையில் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை இருபதுக்கு குறைவாக இருப்பின்,

அல்லது

(ஆ) அந்தச் சங்கம் அல்லது யூனியன் பதிவுசெய்த நாளிலிருந்து ஒரு வருட காலப்பகுதியில் பதிவுசெய்யப் பட்ட சங்கம் அல்லது யூனியன் அதன் நோக்கத்தை அடைவதற்காக ஆரம்பிக்கப்படவில்லை யென்றால்,

அல்லது

(இ) இதன் அடிப்படையில் இரத்துச்செய்வதற்கான உத்தரவைப் பிறப்பிக்கும் முன் இரண்டு வருட காலப்பகுதிக்குள் அந்தச் சங்கம் அல்லது யூனியன் செயற்படாது இருந்தால்,

பதிவாளரின் கடிதமூல உத்தரவின் மூலமாக அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவை இரத்துச்செய்யலாம்.

பதிவை இரத்துச் செய்வதன் தாக்கங்கள்.

61. பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் பதிவு 59 ஆம் பிரிவின்படி அல்லது 60 ஆம் பிரிவின் அடிப்படையிலான உத்தரவின் மூலம் இரத்துச் செய்யப்படும் வேளையில், இங்கு இதற்கு முன் கலைக்கும் திகதியாக குறிப்பிடும் அந்த உத்தரவு நடைமுறைப்படுத்தும் நாளிலிருந்து சங்கம் அல்லது யூனியன் கூட்டுத்தாபனமாக இருப்பது நிறுத்தப்பட வேண்டும். அவ்வாறாயின் இந்நியதிச் சட்டத்தின் அல்லது இந்த நியதிச் சட்டத்தின் அடிப்படையில் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு வழங்கப்பட்ட சலுகைகளை பதிவாளர் இந்த சங்கத்திற்காக அல்லது யூனியனுக்காக நியமிக்கப்பட்ட ஒரு முடிவுபெறச் செய்பவருக்கு அல்லது முடிவுபெறச் செய்பவர்களுக்கு கையளிக்கப்பட்டதாய் கவனத்தில் கொள்ள வேண்டும்.

சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவை இரத்துச் செய்தபின் முற்றுப்பெறச் செய்தல்.

62. 59 ஆம் பிரிவின் அல்லது 60 ஆம் பிரிவின்கீழ் சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவை இரத்துச்செய்யும் வேளையில் இந்த சங்கத்தை அல்லது யூனியனை மூடுபவர்கள் ஒருவர் அல்லது ஒருவருக்கு மேற்பட்டவர்களை பதிவாளர் நியமிக்கலாம். சமயத்திற்கேற்ப 59 ஆம் பிரிவின் அல்லது 60 ஆம் பிரிவின் அடிப்படையில் இரத்துச்செய்யும் உத்தரவை செயற்படுத்தும் தினத்தில் சங்கத்தின் அல்லது யூனியனின் அனைத்து சொத்துக்களையும் முடிவுபெற செய்பவர்களிடம் கையளிக்கப்படல் வேண்டும் :-

முற்றுப்பெறச் செய்பவரின் அதிகாரம்.

63. (1) 62 ஆம் பிரிவின்படி நியமிக்கப்படும் மூடுபவர் பதிவாளரின் வழிகாட்டலும், மற்றும் நிர்வாகத்திற்கு 64 ஆம் பிரிவின் அடிப்படையிலான உத்தரவின்மூலம் பதிவாளர் நிர்ணயிக்கும் ஏதேனும் வரையறைகளின் அடிப்படையின் கீழ்க்காணும் விடயங்களை செயற்படுத்தும் அதிகாரம் இருக்க வேண்டும் :-

(அ) சங்கத்தின் அல்லது யூனியனின் இறுப்புக்கு சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்கள் அல்லது முன்னாள் அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்கள் அல்லது முன்னாள் ஊழியர்கள் செலுத்தவேண்டிய அல்லது சங்கத்தில் அல்லது யூனியனில் இறந்துபோன அங்கத்தவர்கள் மற்றும் ஊழியர்களின் சொத்துக்களிலிருந்து கிடைக்கும் பங்களிப்பு பணத்தைக் காலத்துக்குக்காலம் நிர்ணயிப்பது.

(ஆ) சங்கத்தின் அல்லது யூனியனின் புத்தகங்களில் அதுவரை குறிப்பிடப்படாத கடன்காரர்கள் தனது உரித்தை வெளிப்படையாக உள்ளடக்கப்படுவதற்காக அவர்களைச் சமர்ப்பிப்பது அல்லது அவர்களின் உரித்தை வெளிப்படையாக உறுதிசெய்து கொள்வதற்குமுன், செய்யப்படும் இறுப்பை பகிர்ந்து கொடுப்பதால் அந்தக் கடன்காரர் கைவிடப்படவேண்டியது ஒரு குறிப்பிட்ட தினத்துக்கு முன்பாகவோ, அந்த தினத்தை வாக்குறுதியால் அல்லது அறிவித்தல் மூலம் நிர்ணயிப்பது.

(இ) கடன்காரர்களுக்கிடையில் தோன்றும் முக்கியத்துவம் தொடர்பாக ஏதேனும் பிரச்சினையை இந்த நியதிச் சட்டத்தின் நிபந்தனைகளுக்கு அனுகூலமாக தீர்மானித்தல்.

(ஈ) 68 ஆம் பிரிவில் குறிப்பிட்டுள்ள ஏதேனும் விபரங்களின் சச்சரவுகளை (சங்கம் அல்லது யூனியன் தொடர்பாக இங்கு குறிப்பிட்டுள்ளவைகள் மூடுபவர் தொடர்பாக குறிப்பிட்டுள்ளதாக விளங்கிக்கொண்டு) இந்தப் பிரிவின்கீழ் தீர்த்துக்கொள்வதற்காக அனுப்புவது மற்றும் சங்கம் அல்லது யூனியனுக்காக தனது பெயரில் அல்லது பதவியில் சிவில் வழக்கு மற்றும் வேறு சட்ட நடவடிக்கை எடுப்பது மற்றும் சட்ட நடவடிக்கையில் எதிர்வாதம் சமர்ப்பித்தல்.

(உ) மூடுவதற்கான கட்டணம் எவரிடம் மற்றும் எந்தளவிலான தொகையை ஏற்பது என தீர்மானிப்பது.

(ஊ) சங்கத்தில் அல்லது யூனியனில் கணக்குகளைப் பார்த்து மூடும்போது தேவையான இருப்பை சேகரித்து பகிர்ந்தளிப்பதற்கான உத்தரவை பிறப்பித்தல்.

(எ) பதிவாளரின் அங்கீகாரம் ஏற்கனவே கிடைத்திருந்தால் சங்கம் அல்லது யூனியன் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு எதிராக சமர்ப்பித்த வெளிப்படையான உரித்தை விட்டுக்கொடுத்தல் மூலம் இணக்கத்தை ஏற்படுத்தல்.

(ஏ) மூடுவதை முறையாக செய்வதற்குத் தேவையான அங்கத்தவர்களின் பொதுச்சபையைக் கூட்டல்.

(ஐ) சங்கத்தின் அல்லது யூனியனின் புத்தகங்களை, ஆவணங்களை மற்றும் இருப்பை தன்வசம் கொள்ளல்.

(ஒ) சங்கத்தின் அல்லது யூனியனின் சொத்துக்களை விற்று மற்றும் முடிவுபெறச் செய்வதில் சேகரிக்கப்படும் சகல பணத்தையும் பதிவாளர் உத்தரவிடும் வகையில் சேமித்து வைத்தல்.

(ஓ) நன்மையடையக்கூடிய விதத்தில் கணக்கைப் பார்த்து மூடிவிடுவதற்காக தேவைப்படும் கூடுமான அளவு சங்கத்தின் அல்லது யூனியனின் பணிகளை நடத்துதல் அவ்வாறாயின் சங்கத்தின் அல்லது யூனியனின் மூடுபவருக்கு ஒரு கடன் தொகையை வழங்குவதற்காக இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளவைகளிலிருந்து வழங்க உரிமை இருக்கக் கூடாது. மேலும்,

(ஔ) பதிவாளர் இருப்பை பகிர்ந்தளிக்கும் பிரேரணை முறைமையை அங்கீகரிக்கும்போது சங்கத்தின் அல்லது யூனியனின் இருப்பை இலகுவாக்கும் விதத்தில் பங்கிடுவதற்கான விடயங்களைத் தயார்படுத்தல்.

(2) 59 ஆம் பிரிவின் அல்லது 60 ஆம் பிரிவின் அடிப்படையில் பதிவு இரத்துச்செய்யப்படும் சங்கத்தில் அல்லது யூனியனில் ஒரு உறுப்பினர் அல்லது முன்னாள் உறுப்பினர், ஊழியர் அல்லது முன்னாள் ஊழியர் ஏதேனும் கடனை அல்லது வேறு ஒரு பணத்தைச் செலுத்துவதற்கு இருப்பின் அல்லது அந்நபர் இரத்துச்செய்யப்பட்ட தினத்துக்குப் பின் இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட வேறு ஒரு சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்தவராகும் சந்தர்ப்பத்தில், 62 ஆம் பிரிவின்படி நியமிக்கப்படும் முதல் குறிப்பிட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் முடிவை செய்தவருக்கு பதிவாளரின் வழிகாட்டல் மற்றும் நிர்வாகத்திற்கு மற்றும் 64 ஆம் பிரிவின்கீழ் பிறப்பிக்கும் உத்தரவு மூலம் பதிவாளர் நிர்ணயிக்கும் வேறு வரையறைக்கும் உட்பட்டு அந்நபருக்கு வேறு சங்கத்தால் அல்லது யூனியனால் கிடைக்கவேண்டிய பணத்தில் அந்தக் கடனுக்கு அல்லது வேறு ஒரு பணத்துக்கு அதிகப்படாத பணம் அந்த உறுப்பினரிடமிருந்து வேறு ஒரு சங்கத்துக்குக் கிடைக்கவேண்டிய கடனாக அறவிட்டு அந்தப் பணத்தை மூடுபவருக்கு அனுப்புமாறு, அந்த வேறு சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு உத்தரவிடும் அதிகாரம் இருக்க வேண்டும்.

(3) இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் நியமிக்கப்பட்ட ஏதேனும் ஒரு மூடுபவருக்கு, அதற்காக உருவாக்கக்கூடிய விதிகளின் அடிப்படையில் இப்பிரிவின் செயற்பாடுகளை நடாத்துவதற்காக ஏதேனும் போதுமான அளவு அதிகாரத்தால், மாவட்ட நீதிமன்றம் சம்பந்தமாக சிவில் கட்டளைச் சட்டத்திற்கு இணங்க நிபந்தனைகளை உருவாக்கியுள்ள விதத்திலேயே மற்றும் (தேவையான அளவு மாத்திரம்) அவ்வாறே அப்பிரிவினர் மற்றும் சாட்சியாளர்களை அழைப்பதற்கு மற்றும் சமுகமளிக்கும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துவதற்கு, ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு அவர்களைக் கட்டாயப்படுத்தும் அதிகாரம் இருத்தல் வேண்டும்.

முடிவுபெறச் செய்வதை கட்டுப்படுத்துவதற்கு பதிவாளர் கொண்டுள்ள அதிகாரம்.

64. (1) முடிவுபெறச் செய்பவர் பதிவாளரின் கட்டுப்பாட்டுக்கு மற்றும் உத்தரவின் அடிப்படையில் தனது அதிகாரத்தை நடைமுறைப்படுத்துவதுடன்–

(அ) முடிவுபெறச் செய்பவர் விடுக்கும் நிபந்தனையை நிறுத்தி அல்லது மாற்றி தேவையான ஏதேனும் புதிய உத்தரவைப் பிறப்பிக்கவும்,

(ஆ) முடிவுபெறச் செய்பவரை பதவியிலிருந்து விலக்குவதற்கும்,

(இ) சங்கத்தின் அல்லது யூனியனின் சகல புத்தகங்களையும் ஆவணங்களையும் மற்றும் இருப்புகளையும் ஒப்படைக்குமாறு உத்தரவிடுவதற்கும்,

(ஈ) 63 ஆம் பிரிவின் அடிப்படையில் முடிவுபெறச் செய்பவரின் அதிகாரத்தை ஆவணத்துடன்கூடிய உத்தரவின் மூலம் வரையறுத்தலுக்கும்,

(உ) கணக்கை காண்பிக்கும்படி முடிவுபெறச் செய்பவருக்கு தனது எண்ணப்படி உத்தரவைப் பிறப்பிக்கவும்,

(ஊ) முடிவுபெறச் செய்பவரின் கணக்கை கணக்காய்வு செய்தல் மற்றும் சங்கத்தின் அல்லது யூனியனின் இருப்புகளை பகிர்ந்தளிப்பதற்கு அதிகாரம் வழங்குவதற்கும்,

(எ) முடிவுபெறச் செய்பவரின் ஊதியம் வழங்குவதற்கு உத்தரவைப் பிறப்பிக்க மற்றும்,

(ஏ) முடிவுபெறச் செய்பவர் மற்றும் எவரேனும் மூன்றாம் பிரிவினருக்கிடையில் இடம்பெற்ற (63 (1) (ஈ) உப பிரிவின்படி தீர்த்துக்கொள்வதற்கு இயலாத பிணக்கு) ஏதேனும் ஒரு பிணக்கை அதைத் தீர்ப்பவர் வழங்கும் தீர்ப்பிற்கு உட்படுவதற்கு அந்தப் பிரிவினர் எழுத்துமூல விருப்பை தெரிவிப்பாராயின், தீர்த்துக்கொள்வதற்காக பதிவாளர் அனுப்பலாம்.

(2) பதிவாளர் "முடிவுபெறச் செய்தல்" என்ற கணக்கைத் திறந்து முடிவுபெறச் செய்பவர் சேகரிக்கும் எல்லாப் பணத்தையும் இந்தக் கணக்கில் இடவேண்டும். முடிவுபெறச் செய்பவர்களின் அனைத்துப் பணமும், கிரயமும் மற்றும் செலுத்துவது தொடர்பான செலவை அந்த கணக்கு மூலம் ஏற்கவேண்டும்.

தீர்மானம் செயற்படுத்தல்.

65. (1) 63 ஆம் பிரிவின் அடிப்படையில் தனக்கு அனுப்பப்பட்ட ஒரு விடயம் தொடர்பாக தீர்த்துவைப்பவரின் தீர்ப்பில், பிரிவினர் இணைந்து இருக்கவேண்டும். அந்த பிரிவின் அடிப்படையில் பதிவாளர் விடுத்த உத்தரவை செயற்படுத்தும் விதத்தில் அந்தத் தீர்மானம் செயற்படுத்த வேண்டும்.

(2) தீர்ப்பவர் அல்லது பதிவாளர் 63 ஆம் பிரிவில் அல்லது 64 ஆம் பிரிவின்கீழ் அல்லது விடுக்கப்பட்ட உத்தரவும் எந்தவொரு சிவில் நீதிமன்றத்திலேயும் கேள்விகள் கேட்கக் கூடாது. அந்தச் சங்கத்தை அல்லது யூனியனை பதிவுசெய்த அலுவலகம் அமைந்துள்ள இடம் தொடர்பாக நீதிமன்ற அதிகாரத்தைக் கொண்ட ஒரு சிவில் நீதிமன்றம் மூலமாக அந்த நீதிமன்ற தீர்ப்பை செயற்படுத்தும் விதத்தில் அந்த உத்தரவை செயற்படுத்த வேண்டும்.

(3) அவ்வாறாயின் பதிவை இரத்துச்செய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது கடனான கூட்டுறவுச் சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு அல்லது ஒரு வங்கிக்கு அல்லது வேறு நிறுவனத்திற்கு மூடுபவர் அல்லது பதிவாளர் 63 ஆம் பிரிவில் அல்லது 64 ஆம் பிரிவின் அடிப்படையில் விடுக்கும் உத்தரவிற்கு எதிராக அந்த முடிவுபெறச் செய்பவர் அல்லது பதிவாளரின் உத்தரவு பிறப்பித்த நாளிலிருந்து இரண்டு மாதத்திற்குள் அமைச்சருக்கு மேன்முறையீடு செய்வதற்கு உரிமை இருக்க வேண்டும்.

(4) 63 ஆம் பிரிவின் அல்லது 64 ஆம் பிரிவின் அடிப்படையில் மூடுபவர் அல்லது பதிவாளர் உத்தரவு பிறப்பித்தபின் இரண்டு மாதத்திற்குள் அமைச்சருக்கு எவ்வித மேன்முறையீட்டைச் சமர்ப்பிக்காத சந்தர்ப்பத்தில் அந்த முடிவுபெறச் செய்பவர், அந்த பதிவாளரின் அந்த உத்தரவு அந்தக் காலப்பகுதியின் பின் நடைமுறைப்படுத்த வேண்டும். இரண்டு மாதத்திற்குள் அமைச்சருக்கு மேன்முறையீடு சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் அமைச்சர் தீர்வை வழங்கும் வரை முடிவுபெறச் செய்பவரின் அல்லது பதிவாளரின் உத்தரவை அமுல்படுத்தக் கூடாது.

சிவில் நீதிமன்றத்தின் நீதிமன்ற அதிகாரத்தை வரையறை செய்தல்.

66. இங்கு முதலில் தெரிவித்த நிபந்தனை அமைத்த அளவைத் தவிர இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தை அல்லது யூனியனை கலைப்பதற்கான ஏதாவது விடயம் தொடர்பாக எந்தவொரு சிவில் நீதிமன்றத்திற்கும் நீதிமன்ற அதிகாரமும் இருக்கக் கூடாது.

முடிவுபெறச் செய்வதை நிறைவு செய்தல்.

67. (1) பதிவு இரத்துச்செய்யப்பட்ட சங்கத்தை அல்லது யூனியனை முடிவு செய்யும்போது சேகரித்த நிதியம் 43 (2) ஆம் உப பிரிவின் நிபந்தனைகளின் அடிப்படையில் முதலில் முடிவு செய்யும் கட்டணங்களுக்காகவும், அடுத்ததாக அரசாங்க அல்லது மாகாண சபையில் கடன் மற்றும் அரசாங்கத்தின் அல்லது மாகாண சபைக்கு பிணைக்கடனை மறுபடியும் மீளச் செலுத்துவதற்கும், அதன்பின் சங்கத்தில் அல்லது யூனியனில் வேறு பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்கும், அதன்பின் பங்கு முதலீட்டைச் செலுத்துவதற்கும், பின்னர் சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பில் அனுமதி கிடைத்தால் இலாபத்தை பிரிக்கப்பட்டு கிடைக்காத காலப்பகுதிக்காக வருடத்துக்கு நூற்றுக்கு பத்து வீதத்துக்குக் கூடாத அளவிலான இலாபத்தைச் செலுத்துவதற்காகவும் இலாபத்துக்காக பொருத்தமானதை செய்த காலப்பகுதிக்காக அக்காலப்பகுதியை கலைக்கப்படும் திகதிக்கு முன்னர் என்ற சந்தர்ப்பத்தில் அங்கத்தவர்களின் தள்ளுபடி செலுத்துவதற்காக ஈடுபட வேண்டும்.

(2) சங்கத்தின் அல்லது யூனியனின் முடிவு செய்வதை நிறைவுசெய்த மற்றும் அச்சங்கத்தின் அல்லது யூனியனின் ஒரு கடன்காரரால், இருப்பைப் பகிர்ந்தளிக்கும் திட்டத்தின்கீழ் தனக்குக் கிடைக்க வேண்டியவைகள் தொடர்பாக உரித்தை வெளிப்படுத்தாத அல்லது அது அவருக்குக் கிடைக்காமல் போகும்போது முடிவு செய்வதை நிறைவுசெய்யும் அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரிக்க வேண்டும். மேலும் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் நிதியம் தொடர்பாக அல்லது ஒரு உரித்துக்கான தள்ளுபடி தொடர்பாக எந்தவொரு வழக்கும் அந்த அறிவித்தலை வர்த்தமானியில் பிரசுரிக்கும் நாளிலிருந்து மூன்று மாதத்திற்குள் ஆரம்பித்தாலே தவிர நடத்திக்கொண்டு செல்லக்கூடாது.

(3) (1) ஆம் உப பிரிவில் உறுதியாக குறிப்பிட்டுள்ள விடயங்களுக்காக மற்றும் (2) ஆம் உப பிரிவின் அடிப்படையில் வழக்குத் தொடுத்த ஒரு உரிமை தள்ளுபடி செலுத்துவதற்கு பணத்தைச் செலுத்தி மீதப்படும் மேலதிகத்தை அந்தச் சங்கம் அல்லது யூனியன் கலைக்கப்படும் தினத்தில் அங்கு பதவி வகித்தவர்களால் பதிவாளரின் அங்கீகாரத்துக்கு உட்பட்டு தெரிவுசெய்யக்கூடிய பிரதேச மக்கள் உபகார நோக்கத்துக்கு பயன்படுத்தலாம். சங்கத்தின் அல்லது யூனியனின் முடிவு செய்த தினத்தின் பின் மூன்று மாதத்திற்குள் பதிவாளர் அங்கீகரித்த மேல் குறிப்பிட்டுள்ள நோக்கத்தை தெரிவுசெய்வதை அவர்கள் தவறவிட்டால் பதிவாளர் அந்த மேலதிகமானதை வங்கியில் அல்லது பதிவுசெய்த சங்கத்தில் சேமிக்க வேண்டும். அவ்வாறு சேமித்த மேலதிகமானதை இந்த நியதிச்சட்டத்தின் பணிகளுக்காக நிறுவக்கூடிய மேலதிக நிதியத்துக்குச் செலுத்தலாம். நியதிகளின் நிபந்தனைகளை ஏற்படுத்தக்கூடிய ஒரு விடயத்துக்காக அவ்வாறு நியதிகளை ஏற்படுத்தக்கூடிய மேலதிக நிதியத்தை செலவு செய்வது பதிவாளரின் விருப்பத்தின் பேரில் செய்யலாம். அவ்வாறாயின் மேலதிகமானதிற்கு சேரும் வட்டியை கூட்டுறவு நிதியத்துக்குச் செலுத்தலாம்.

(4) இந்த அத்தியாயத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு பணியை நிறைவேற்றுவது அல்லது அதற்காக நியமிக்கப்படுவது எவரேனும் ஒருவராயின் அவர் அல்லது அவர்கள் 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் கொண்ட குற்றவியல் நீதிக்கோவையின்படி அரச ஊழியராக வேண்டும்.

## X ஆம் அத்தியாயம்

### பிணக்குகள்

68. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் வியாபாரம் தொடர்பாக ஏதேனும் பிணக்கு ஒன்றில் :- பிணக்குகள்.

(அ) அங்கத்தவர்கள் முன்னாள் அங்கத்தவர்கள் மற்றும் இணைந்த அங்கத்தவர்கள் முன்னாள் அங்கத்தவர்கள் மற்றும் இறந்துபோன அங்கத்தவர்கள் மூலமாக உரித்தை வெளிப்படுத்தும் நபர்களுக்கிடையில் அல்லது, சங்கத்தின் அல்லது யூனியனின் கடந்தகால அல்லது நிகழ்கால பதவி வகிப்பவர்கள் அல்லது ஊழியர்களுக்கிடையில் அல்லது இறந்துபோன பதவி வகித்தவர்கள் அல்லது ஊழியர்களின் வாரிசுகள் அல்லது சட்டபூர்வமான பிரதிநிதிகளுக்கிடையில், அல்லது

(ஆ) அங்கத்தவர் அல்லது முன்னாள் அங்கத்தவர் அல்லது இறந்துபோன அங்கத்தவர் மூலம் உரித்தை வெளிப்படுத்தும் ஒருவர் மற்றும் சங்கம், அதன் செயற்குழு அல்லது அதில் கடந்தகாலத்தில் பதவி வகித்தவர் அல்லது நிகழ்கால பதவி வகிப்பவர் அல்லது ஊழியர் அல்லது இறந்துபோன பதவி வகித்தவர் அல்லது ஊழியரின் வாரிசுகள் அல்லது சட்டபூர்வமான பிரதிநிதிகளுக்கிடையில், அல்லது

(இ) சங்கம் அல்லது யூனியன் அதன் செயற்குழு மற்றும் சங்கத்தின் அல்லது யூனியனின் கடந்தகால பதவி வகித்தவர் அல்லது நிகழ்கால பதவி வகிப்பவர் அல்லது ஊழியர் அல்லது இறந்துபோன பதவி வகித்தவரின் அல்லது ஊழியரின் வாரிசுக்கு அல்லது சட்டபூர்வமான பிரதிநிதிகளுக்கிடையில்,

(ஈ) சங்கம் அல்லது யூனியன் அதன் செயற்குழு, மற்றும்

(i) வியாபாரத்தில் அல்லது அதில் ஒரு பங்கு அந்த சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு ஒப்படைக்கப்பட்ட வேறு ஒரு சங்கத்தில் அல்லது யூனியனில் அங்கத்தவரை அல்லது பதவி வகிப்பவரை அல்லது ஊழியராக இருந்த ஒருவரை,

(ii) (1) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர் அல்லது முன்னாள் அங்கத்தவர் அல்லது இறந்துபோன அங்கத்தவர் மூலமாக உரித்தை வெளிப்படுத்தும் ஒருவர்,

(iii) (1) ஆம் உப பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள சங்கத்தில் அல்லது யூனியனில் பதவி வகிப்பவரின் அல்லது ஊழியரின் வாரிசு சட்டபூர்வமான பிரதிநிதியாகும் ஒருவருடன், அல்லது

(உ) சங்கத்திற்கும் மற்றும் பதிவுசெய்யப்பட்ட வேறு ஒரு சங்கத்திற்கிடையே ஏற்படுமானால், தீர்வுக்காக அந்த பிணக்கை பதிவாளரிடம் ஒப்படைக்க வேண்டும்.

கடந்தகால, நிகழ்கால அங்கத்தவரிடம், பதவி வகிப்பவரிடம் அல்லது ஊழியரிடம் அல்லது இறந்துபோன அங்கத்தவருடைய, பதவி வகிப்பவருடைய அல்லது ஊழியருடைய தெரிவுசெய்யப்பட்ட ஒருவரிடமிருந்து, வாரிசுவிடமிருந்து அல்லது சட்டபூர்வ பிரதிநிதியிடமிருந்து, பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு கிடைக்கவேண்டிய ஒரு கடன் வேண்டுகோள் அல்லது நட்டத்திற்காக அந்த சங்கம் அல்லது யூனியனின் முன்வைக்கும் உரித்தை வெளியிடுதல் அல்லது பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் கடந்தகால மற்றும் நிகழ்கால பதவி வகிப்பவரிடம் அல்லது ஊழியரிடம் அல்லது அங்கத்தவரிடம் அங்கத்தவருக்கு அல்லது ஊழியருக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனில் இறந்துபோன அங்கத்தவரின், பதவி வகிப்பவரின் அல்லது ஊழியரின் தெரிவுசெய்யப்படும் ஒருவருக்கு வாரிசுக்கு அல்லது சட்டபூர்வமான பிரதிநிதிக்கு கிடைக்கவேண்டிய கடன், வேண்டுகோள் நட்டத்திற்காக சமர்ப்பிகக்பபட்ட உரித்து வெளிப்பாடு அந்தக் கடன் கேட்டலை அல்லது நட்டத்தை ஏற்றுக்கொண்டாலும், ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் இந்த உப பிரிவின்படி வியாபாரம் சம்பந்தப்பட்ட சர்ச்சையாக கணிக்கப்பட வேண்டும்.

(2) பதிவாளர் மேலே (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் குறிப்பு கிடைத்தபின்,

(அ) தான் அந்த பிணக்கு தொடர்பாக முடிவு செய்யலாம், இல்லாவிடின்

(ஆ) அதற்கு அல்லது பொருத்தமானதை செய்வதற்காகத் தீர்த்துவைக்கக்கூடியவர் அல்லது தீர்த்துவைக்கக்கூடியவர்களிடம் அனுப்பலாம்.

(3) தீர்த்து வைப்பவரின் அல்லது தீர்த்து வைப்பவர்களின் தீர்ப்பில் அதிருப்தியடையும் ஒருவர், அந்தத் தீர்ப்பை வழங்கிய தினத்திலிருந்து முப்பது நாட்களுக்குள் அதுபற்றிய மேன்முறையீட்டை பதிவாளருக்கு சமர்ப்பிக்கலாம். அவ்வாறான மேன்முறையீட்டில் அதற்கான போதுமான காரணங்கள் உள்ளடக்கப்பட எழுத்துமூல மேன்முறையீடாக இருத்தல் வேண்டும். மேலும் முறைப்பாட்டாளர் மேன்முறையீடு செய்வாரேயானால் அவர் சர்ச்சைக்குரிய விடயத்தின் பெறுமதியில் நூற்றில் பத்தையும், பிரதிவாதி மேன்முறையீடு செய்வாரேயானால் தீர்ப்பளிக்கப்பட்ட தொகையில் நூற்றுக்கு பத்து வீதத்தை மேன்முறையீடு வைப்பாக பதிவாளரிடம் வைக்க வேண்டும். அவ்வாறாயின் அவ்வாறான வைப்பின் ஆகக்கூடியது பத்தாயிரத்துக்கு மேற்படக்கூடாது.

(4) மேலே (3) ஆம் உப பிரிவின் அடிப்படையில் பதிவாளரிடம் ஒரு மேன்முறையீட்டைச் சமர்ப்பித்த எந்தவொரு தரப்பினரும் அந்த தரப்பினரால் அல்லது பிரதிநிதியூடாக பதிவாளரின் எதிரில் இருந்து அந்த மேன்முறையீடு தொடர்பான விடயங்களைக் கூறுவதற்கு உரிமை இருக்கக் கூடாது.

(5) மேலே (2) ஆம் உப பிரிவின் அடிப்படையில் அல்லது (3) ஆம் உப பிரிவின் அடிப்படையிலான மேன்முறையீட்டில் பதிவாளரின் தீர்ப்பு இறுதித் தீர்மானமாக இருக்க வேண்டும். அது தொடர்பாக சிவில் நீதிமன்றத்தில் கேள்வி எழுப்பக் கூடாது.

(6) மேலே (2) ஆம் உப பிரிவின் அடிப்படையில் தீர்ப்பவரின் அல்லது தீர்ப்பவர்களின் தீர்ப்பு தொடர்பாக (3) ஆம் உப பிரிவின் அடிப்படையில் பதிவாளருக்கு ஏதாவது ஒரு மேன்முறையீட்டைத் தாக்கல் செய்வதென்றால், அல்லது அவ்வாறான மேன்முறையீட்டை கைவிடுவதாயின் அல்லது மீளப்பெற்றுக் கொள்வதாயின் அந்த தீர்ப்பு இறுதியானதாக இருக்க வேண்டும். அது தொடர்பாக எவ்வித சிவில் நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்பக் கூடாது.

(7) இந்த பிரிவின் அடிப்படையில் பிணக்குக்குரிய விடயமான உரித்தை வெளியிடுவது தொடர்பான கால எல்லை கட்டளைச் சட்டத்தின் நியதிகளுக்கு உட்படுத்தக் கூடாது.

(8) இந்தப் பிரிவின் அடிப்படையில் பதிவாளரிடம் சமர்ப்பித்த பிணக்கு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் வியாபாரத்துக்கு தொடர்புடையதா என்பதைப் பற்றி கேள்வி எழுப்பினால் அது தொடர்பாக பதிவாளரின் தீர்மானம் இறுதியானதாகவும் அது எவ்வித சிவில் நீதிமன்றத்திலும் கேள்வி எழுப்பக் கூடியதாக இருக்கக்கூடாது.

(9) இப்பிரிவில் 'அங்கத்தவர்' என்பதற்கு இணைந்திருக்கும் உறுப்பினரும் உள்ளடக்கப்படுவார்.

முடிவை அல்லது தீர்மானத்தை செயற்படுத்துதல்.

69. (1) 68 ஆம் பிரிவின் அடிப்படையில் பதிவாளருக்கு அனுப்பப்படும் பிணக்கு அல்லது மேன்முறையீடு தொடர்பாக அவரின் தீர்ப்பில் (இந்த பிரிவில் இதற்கு மேல் 'தீர்மானம்' என அழைக்கப்படும்) அல்லது அந்த பிரிவின் கீழ் தீர்ப்பவரிடம் அனுப்பப்படும் பிணக்கு தொடர்பாகவும் அந்தப் பிரிவின் அடிப்படையில் பதிவாளருக்கு தகுந்தபடி மேன்முறையீட்டை சமர்ப்பித்தாலும் இந்தப் பிரிவில் இதற்கு மேல் 'தீர்வு' என அழைக்கப்படும் தீர்மானத்தில் எடுக்கும் முடிவு அந்த பிணக்கின் ஒரு பிரிவினர் அந்த பிணக்கின் மற்றைய பிரிவினருக்கு பணம் கொடுக்கப்பட வேண்டும் என்றும், அந்தப் பணம் அதற்கான கட்டணம் மற்றும் வட்டி இருப்பின் அவைகளுடன் செலுத்தாமல் போகும் சந்தர்ப்பத்தில், பதிவாளர் அந்தப் பணம் கிடைக்கவேண்டியவர் எவரோ, இந்தப் பிரிவில் இதற்கு மேல் 'தவிர்த்துக் கொண்டவர்' என அழைக்கப்படும் அந்தப் பிரிவினரின் தொடர்பில்,

(அ) கட்டணம் மற்றும் வட்டியுடன் அந்தப் பணத்தின் விபரம் மற்றும் தவிர்த்துக்கொண்டவரின் பெயர் உள்ளடக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரத்தில் பிரதேச செயலாளர், பிஸ்கள் அல்லது உதவி பிஸ்களுக்கு வழங்குதல், அல்லது

(ஆ) கட்டணம் மற்றும் வட்டி இருப்பின் அந்த வட்டியுடன் அந்தப் பணத்தைப் பற்றிய விபரம் மற்றும் தவிர்த்துக்கொண்டவரின் பெயர் உள்ளடக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் தவிர்த்துக்கொண்டவரின் வதிவிடம் அல்லது தவிர்த்துக்கொண்டவரின் அசையும் அல்லது அசையாத சொத்துக்கள் இருக்கும் மாவட்டத்தின், நீதிமன்ற அதிகாரமுள்ள மாவட்ட நீதிமன்றத்திற்கு வழங்குதல், அல்லது

(இ) அறவிடப்பட வேண்டிய தொகை பற்றிய விபரம் மற்றும் தவிர்த்துக்கொண்டவரின் பெயர் மற்றும் இறுதியாக அறிந்துகொண்டவரின் வியாபார ஸ்தலம் மற்றும் விதிவிடம் உள்ளடக்கப்பட்ட அத்தாட்சிப்பத்திரம் அந்த இடம் அமைந்திருக்கும் தொகுதியில் நீதிமன்ற அதிகாரமுள்ள நீதிபதியொருவருக்கு வழங்கலாம்.

(ஈ) வேறு ஒரு சட்டத்துக்கு முரணாக ஏது குறிப்பிட்டிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாது இந்த நியதிச் சட்டத்தில் 68 ஆம் பிரிவின் அடிப்படையில் பெறப்படும் தீர்ப்பு வழங்குவதன் மூலம் அல்லது மேன்முறையீட்டு தீர்வில் அறவிடப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ள பணம் செலுத்துவதை தவிர்த்துக் கொண்டார் என்றால் கூறப்பட்ட பணம் அதனுடன் சேர்ந்து வேறு விதத்தில் பணத்தை அறவிடுவதற்கான அதற்குப் பொருத்தமான ஏதேனும் பிணையாக ஒரு சொத்தை பிரசித்த ஏலத்தில் விற்று கூறப்பட்ட பணத்தை மற்றும் அதற்குரிய கட்டணத்துடனான தொகையை அறவிடுவதற்காக சம்பந்தப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் செயற்குழுவுக்கு உத்தரவிடலாம்.

(2) (அ) பதிவாளர் (1) ஆம் உப பிரிவில் (அ) என்ற பிரிவின் அடிப்படையில் பிரதேச செயலாளர், பிஸ்கல் அல்லது பிரதி பிஸ்களுக்கு அத்தாட்சிப்பத்திரம் ஒன்றை வழங்கும் வேளையில், தவிர்த்துக்கொண்டவரின் அசையும் சொத்து தடையைக் கொண்டு விற்றுக் கட்டணம் மற்றும் வட்டியுடன் அந்தப் பணத்தை அறவிடுவதை ஏற்பாடு செய்வதற்கு அந்த அதிகாரிக்கு இத்தால் அதிகாரம் வழங்கி உத்தரவிடப்படுகின்றது.

(ஆ) அப்பதவி வகிப்பவர் இதற்காக மிகவும் சந்தர்ப்பத்திற்கேற்ப கவனத்தில் கொள்ளும் விதத்தில் அங்கு தடை செய்வதற்கான செயற்பாடுகளை மேற்கொள்வதுடன், அவ்வாறு தடைசெய்த சகல சொத்துக்களும் தவிர்த்துக்கொண்டவர் கட்டணம் மற்றும் செலவை செலுத்துவதின் அடிப்படையில் ஐந்து நாட்கள் வைத்துக்கொள்ள வேண்டும். தவிர்த்துக்கொண்டவர் கட்டணத்தை வட்டியுடன் செலுத்தப்படவேண்டிய அந்தப் பணத்தை அந்த சொத்து தடை செய்வதற்கான செலவு மற்றும் மேலதிக செலவும் கூறப்பட்ட ஐந்து நாட்களுக்குள் செலுத்தாவிட்டால் சந்தர்ப்பத்திற்கேற்ப பிரதேச செயலாளர் அல்லது பிஸ்கல் அல்லது பிரதி பிஸ்கல் அவர்கள் கூறப்பட்ட சொத்தைப் பிரசித்த ஏலத்தில் விற்பனை செய்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

(இ) அதில் விற்பனை செய்த பின் கிடைக்கும் பணத்தை,

(i) முதலில் அந்தச் சொத்தைத் தடைசெய்தல், வைத்துக்கொள்ளல் மற்றும் விற்பனை பற்றிய செலவு மற்றும் கட்டணம் செலுத்துவதற்கு,

(ii) இரண்டாவதாக, கட்டணம் மற்றும் வட்டியுடன் கிடைக்கவேண்டிய பணத்தைக் கட்டுவதற்கும், ஈடுபட வேண்டும், ஏதேனும் பாக்கி இருப்பின், தடைக்காக எடுக்கப்பட்ட சொத்து உரிமையாளருக்கு செலுத்த வேண்டும்.

(3) (1) ஆம் உப பிரிவில் (ஆ) பிரிவின் அடிப்படையில் மாவட்ட நீதிமன்றத்திற்கு அத்தாட்சிப்பத்திரத்தை வழங்கும் சந்தர்ப்பத்தில் அது கிடைத்தபின் அங்கு நீதிமன்றம் அதை தவிர்த்துக்கொள்பவரின் அனைத்து அசையும் மற்றும் அசையாத சொத்துக்கள் அல்லது அதில் ஓரளவு அல்லது அந்தப் பணத்தை அறவிடுவதற்காக பிஸ்கல் தேவை எனக் கருதக்கூடிய அதில் ஒரு பகுதியை தடைசெய்து விற்கும்படி பிஸ்களுக்கு அதிகாரம் வழங்கும் மற்றும் நிர்ணயிக்கும் சொத்து தடை அஸ்கீசியொன்று பிஸ்களுக்கு வழங்கும்படி உத்தரவிட வேண்டும். அந்தத் தடையை ஏற்று விற்பனை செய்வது பற்றி அது தொடர்பான சிவில் வழக்கு நிபந்தனைகளை கோவையில் 226 ஆம் பிரிவிலிருந்து 297 ஆம் பிரிவுவரை குறிப்பிடப்பட்டிருக்கும் பிரிவுகளின் நிபந்தனைகள் தேவையான மாற்றத்துடன் ஏற்புடையதாக இருக்க வேண்டும்.

(4) (1) ஆம் உப பிரிவின்படி (ஈ) பிரிவின் அடிப்படையில் நீதிபதிக்கு அத்தாட்சிப்பத்திரம் வழங்கும் சந்தர்ப்பத்தில், பணம் செலுத்துவதை தவிர்த்துக்கொண்டவருக்கு எதிராக மேலும் செயற்படக்கூடாது ஏன் என்ற காரணத்தை காண்பிப்பதற்காக நீதிபதி தவிர்த்துக்கொண்டவரை தன் எதிரில் நிறுத்திவைத்து போதுமான காரணங்களை அவர் தெரிவிக்காத பட்சத்தில் சிறையில் அடைத்து தண்டனை வழங்க இயலாவிட்டாலும் அபராதம் விதித்து தண்டிக்கக்கூடிய குற்றத்தைச் சுமத்தி அதைத் தவிர்த்துக்கொண்டவர் தொடர்பாக நீதிபதியின் தண்டனைக் கோவையின் மூலம் விதிக்கப்படும் அபராதமாக அந்தப் பணத்தைக் கவனத்தில் கொள்ள வேண்டும். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க குற்றவியல் தண்டனை சட்டக்கோவையின் 291 ஆம் பிரிவில் (அந்தப் பிரிவின் (1) ஆம் உப பிரிவில் மற்றும் (ஈ) பந்தியைத் தவிர) நிபந்தனைகளுக்கேற்ப இடம்பெற வேண்டும். அந்தத் தண்டனைக்கான உத்தரவை விடும் சந்தர்ப்பத்தில் அந்தப் பிரிவின் நிபந்தனைப்படி நீதிபதியால் விடுக்கக்கூடிய உத்தரவு அவரால் செய்யலாம். 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கத்தைக் கொண்ட குற்றவியல் வழக்கு நியதிக்கோவை யாப்பின் 291 ஆம் பிரிவின்படி விதிக்கப்பட்ட தண்டத்தை செலுத்துவதை தவிர்த்துக்கொண்டால் சிறையில் வைக்கும் காலத்திற்கு தண்டனை உத்தரவுபெற்ற ஒரு தவிர்ந்துகொண்டவர் மேலே (1) ஆம் உப பிரிவில் (அ) பிரிவின் உறுதிப்படுத்தும் அத்தாட்சிப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு தொகையைச் செலுத்துவதின் மூலம் விடுதலை செய்யக்கூடாது.

(5) (1) ஆம் உப பிரிவின் (ஈ) பிரிவின் அடிப்படையில் முடிவு செய்யும் வேளையில் அங்கு கூறப்பட்ட பணத்தை அறவிடுவதற்காக செயற்படுவதற்கு சங்கத்தின் அல்லது யூனியனில் அல்லது முகாமைத்துவ செயற்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(6) பதிவாளர் இப்பிரிவில் அடிப்படையில் அத்தாட்சிப்பத்திரம் வழங்கப்படும் வேளையில் அதுபற்றிய அறிவித்தலை தனிப்பட்ட ரீதியில் வழங்கி, பதிவுத்தபாலில் அல்லது தந்தி மூலமாக அனுப்புவதன் மூலம் தவிர்த்துக்கொண்டவருக்கு வழங்க வேண்டும். ஆனால் தவிர்த்துக்கொண்டவருக்கு அந்த அறிவித்தல் கிடைக்காத காரணத்தினால் இப்பிரிவில் அடிப்படையிலான சட்ட நடவடிக்கை இரத்தாகக் கூடாது.

(7) இப்பிரிவின் அடிப்படையில் ஏதேனும் சட்ட நடவடிக்கைகளில் பதிவாளரின் அத்தாட்சிப்பத்திரமான ஏதேனும் ஒரு விபரத்தில் சரியானதா என எண்ணிப்பார்ப்பதற்கு, பரீட்சித்துப் பார்ப்பதற்கு அது தொடர்பாக முடிவு செய்வதற்கு மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது நீதிபதிக்கு இந்தப் பிரிவில் அதிகாரம் இருக்கக்கூடாது. இல்லாவிடின் உத்தரவு பிறப்பிக்கக் கூடாது.

(8) (3) ஆம் உப பிரிவின் அடிப்படையில் விற்பனை செய்வது மூலம் கிடைக்கப்பெறும் பணம் மற்றும் (4) ஆம் உப பிரிவின் அடிப்படையில் செலுத்தப்பட்ட அல்லது அறவிடப்பட்ட ஒரு பணத்தைச் சந்தர்ப்பத்திற்கேற்ப மாவட்ட நீதிமன்றத்திற்கு அல்லது நீதிபதி மூலம் பதிவாளருக்கு அனுப்ப வேண்டும். பதிவாளர் அந்தப்பணம் தொடர்பாக பொருத்தமான முடிவை அல்லது முடிவின்படி பொருத்தமானதைச் செய்ய வேண்டும்.

ஏதாவது பிரச்சினைகள் தொடர்பாக பதிவாளர் முடிவுசெய்ய வேண்டும் என்பதைப் பற்றி.

70. (1) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்துவத்திற்காக எவரேனும் ஒருவர் சமர்ப்பிக்கும் விண்ணப்பப்படிவத்தை அந்தச் சங்கம் நிராகரிக்கும் வேளையில் அவ்வாறு நிராகரித்தல் தொடர்பாக அந்த நபர் பதிவாளருக்கு மேன்முறையீடு செய்யலாம். அந்த மேன்முறையீடு தொடர்பாக பதிவாளரின் முடிவு இறுதித் தீர்மானமாக இருக்க வேண்டும். அதை நடைமுறைப்படுத்த சங்கம் கட்டுப்பட வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தவர் அந்த சங்கத்தின் அல்லது யூனியனின் ஒரு பதவிக்கு முறையாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளாரா என்பது தொடர்பாக அல்லது அங்கத்தவர் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவராக அல்லது பதவி வகிப்பதை நிறுத்தப்பட்டுள்ளதா என்பது தொடர்பாக அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் ஒரு பொதுக்கூட்டத்தை செல்லுபடியாகும் விதத்தில் நடத்தப்பட்டதா என்பது தொடர்பாக ஏதாவது பிரச்சினைகள் தோன்றும் வேளையில் அந்தப் பிரச்சினை தொடர்பாக பதிவாளர் முடிவு செய்ய வேண்டும். அவரின் முடிவு இறுதித் தீர்மானமாக இருக்க வேண்டும். பதிவாளரின் கூறப்பட்ட முடிவு சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு தெரிவிப்பதுடன் அதன்படி செயல்படுவதற்கு சங்கம் அல்லது யூனியன் கட்டுப்பட வேண்டும்.

## *XI ஆம் அத்தியாயம்*

### *விதி*

விதி.

71. (1) இந்த நியதிச்சட்டத்தின் கொள்கை மற்றும் நிபந்தனைகளைச் செயற்படுத்துவதற்கு அல்லது அதிகாரமூட்டும் செயலுக்கு தேவைப்படும் சகல விதிகளையும் அமைச்சர் தயாரிக்கலாம்.

(2) விசேஷமாக மற்றும் (1) உப விதியில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் பொதுவான நிலைக்கு பரப்புவதனால் தீங்கல்லாமல் அந்த விதி மூலமாக,

(அ) சங்கம் அல்லது யூனியன் பதிவுசெய்வதற்காக விண்ணப்பிக்கும்போது பின்பற்றவேண்டிய செயல் முறைகளை அல்லது அதற்கு தொடர்புடைய நிபந்தனைகளை அமைக்கலாம்.

(ஆ) அங்கத்தவர்கள் என்ற ரீதியில் உட்பிரவேசிப்பதற்கு விண்ணப்பிக்கும் அல்லது அங்கத்தவர்கள் என்ற ரீதியில் உள்ளடக்கப்பட்டிருப்பவர்களால் பின்பற்ற வேண்டிய செயல் நிபந்தனைகளை, முறைகளை விதிக்கலாம் என்பதுடன் அங்கத்தவர்களைத் தெரிவுசெய்வது மற்றும் உள்வாங்குவதும் அங்கத்துவத்தின் உரிமைகளை பாவிப்பதற்கு முன் செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகள் மற்றும் பெற்றுக்கொள்ள வேண்டிய தொடர்புகளுக்கு நிபந்தனைகளை அமைக்கலாம்.

(இ) அங்கத்தவர்கள் தானே விலகிக்கொள்வது மற்றும் அங்கத்துவத்திலிருந்து விலக்கப்படுவது, அங்கத்துவத்தை இடைநிறுத்துவது மற்றும் அங்கத்துவத்திலிருந்து விலக்கப்படும் ஒருவருக்கு செலுத்தப்படவேண்டிய கொடுப்பனவுகள் தொடர்பாகவும், முன்னால் அங்கத்தவர்களின் பொறுப்புகள் பற்றியும் நிபந்தனைகளை அமைக்கலாம்.

(ஈ) பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் மூலம் வரையறுக்கக்கூடிய அளவை நிர்ணயிக்கலாம்.

(உ) இறந்துபோன அங்கத்தவரின் தொடர்பின் பெறுமதியை நிர்ணயிக்கக்கூடிய விதத்தையும் அந்த தொடர்பின் பெறுமதியை செலுத்தக்கூடிய அல்லது வழங்கப்படக்கூடிய ஒருவரை தெரிவுசெய்வதற்காக நிபந்தனைகளை அமைக்கலாம்.

(ஊ) (3) ஆம் உப விதியின் நிபந்தனைகளுக்கு உட்பட்டு, அங்கத்தவரிடம் இருக்கக்கூடிய பதிவுசெய்யக்கூடிய சங்கத்தின் அல்லது யூனியனின் முதலீட்டின் கூடிய பங்குகளின் எண்ணிக்கை அல்லது பங்குகளை நிர்ணயிக்கலாம்.

(எ) கடன் அல்லது காசுக்கடன்களுக்காக விண்ணப்பிக்கும் அங்கத்தவர்களால் செலுத்தவேண்டிய கொடுப்பனவு, பின்பற்ற வேண்டிய நிபந்தனைகள் மற்றும் எழுதி கையொப்பம் இடவேண்டிய பத்திரம்,

சட்டபூர்வமான ஆவணங்களில் அல்லது வேறு ஆவணங்களின் மாதிரி, கொடுக்கக்கூடிய கடன்களின் அல்லது வழங்கக்கூடிய கடன்களின் கால எல்லை, தனி அங்கத்தவருக்கு கொடுக்கக்கூடிய ஆகக்கூடிய தொகை மற்றும் அவர்கள் தொடர்பாக இடமளிப்பதற்கான ஆகக்கூடிய கடனை நிர்ணயிக்கலாம்.

(ஏ) வரையறையற்ற பொறுப்புகளைக் கொண்ட சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவருக்கு இலாபத்தைப் பங்கிடுவது நிபந்தனைகளின் அடிப்படையிலா, அந்த நிபந்தனை சங்கம் அல்லது யூனியன் செலுத்தக்கூடிய ஆகக்கூடிய இலாபத்தின் அளவை நிர்ணயிக்கலாம்.

(ஐ) பங்குகள் மூலம் அல்லது எதிர்பத்திரம் மூலம் அல்லது வேறு ஏதாவது ஒரு முறையில் நிதியத்தைப் பெற்றுக்கொள்ளும் விதத்தில் மற்றும் வைப்புகளுக்கு தொடர்பாக செலுத்தக்கூடிய வட்டியின் அளவை நெறிப்படுத்தலாம்.

(ஒ) அங்கத்தவர்களின் பொதுச்சபைக் கூட்டம் சம்பந்தமாக அந்தக் கூட்டங்களின் செயற்பாடுகளைப் பற்றியும், அந்தக் கூட்டங்களில் பாவிக்கக்கூடிய அதிகாரங்கள் தொடர்பாகவும் நிபந்தனைகள் அமைக்கப்படலாம்.

(ஓ) செயற்குழு அங்கத்தவர்கள் அல்லது வேறு பதவிகளுக்கு நியமித்தல், அவர்களின் சேவையிலிருந்து இடைநிறுத்தல் மற்றும் அவர்களை சேவையிலிருந்து விலக்குவது தொடர்பாகவும் செயற்குழு பொதுக்கூட்டங்களில் செயல்முறைக்காகவும் செயற்குழு மற்றும் வேறு பதவியில் இருப்போர் பாவிக்கும் அதிகாரங்கள் மற்றும் கடமைகள் தொடர்பாகவும் நிபந்தனைகள் அமைக்கலாம்.

(க) சங்கம் அல்லது யூனியன் உபவிதி யாப்பை அமைக்கக்கூடிய அல்லது அமைக்க வேண்டிய விடயங்கள் மற்றும் உபவிதி யாப்பைத் தயாரிக்கும்போது, மாற்றி அமைக்கும்போது மற்றும் நிறுத்தும் போது பின்பற்றவேண்டிய செயற்பாடுகள், அந்த உபவிதி யாப்பை விதிப்பதற்கு, மாற்றுவதற்கும் அல்லது நிறுவத்துவதற்குமுன் பூர்த்திசெய்யப்பட வேண்டிய நிபந்தனைகளை நிர்ணியிக்கலாம்.

(ங) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் அதனுள் வசம் வைத்துக்கொள்ளும் மற்றும் நடாத்திச்செல்ல வேண்டிய புத்தகங்கள், கணக்குகள் மற்றும் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் இருப்பு மற்றும் செலவினத்தைக் காண்பிக்கும் அட்டவணையை காலத்திற்குக்காலம் வெளியிட உத்தரவு பிறப்பிக்கலாம்.

(ச) பதிவுசெய்யப்பட்ட சங்கங்கள் அல்லது யூனியன்களில் கணக்குகளை கணக்காய்வு செய்வதற்கு மற்றும் அந்த கணக்காய்வுகளைச் செலுத்தவேண்டிய கட்டணம் இருப்பின் அந்தக் கட்டணத்தைச் செலுத்துவதற்காக நிபந்தனைகளை அமைக்கவும், நடந்துகொண்டிருக்கும் சங்கம் அல்லது யூனியன் கணக்காய்வு செய்வதற்கும், மற்றும் அவைகளை நிர்வாகம் செய்வதற்கும் மற்றும் அவைகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதற்கான நிபந்தனைகளை அமைத்துக்கொள்ளலாம்.

(ட) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் பதிவாளருக்கு முன்வைக்கப்பட வேண்டிய தவணை அறிக்கை மற்றும் அந்தத் தவணை சமர்ப்பிக்கவேண்டிய நபர்கள் அலட்சியப்படுத்தும் சந்தர்ப்பத்தில் அதற்கு ஏதுவாக செயற்படவேண்டிய விதத்தைப் பற்றியும் நிபந்தனைகள் அமைக்கலாம்.

(ண) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் புத்தகங்களின் உள்ளடக்கப்பட்டுள்ள குறிப்புகளின் பிரதிகளை அத்தாட்சிப்படுத்தக்கூடிய நபர்கள் மற்றும் அவ்வாறு அத்தாட்சிப்படுத்தப்படும் நிபந்தனைகளையும் அமைக்கலாம்.

(த) அங்கத்தவர்களின் பெயர் இடாப்பு மற்றும் அங்கத்தவர்களின் பொறுப்புகள் பகுதிகளாக வரையறுக்கப்படும் சந்தர்ப்பத்தில் அந்தப் பகுதிகளைப் பற்றிய பெயர் இடாப்பு ஒன்று தயாரித்து நடாத்துவதற்காகவும், நிபந்தனைகள் அமைக்கலாம்.

(ற) சேகரம் நிதியத்தை உருவாக்கி நடாத்திச் செல்லுதல் மற்றும் நிதியம் இடக்கூடிய நோக்கத்திற்காக பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் நிர்வாகத்தின்கீழ் இருக்கும் ஏதேனும் நிதியத்தை முதலீடு செய்ய நிபந்தனைகள் அமைக்கலாம்.

(ப) சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு அல்லது அதனூடாகப் பொருட்களை விற்பதற்கான ஒரு உபவிதி யாப்பை அல்லது ஒப்பந்தத்தை மீறுவது தொடர்பாக ஒரு பிரச்சினை உறுதிசெய்யக்கூடிய விதத்தில் மற்றும் அவ்வாறான மீறுதலினால் ஏற்பட்ட நஷ்டத்தை உறுதிப்படுத்தக்கூடிய அல்லது மதிப்பிடக்கூடிய விதத்தை நிர்ணயிக்கலாம்.

(ம) தீர்ப்பவர் அல்லது தீர்ப்பவர்களை நியமிக்கும் முறைமை மற்றும் பதிவாளர் அல்லது தீர்ப்பவர் அல்லது தீர்ப்பவர்கள் முன்னிலையில் நடக்கும் செயற்பாடுகளில் பின்பற்றவேண்டிய நடைமுறைகள் மற்றும்

தீர்ப்பவர் மற்றும் தீர்ப்பவர்களின் தீர்மானத்திற்கு எதிராக பதிவாளரிடம் மேன்முறையீடு செய்தலும் வைப்புப் பணத்தைப் பற்றி நிபந்தனைகளையும் தீர்ப்பவர் அல்லது தீர்ப்பவர்களின் முடிவு மற்றும் பதிவாளரின் முடிவை செயற்படுத்தவேண்டிய விதத்தையும் நிர்ணயிக்கலாம்.

(ய) அரசாங்கத்திடம் நிதியுதவியைக் கோரும் பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியனால் பின்பற்றவேண்டிய நிபந்தனைகளை நிர்ணயிக்கலாம்.

(ர) பதிவாளரினால் உத்தரவுகளுக்கு எதிராக அமைச்சரிடம் மேன்முறைப்பாட்டைச் சமர்ப்பிக்கலாம் என்ற போதிலும் இந்த நியதிச்சட்டத்தில் கூறப்பட்ட நிபந்தனைகள் அற்ற விடயங்களையும் நிர்ணயிக்கலாம்.

(ல) 62 ஆம் பிரிவின் அடிப்படையில் நியமிக்கப்படும் முடிவுசெய்பவர் பின்பற்றவேண்டிய செயல்முறைகள் மற்றும் அந்த முடிவுசெய்பவரின் உத்தரவுகளுக்கு எதிராக மேன்முறையீடு செய்யக்கூடிய சங்கத்தை நிர்ணயிக்கலாம்.

(வ) 67 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள மேலதிக நிதியத்தை ஏற்படுத்தி நடாத்திச்செல்ல நிபந்தனைகளை அமைத்தல் மற்றும் அந்நிதியத்தின் நிதியை செலவழிக்கக்கூடிய விதத்தையும் மற்றும் பணிகளையும் நிர்ணயிக்கலாம்.

(ழ) இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் அல்லது அந்த அடிப்படையில் தயாரிக்கப்பட்ட மேன்முறையீடுகளைச் சமர்ப்பித்தல் கேட்டல் மற்றும் அதைப் பொருத்தமானதாக ஆக்குவது தொடர்பாக பாவிக்கக்கூடிய மாதிரி செலுத்தப்படவேண்டிய செயற்பாடுகள் மற்றும் அவைகளுடன் தொடர்புடைய அல்லது அதனுடன் இணைந்த வேறு சகல விடயங்களையும் நிர்ணயிக்கலாம்.

(ள) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் அங்கத்தவர் முகாமைத்துவ செயற்குழுவினர் அல்லது பிரதேச அல்லது கிளை செயற்குழு அங்கத்தவராக தெரிவுசெய்வது தொடர்பாக இந்த நியதிச்சட்டத்தில் குறிப்பிடாத தகுதிகளை நிர்ணயிக்கலாம்.

(ஃ) இந்த நியதிச்சட்டத்தின் 69 (1) (ஈ) உப பிரிவின் அடிப்படையில் செயற்படுத்துவது தொடர்பாக பின்பற்றவேண்டிய செயற்பாடுகளை நிர்ணயிக்கலாம்.

(3) மாகாண சபையால் அங்கீகரிக்கப்பட்டிருந்தாலே தவிர எந்த விதியையும் நடைமுறைப்படுத்த அதிகாரமில்லை அவ்அதிகாரத்தை வர்த்தமானியில் அறிவித்தல் மூலம் பிரசுரிக்க வேண்டும்.

(4) (3) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள குறித்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பின் சகல விதியும் இங்கு விதிக்கப்பட்டதுபோல் செல்லுபடியாகும் அதிகாரத்திற்கு உட்பட்டது.

## XII ஆம் அத்தியாயம்

### அரசுக்கு செலுத்தவேண்டிய கடன்

அரசாங்கத்துக்கு மற்றும் மாகாண சபைக்கு செலுத்த வேண்டிய பணத்தை வசூலித்தல்.

72. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் பதிவுசெய்யப்பட்ட சங்கங்களில் அல்லது யூனியன்களில் ஒரு பதவி வகிப்பவரிடம் அல்லது அங்கத்தவரிடம் அல்லது அங்கு முன்னாள் உறுப்பினரிடம் அந்த நிலையில் அரசாங்கத்தின் கடன், மாகாண சபையில் கடன் அல்லது அரச பிணையாக இருந்த அல்லது மாகாண சபைக்குப் பிணையாக இருந்த கடனுக்காக கொடுக்கவேண்டிய பணம் மற்றும் அரச மற்றும் மாகாண சபையில் வழங்கப்பட்ட ஏதேனும் பணமும், உள்ளடக்கப்பட்டு அரசாங்கத்துக்கு மற்றும் மாகாண சபைக்கு கிடைக்கவேண்டிய அனைத்து பணமும் குடியரசுக்கு கிடைக்கவேண்டிய கடனை அறவிடுவதற்காக, அரசாங்கத்தின் கடன்காரர் ஆணைச்சட்டத்தின் அடிப்படையில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டதுபோல் அறவிடலாம். அத்துடன் 43 (2) ஆம் உபபிரிவின் நிபந்தனைகளின் அடிப்படையில் வேறு ஒரு நபருக்கு அல்லது நபர்களுக்கு கிடைக்கவேண்டிய பணத்திற்கு மேலாக அவைகளுக்கு முன்னுரிமை கிடைக்க வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனிலிருந்து அரசாங்கததிற்கு அல்லது மாகாண சபைக்கு கிடைக்கவேண்டிய (1) ஆம் உப பிரிவின் அடிப்படையில் அறவிடக்கூடிய பணத்தை முதலில் சங்கத்தின் அல்லது யூனியனின் சொத்துக்களிலிருந்து அறவிடலாம். இரண்டாவதாக அங்கத்தவர்களின் பொறுப்புக்கள் வரையறுக்கப்பட்ட பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் தொடர்புபடும்போது அங்கத்தவர்களின் பொறுப்புகள் வரையறைக்கு உட்பட்டு அங்கத்தவர்கள், மூன்றாவது வேறு சங்கம் அல்லது யூனியன் தொடர்புபடும்போது அங்கத்தவர்களிடமிருந்து அறவிடலாம்.

## XIII ஆம் அத்தியாயம்

### வேறு பல விடயங்கள்

கூட்டுறவு என்னும் சொல்லின் பாவனையை வரையறுத்தல்.

73. (1) சிங்களத்தில் ''எக்சத் சஹகார'' என்ற சொல் அல்லது சமூபகார என்ற சொல் அல்லது தமிழில் (ஐக்கிய) என்ற சொல் அல்லது (கூட்டுறவு) என்ற சொல் அல்லது ஆங்கிலத்தில் (''கோப்பரட்டிவ்'') என்ற சொல்லின் ஒரு பகுதியைக் கொண்ட பெயரை ஒரு பகுதியாகக் கொண்டு வியாபாரம் செய்வது அல்லது வியாபாரத்தை நடாத்துதல் பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியனைத் தவிர எந்த ஒரு நபராலும் மாகாண சபையின் அமைச்சரின் அங்கீகாரமின்றி செய்யக்கூடாது.

அவ்வாறாயினும் 1921, செத்தெம்பர் மாதம் 22 ஆந் திகதிக்கு முன் ஒருவர் வியாபாரம் செய்யப்பட்ட ஒரு பெயரில் அல்லது பெயரைக் கொண்ட அந்நபரால் நடாத்தப்பட்டவரின் தொடர்பில் ஒருவர் அந்தப் பெயரை அல்லது பெயரில் அல்லது தலையங்கத்தில் ஒரு பகுதியைப் பயன்படுத்துவது தொடர்பாக இந்தப் பிரிவில் குறிப்பிட்டுள்ள எதற்கும் ஏற்புடையதல்ல.

(2) இந்தப் பிரிவின் நிபந்தனைகளை மீறுபவர் எவராக இருப்பினும், நீதிபதி நீதிமன்றத்தால் நடாத்தப்படும் குறுகிய வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாகக் காண்பின் ரூபா ஐந்நூறுக்கு மேற்படாத அபராதத்திற்கும் மற்றும் அக்குற்றத்தை தொடர்ந்து செய்யப்படும் சந்தர்ப்பத்தில் அதில் குற்றவாளியாக தீர்மானிக்கப்பட்டால் மேலும் அக்குற்றத்தைச் செய்யும் ஒவ்வொரு நாளுக்கும் ஐம்பது ரூபா வீதம் மேலதிக அபராதத்திற்கு உட்படவேண்டும்.

சங்கத்துக்கு அல்லது யூனியனுக்கு கிடைக்க வேண்டிய பணத்தை மீள செலுத்து வதற்கு அல்லது வேறு ஆதனத்தை மீள கையளிப்ப தற்கு பதிவாளர் உத்தரவு இடலாம் என்பதைப் பற்றி.

74. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் தொடர்பாக 51 ஆம் பிரிவின் அடிப்படையில் கணக்காய்வின்போது அல்லது 53 ஆம் பிரிவின் அடிப்படையில் விசாரணையின்போது அல்லது 54 ஆம் பிரிவின் அடிப்படையில் சோதனையின் அல்லது ஆய்வின்போது அல்லது கணக்குகள் தீர்க்கப்பட்டு மூடும்போது அந்தச் சங்கம் அல்லது யூனியன் ஒருங்கிணைப்பை மேற்கொள்ளும்போது அல்லது அங்கு முகாமைத்துவத்தில் கலந்துகொண்ட இந்த நிதிச்சட்டத்தில் அல்லது வேறு யாப்பின் நிபந்தனைகளுக்கு அல்லது அதன் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட விதிக்கோவையின் உத்தரவுகளுக்கு இல்லாவிடின் சங்கத்தின் அல்லது யூனியனின் உபவிதி யாப்பிற்கு அல்லது செயற்குழு விதிகளுக்கு அல்லது பதிவாளரால் அங்கீகரிக்கப்பட்ட நிதி செயற்திட்டத்திற்கு அல்லது பதிவாளரால் அல்லது கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட ஒரு பொது நிபந்தனைகளுக்கு முரணான சங்கத்திற்கு அல்லது யூனியனின் நிதியத்தைப் பயன்படுத்திய ஒரு நபரின் அல்லது நபர்களின் குழுவாக அல்லது அந்தச் சங்கத்தின் அல்லது முன்னால் அல்லது தற்போது இருக்கும் ஒரு அதிகாரியிடமிருந்து அல்லது ஊழியரிடமிருந்து அந்தச் சங்கத்திற்கு ஏதேனும் பணம் அல்லது வேறு சொத்து கிடைக்கவேண்டுமென தெரியும்போது சந்தர்ப்பத்திற்கேற்ப பதிவாளர் தனது தேவையின் அடிப்படையில் அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் மூடுபவரின் அல்லது கடன்காரரின் அல்லது பங்களிப்பாளரின் வேண்டுகோளின் அடிப்படையில் அந்நபரின் அல்லது அந்த நபர்களின் குழுவிலிருந்து அல்லது பதவி வகிப்பவரின் அல்லது ஊழியரின் செயற்பாடுகளைப் பற்றி பரீட்சித்து–

(அ) அந்தப் பணம் அல்லது அதில் ஒரு பகுதியை பதிவாளர் பொருத்தமானது எனக் கருதும் வட்டியை மீள செலுத்துமாறு

அல்லது

(ஆ) அந்த வேறு சொத்து அல்லது அதில் ஒரு பகுதியை மீள ஒப்படைக்கும்படி

அல்லது

(இ) சங்கத்தில் அல்லது யூனியனில் இருப்புகளுக்கு பதிவாளர் பொருத்தமானது எனக் கருதும் ஒரு பங்களிப்பை நட்டஈடாக வழங்கும்படி, அல்லது அவருக்கு அல்லது அந்தக் குழுவிற்கு நிர்ணயித்து உத்தரவிடலாம்.

அவ்வாறான ஒருவருக்கு அல்லது ஒரு குழுவினருக்கு எதிராக அவ்வாறான ஒரு உத்தரவைப் பிறப்பிப்பதற்கு முன் பதிவாளர் அந்த உத்தரவை இடக்கூடாது ஏன் எனச் சொல்வதற்கும் மற்றும் காரணம் தெரிவிப்பதற்கும் அந்த நபருக்கு அல்லது நபர்களின் குழுவுக்கு சந்தர்ப்பம் வழங்க வேண்டும்.

(2) பதிவுசெய்யப்பட்ட சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு பணம் செலுத்துவதற்காக அல்லது அதன் இருப்புக்கு பங்களிப்புப் பணத்தை நட்டயீடாக வழங்குவதற்காக (1) ஆம் உப பிரிவின்கீழ் விடுக்கப்பட்ட உத்தரவின்படி செயற்படாத வேளையில், சங்கத்தின் அல்லது யூனியனின் பதிவுசெய்யப்பட்ட இடம் அமைந்திருக்கும் அல்லது உத்தரவிடப்பட்ட ஒருவருக்கு அல்லது ஒரு குழுவிற்கு அல்லது பதவி வகிப்பவருக்கு அல்லது ஊழியருக்கு எதிராக, அந்த நபர் அல்லது நபர்களின் குழு அல்லது பதவி வகிப்பவர் அல்லது ஊழியர் வசிக்கும் அல்லது வியாபாரத்தை நடத்தும் இடம் அமைந்திருக்கும் தொகுதியின் நீதிமன்ற அதிகாரம் கொண்ட நீதிபதியால் அந்தப் பணத்தைச் சிறையில் வைக்கப்பட்ட பின் தண்டனை வழங்க இயலாத, அபராதத்தில் மாத்திரம் தண்டனை வழங்கக்கூடிய குற்றத்திற்காக அந்த நபர் அல்லது அந்த நபர்களின் குழு அல்லது பதவி வகிப்பவர் அல்லது ஊழியர் தொடர்பாக நீதிபதியின் தண்டனை உத்தரவின்படி அபராதமாக விதிக்கப்படலாம் என்பதுடன், 1979, இலக்கம் 15 கொண்ட குற்றவியல் சட்டக்கோவையின் 291 ஆம் பிரிவில் (அந்தப் பிரிவில் (1) உப பிரிவில் (அ) மற்றும் (ஈ) பந்திகளைத் தவிர) நிபந்தனைகள் உட்பட்டிருக்க வேண்டும். மேலும் அந்தத் தண்டனையை விதிக்கும் சந்தர்ப்பத்தில் அந்தப் பிரிவில் நிபந்தனைகளின்படி நீதிபதி விதிக்கக்கூடியதாக இருந்த உத்தரவை அவர் பிறப்பிக்கலாம். பதிவாளரால் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் உண்மைத் தன்மையை இந்தப் பிரிவின்கீழ் எவ்வித சட்ட நடவடிக்கை கவனத்தில் கொள்வதற்கு, பரீட்சித்துப் பார்ப்பதற்கு அல்லது தீர்மானம் மேற்கொள்வதற்கு, நீதிபதிக்கு இந்தப் பிரிவின்கீழ் அதிகாரம் கொள்வதற்கு அல்லது உத்தரவிடும் உரிமை இருக்கக் கூடாது.

(3) வேறு ஒரு எழுதப்பட்ட சட்டத்தின் அடிப்படையில் நடந்த ஒரு குற்றம் தொடர்பாக (1) ஆம் உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள ஒருவருக்கு அல்லது ஒரு குழுவினருக்கு அல்லது பதவி வகிப்பவருக்கு அல்லது ஊழியருக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய அல்லது வழக்குத் தொடர அல்லது கொண்டுசெல்ல இப்பிரிவின் முன்னைய நிபந்தனைகளின் அல்லது அதன் அடிப்படையில் உத்தரவிடும் காரணத்தைக் கொண்டு தவிர்த்துக்கொள்ளும்படி அல்லது அதற்கு வேறு விதத்தில் பாதிக்கும்படி கவனத்தில் கொள்வது அல்லது விளங்கிக்கொள்ளல் ஆகாது.

இருப்பு மற்றும் கடன் கணக்கு விபரம்.

75. (1) பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் தலைவர் மற்றும் செயற்குழுவின் சகல உறுப்பினர்களும் வருடாந்த கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு குறிப்பிட்ட மாதிரியில் உள்ள இருப்பு மற்றும் கடன் பற்றிய அறிக்கையை, அந்த அறிக்கையை எந்த வருடத்திற்காக என, அந்த வருடத்தில் மாச்சு மாதம் 31 ஆந் திகதி நடந்தவிதத்தில்–

(அ) அவரின் அனைத்து இருப்பு மற்றும் கடன் தொடர்பாக,
(ஆ) அவரின் தம்பதிகளின் சகல இருப்பும் கடன் தொடர்பாக மற்றும்,
(இ) அவரின் ஒவ்வொரு பிள்ளைகளினதும் சகல இருப்பும் மற்றும் கடன் தொடர்பாக,

செய்ய வேண்டும்.

(2) (1) ஆம் உப பிரிவின் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை, பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் தலைவர் அல்லது செயற்குழு சகல அங்கத்தவர்களும், கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு சந்தர்ப்பத்திற்கேற்ப அந்தத் தலைவர் அல்லது செயற்குழுவின் தலைவர் தெரிவுசெய்யப்பட்டு நியமித்த தினத்தில் இருந்து மூன்று மாதத்திற்குள் அவரின் தலைவர் பதவி அல்லது செயற்குழு அங்கத்துவம் நிறுத்தப்பட்டிருந்தாலே தவிர அவர் முதலில் அவரின் அறிக்கை வெளியிட்ட வருடத்தின் பின்வரும் ஒவ்வொரு வருடமும் முறைப்படி வருடத்தில் யூலை மாதம் முதலாம் திகதிக்கு முன் செயற்படல் வேண்டும். அவ்வாறு குறிப்பிடப்பட்ட தினத்தில் அவ் அறிக்கையைச் சமர்ப்பிக்கப்படாத காரணத்தால் தனது பதவி அல்லது உத்தியோகத்தை இரத்துச் செய்வதற்கு கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கு அதிகாரம் வழங்கல் வேண்டும்.

நம்பிக்கை துரோகம் செய்வது சம்பந்தமாக.

76. பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் கணக்குகள், 51 ஆம் பிரிவில் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கேற்ப கணக்காய்வு செய்தபின் அல்லது 53 ஆம் பிரிவின்படி பரீட்சித்தபின் அல்லது பதிவுசெய்யப்பட்ட கூட்டுறவுச் சங்கத்தின் புத்தகங்கள் பரீட்சித்துப் பார்ப்பது மற்றும் ஆய்வு செய்வது 54 ஆம் பிரிவின்படி செய்தபின் அல்லது சங்கத்தின் பதவி வகிப்பவர் அல்லது அங்கத்தவர் அல்லது ஊழியராக தனது நிலையிலிருந்து பணத்தையோ, பொருளையோ அல்லது சொத்துகளுக்கு பொறுப்பாக இருக்கும் அல்லது சில சந்தர்ப்பத்தில் பொறுப்பில் இருப்பாக இருந்த இல்லாவிடின் அந்தப் பணம் அல்லது பொருள் சொத்துகளைப் பற்றிய ஆளுகையுடன் இருக்கும் அல்லது சில வேளை இருக்கும் ஒரு நபரால் அல்லது அந்தப் பதவி வகிப்பவர், அங்கத்தவர் அல்லது ஊழியராக தன்வசம் வைத்திருக்கும் அல்லது தான் செலுத்தவேண்டியதாக தானே குறித்து வைத்திருக்கும் அல்லது கையொப்பமிட்ட கணக்குப் புத்தகங்களின் அல்லது அறிக்கைகளில் தெரிவிக்கப்படும் பணம் அல்லது அங்கு மிகுதியை செலுத்தும்படி அல்லது அவ்வாறான பொருட்களின் அல்லது சொத்துக்களின் பெறுமதியை செலுத்தும்படி பதிவாளர் அந்த நபருக்கு உத்தரவிடுவது சட்டபூர்வமானது என கருதப்பட வேண்டும். மேலும் அவ்வாறு உத்தரவிட்ட பின் அந்த நபர் அந்தப் பணத்தை அல்லது மிகுதியை உடனே செலுத்துவது அல்லது சமர்ப்பித்தல் அல்லது அந்தப் பொருட்களின் அல்லது சொத்துக்களின் பெறுமதியைச் செலுத்துவது முறைப்படி அதற்கான கணக்குகளை சமர்ப்பிப்பதை தவிர்த்துக்கொண்டால் அவர் குற்றமிழைத்த நம்பிக்கை துரோகம் செய்தவராவதுடன் நீதிபதி முன்னிலையில் நடாத்தப்படும் வழக்கு குறுகிய விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால் இரண்டு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு, இரண்டு விதத்தில் ஒரு விதத்தில் சிறை வைக்கப்படுவதற்கு உட்பட வேண்டுவதுடன் ரூபா ஐயாயிரத்திலான அபராதத்திற்கு அவர் உட்பட வேண்டும்.

ஏதாவது ஒரு தகவலை சமர்ப்பிக்கும்படி பதிவாளர் வங்கிக்கு உத்தரவிடலாம் என்பதைப் பற்றி.

77. வேறு எழுதப்பட்ட சட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருப்பினும், அதைப் பொருட்படுத்தாது பதிவாளர் தேவையானது என அவர் கருதும் வேளையில் :-

(அ) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் வங்கியுடன் செய்யும் கொடுக்கல் வாங்கல் தொடர்பாக தகவல் வழங்கும்படி,

(ஆ) வங்கியுடனான தற்சமயம் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனின் கணக்குகளைத் தெரிவிக்கும் அறிக்கையின் பிரதி வங்கி மூலம் வைக்கப்பட்டிருக்கும் பெயரேட்டில் காண்பிக்கும்படி

அல்லது

(இ) சங்கத்தில் அல்லது யூனியனில் வரவு வைக்கும்படியாக செலுத்தப்பட்ட அல்லது சங்கம் அல்லது யூனியன் உறுதிக் கையெழுத்து கையொப்பமிட்ட காசோலையைச் சமர்ப்பிக்கும்படி, ஒரு வங்கிக்கு உத்தரவிடலாம்.

வழக்கு தாக்கல் செய்தல், நடாத்துதல், எவரால் செய்யப்பட வேண்டும் என்பதைப் பற்றி.

78. பதிவுசெய்த சங்கத்திற்கு அல்லது யூனியனுக்கு குறிப்பிட்ட ஒரு விடயம் தொடர்பாக ஆய்வை நடத்துவதற்கு, பரீட்சித்துப் பார்ப்பதற்கு மற்றும் 1979, இலக்கம் 15 ஐக் கொண்ட குற்றவியல் நிபந்தனைக் கோவை அடிப்படையில் XVII ஆவது பந்தியின்கீழ் தொகுக்கப்பட்டிருக்கும் வழக்குத் தாக்கல் செய்யும் நடாத்துவதற்கு கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்து அதிகாரிக்கு சட்டபூர்வ அதிகாரம் உண்டு.

79. கம்பனிக் கட்டளைச் சட்டத்தின் மற்றும் தொழிற்சங்க கட்டளைச் சட்டத்தின் நிபந்தனைகள் அத்துடன் கட்டளைச் சட்டத்தின் திருத்தியமைக்கப்படும் ஏதேனும் நியதிச்சட்டத்தின் நிபந்தனைகள் இந்த நியதிச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப்பட்ட சங்கம் யூனியன்களுக்கு ஏற்புடையதாக இருக்கக் கூடாது.

கம்பனி கட்டளைச் சட்டம் மற்றும் தொழிற் சங்க கட்டளைச் சட்டம் ஏற்புடைய தல்ல என்பதைப் பற்றி.

80. (1) இந்த நியதிச் சட்டத்தைச் செயற்படுத்தும்போது 1972, இலக்கம் 5 ஐக் கொண்ட கூட்டுறவுச் சங்க யாப்பு அல்லது அந்த யாப்பின் மூலம் இரத்துச்செய்யப்பட்ட ஒரு யாப்பின் அடிப்படையில் பதிவுசெய்யப்பட்ட அல்லது பதிவுசெய்யப்பட்டதாக கருதப்பட வேண்டும் என்பதுடன், அந்த சங்கத்தின் உபவிதி யாப்பை மாற்றும் அல்லது நிறுத்தி வைக்கும் வரை இந்த நியதிச்சட்டத்தில் வெளியிடும் நிபந்தனைகளுடன் பொருந்தும் அளவுக்கு தொடர்ந்து அமுல்படுத்த லாம்.

தற்சமயம் நடை முறையில் இருக்கும் சங்க யூனியன்களின் விதி போன்றவை கள் மூலம் மேற் கொண்டு நடவடிக்கை எடுக்கும் உரிமை.

(2) இந்த நியதிச் சட்டத்தை செயற்படுத்தும்போது 1972, இலக்கம் 5 ஐக் கொண்ட கூட்டுறவுச் சங்க யாப்பு அடிப்படையில் அமைக்கப்பட்ட, இந்த நியதிச் சட்டம் ஆரம்பிக்கும் வேளையில் செயற்படும் சகல விதிகளும் அவைகள் இந்த நியதி சட்டத்தின் நிபந்தனைகளுடன் பொருந்தும் அளவிற்கு, இந்த நியதிச்சட்டத்தின்கீழ் விதிக்கப்பட்டதாக கவனத்தில் கொள்ள வேண்டும் அத்துடன் அந்த விதிகளுக்குப் பதிலாக 71 ஆம் பிரிவின்கீழ் புதிய விதிகள் அமைக்கும்வரை அவைகள் தொடர்ந்து அமுல்படுத்த வேண்டும்.

(3) இந்த நியதிச்சட்டம் செயற்படுத்தும்போது 1972, இலக்கம் 5 ஐக் கொண்ட கூட்டுறவுச் சங்க யாப்பின் அடிப்படையில் செய்யப்பட்டதாகக் கருதப்படும் அல்லது செய்யப்பட்டதாகக் கருதும் சகல நியமனங்களையும் செய்த அல்லது செய்யாத கருதப்படும் அனைத்து உத்தரவுகளையும் பிறப்பித்ததாக கருதப்படும் அனைத்து அறிவித்தல் மற்றும் விளம்பரம் தீர்ப்பவர்களால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்படும் வழங்குதல்கள் பதிவாளர் வழங்கிய அல்லது வழங்கப்பட்டதாகக் கருதப்படும் சகல சிவில் வழக்குகள் மற்றும் வேறு வழக்குகள் தோன்றிய அனைத்துப் பிணக்குகளும் கூடுமான அளவு இந்த நியதிச்சட்டத்தில் செய்யப்பட்டதாக, வழங்கப்பட்டதாக, கையளிக்கப்பட்டதாகத் தோன்றியதாக கருதப்படல் வேண்டும்.

81. ஒரு விதமான வங்கிப் பணியை நடாத்திக்கொண்டு இருக்கும் ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் அங்கு வைப்புப் பணச் சட்டக்கோவையின் 5 ஆம் பந்தியில் II ஆம் பகுதியின்கீழ் காப்புறுதி செய்யப்பட்டு பாதுகாப்பான வைப்புகளுக்கான இருப்புகளுக்கு இந்த நியதிச்சட்டத்தில் என்ன குறிப்பிடப்பட்டிருந்தாலும், அதைப் பொருட்படுத்தாது அந்த வைப்புகளுக்கான செலவுகளைத் தீர்ப்பதை தவிர்ந்த வேறு விடயங்களுக்கு பயன்படுத்தக் கூடாது.

நிதி, நீதிச்சட்டத்தின் அடிப்படையில் பாதுகாப்பாக வைப்பிலிடப்பட்டிருக் கும் குறிப்பிட்ட கடனை தீர்ப்பதற்காகவே தவிர, பயன்படுத்தக்கூடாது என்பதைப் பற்றி.

82. (1) இந்த நியதிச் சட்டத்தின் பணிகளுக்காக பதிவாளர் அல்லது அவர் அவருக்குப் பதிலாக முறைப்படி அதிகாரம்பெற்றவர் பிறப்பித்த உத்தரவிற்கமைய ஒரு செயலை செயற்படுத்துவது அல்லது இவருக்குப் பதிலாக அதிகாரம் நிர்ணயித்த ஒரு விடயத்தைச் செய்வதற்கு அல்லது ஒரு தகவலை வழங்குவதில் வேண்டுமென்றே தவிர்த்துக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் சகல பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் அல்லது அதில் பதவி வகிப்பவரும் அல்லது ஊழியர் அல்லது அங்கத்தவர் மற்றும் இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அழைப்பு ஆணைக்குழு உத்தரவுக்கு அல்லது சட்டபூர்வமான கடிதமூல உத்தரவுக்கு வேண்டுமென்றே அல்லது நியாயமான காரணம் எதுவுமின்றி கீழ்படியாத அல்லது இந்த நியதிச்சட்டத்தின் நிபந்தனைகளின்கீழ் ஏதாவது ஒரு தகவலை வழங்கும்படி அதிகாரம்பெற்ற ஒருவரால் அவ்வாறு வழங்குதல் சட்டபூர்வமானதென நிர்ணயிக்கும் தகவலை தவிர்த்துக்கொள்ளும் அனைவரும் மற்றும் வேண்டுமென்றே பொய் அறிக்கையை வழங்கும் சகல பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் அல்லது அதில் பதவி வகிப்பவர் அல்லது ஊழியர் அல்லது அங்கத்தவர் இந்த நியதிச்சட்டத்தின்கீழ் குற்றத்திற்காக குற்றவாளியாக வேண்டும்.

நியதிச் சட்டத்தின்படி செயற்படாதவிடத்து தண்டனை.

(2) (1) ஆம் உப பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள ஒரு குற்றத்தைச் செய்யும் அனைவரும் நீதிபதி முன்னால் நடாத்தப்படும் குறுகிய வழக்கு விசாரணையின் பின் குற்றவாளியாகக் காணப்பட்டால் இரண்டு வருடத்திற்கு மேற்படாத காலத்திற்கு இரண்டு விதத்தில், ஒரு விதத்தில் சிறைத்தண்டனை விதிப்பது அல்லது பன்னிரண்டாயிரம் ரூபாவிற்கு மேற்படாத அபராதம் அல்லது சிறைத்தண்டனையும் அபராதமும் என்ற இரண்டிற்கும் அல்லது தண்டனை நீதிபதியின் பொது நீதிமன்ற அதிகாரத்தைக் கடக்குமானாலும், அவர் உட்பட வேண்டும்.

(3) பதிவுசெய்யப்பட்ட சங்கம் அல்லது யூனியன் இந்த நியதிச் சட்டத்தின் அடிப்படையில் குற்றம் இழைத்திருக்கும் சந்தர்ப்பத்தில் செய்த குற்றம் கடமை மீறுவதாயின் அந்தக் கடமையை நிறைவேற்ற உபவிதி யாப்பில் அல்லது விதிக்கு உட்பட்டிருக்கும் அந்தச் சங்கத்தின் அல்லது யூனியனில் சகல பதவி வகிப்பவர்களும் அல்லது அவ்வாறான பதவி வகிப்பவர்கள் இல்லாதிருப்பின் செயற்குழுவில் சகல அங்கத்தவர்களும் அந்த உறுப்பினர் அந்தக் குற்றத்தைச் செய்ததைப் பற்றி தெரியாதென

அல்லது அதைத் தடுக்க முயற்சி செய்ததை நிரூபிக்கப்பட்டாலே தவிர அவர் குற்றத்தைச் செய்திருந்தால், அவர் உட்பட வேண்டிய தண்டனைக்கு உட்பட வேண்டும்.

பதிவாளரினதும் அவருடன் தொடர்பு டையவர்களின் செயற்பாடு தொடர் பான பாதுகாப்பு.

83. இந்த நியதிச் சட்டத்தில் 57 ஆம் பிரிவின்படி அல்லது வேறு ஒரு பிரிவின்படி தனது பணிகளை நிறைவேற்றும்போது அல்லது கடமைகளை நேர்மையுடன் செய்யும் ஒரு செயல் தொடர்பாக பதிவாளருக்கு, பிரதி சிரேஷ்ட உதவியாளர் மற்றும் உதவி பதிவாளருக்கு அல்லது இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் பதிவாளரால் முறையாக அதிகாரம் வழங்கப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட வேறு ஒருவருக்கு எதிராக ஒரு சிவில் வழக்கை அல்லது குற்றவியல் வழக்கை தாக்கல் செய்யக்கூடியதாக இருக்கக் கூடாது.

பொதுக் கூட்டத்தை அல்லது செயற்குழுக் கூட்டத்தை கூட்டுவதற் கும் அவைகளில் கலந்து கொள்வதற் கும், பேசுவதற்கும் பதிவாளருக்கு உள்ள உரிமை.

84. (1) பதிவாளருக்கு பொது அல்லது சிறப்பு உத்தரவின் பேரில் அதற்காக அவரிடம் அதற்கான அதிகாரத்தைப் பெற்ற ஒருவருக்கு, எவ்வேளையிலும் தான் நிர்ணயிக்கும் விதத்தில் மற்றும் இடத்தில் எந்தவொரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனில் விசேட பொதுச்சபைக் கூட்டம் அல்லது கூறப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனில் எந்தவொரு பிரதேச பொதுச் சபையில் சிறப்பு பொதுக் கூட்டத்தை கூட்டுவதற்கான அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறான ஒரு கூட்டத்திற்கு அந்தச் சங்கத்தின் பொதுக் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுடைய அங்கத்தவர்களிடமிருந்து அல்லது பிரதிநிதிகளிடமிருந்து பத்துப் பேர் சமுகமளித்தல் போதுமானதாக இருப்பதுடன் அந்த எண்ணிக்கையைப் போதுமானதாகக் கருதப்படல் வேண்டும். அவ்வாறு பொதுக்கூட்டத்திற்கு அல்லது பிரதேச பொதுக் கூட்டத்திற்கு சங்கத்தில் அல்லது யூனியனில் உப விதிகளின் அந்த பொதுச்சபைக்கு உறுதியான அதிகாரம் இருக்க வேண்டும்.

(2) பதிவாளருக்கு அல்லது அவரிடமிருந்து எழுத்து மூலமாக அதிகாரத்தைப்பெற்ற ஒருவருக்கு, அனைத்து பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனில் செயற்குழுக் கூட்டம் அல்லது கூறப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனில் பிரதேச செயற்குழுக் கூட்டத்தை எவ்வேளையிலும் தான் உத்தரவு பிறப்பிக்கும் விதத்தில் குறிப்பிட்ட நேரத்தில் மற்றும் இடத்தில் கூட்டுவதற்கு அதிகாரம் இருத்தல் வேண்டும். அவ்வாறான கூட்டத்தில் ஒவ்வொரு சங்கத்தில் அல்லது யூனியனில் செயற்குழுவிற்கு குறிப்பிட்ட பிரதிநிதித்துவ எண்ணிக்கையில் ஐந்தில் ஒன்று அல்லது மூன்றிற்கு கூடுதலானவர்கள் சமுகமளித்து இருப்பது போதுமானதாக இருப்பதுடன் அது போதுமான அளவு கணிக்கப்படும். அவ்வாறான செயற்குழு பொதுக்கூட்டத்திற்கு சங்கத்தின் உபவிதி யாப்பில் அந்த செயற்குழுவிற்கு தீர்மானமாக இருக்கவேண்டிய அதிகாரம் இருத்தல் வேண்டும்.

(3) செயற்குழுக் கூட்டத்தை கூட்டும்போது தேவையென தனக்குப் புரியும் சங்கத்தின் அல்லது யூனியனில் புத்தகங்கள் அல்லது ஆவணங்கள் சமர்ப்பிக்கும்படி உத்தரவிடுவதற்கு பதிவாளருக்கும் அல்லது அவரிடம் எழுத்து மூலமாக அதிகாரம்பெற்ற ஒருவருக்கு அதிகாரம் இருக்க வேண்டும். அவ்வாறான சகல உத்தரவுகளின்படி செயற்படுதல் சங்கத்தின் அல்லது யூனியனின் செயலாளர் அவர்களின் பொறுப்பாகும். பதிவாளர் அவரின் அதிகாரத்தைப் பெற்ற ஒருவருக்கு அல்லது மேலே (1) மற்றும் (2) ஆவது உப பிரிவின்கீழ் கூட்டப்படும் எந்தவொரு கூட்டத்திற்கும் தலைமை வகிக்கலாம். ஆனாலும் அந்த கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட விடயத்தை முடிவு செய்வதற்கான பொது வாக்குரிமை அதிகாரம் இருக்கக் கூடாது.

(4) பதிவாளருக்கு அல்லது அவரின் பொது அல்லது சிறப்பு எழுத்துமூலமாக உத்தரவின் பேரில் அதிகாரம்பெற்ற ஒருவருக்கு அல்லது பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் பொதுச்சபைக் கூட்டத்திற்கு அல்லது செயற்குழு கூட்டத்திற்கு வருவதற்கும் அங்கு பேசுவதற்கும் அதிகாரம் இருக்கவேண்டும். ஆனால் பதிவாளருக்கு அல்லது அவரின் முறையான அதிகாரம்பெற்ற ஒருவருக்கு அவ்வாறான கூட்டத்தில் வாக்களிக்க அதிகாரம் இருக்கக் கூடாது.

சிக்கலான நிலை தோன்றும்போது பதிவாளருக்கு உள்ள உரிமை.

85. ஒரு பதிவுசெய்யப்பட்ட சங்கத்தில் அல்லது யூனியனில் வியாபாரம் அல்லது நிர்வாகத்தை நடாத்துவதற்கு இயலாத விதத்திலான சிக்கல்கள் நிலைதோன்றினால், சிக்கலிருந்து விடுபடும்வரை அந்த சங்கம் அல்லது யூனியனில் நடாத்துவதற்கான நிபந்தனைகளை பதிவாளர் அமைக்கலாம்.

நியதிச்சட்டத்தை இரத்துச்செய்தல்.

86. இந்த நியதிச் சட்டம் செயற்படுவதோடு கீழ்க்காணும் நியதிச்சட்டத்தின் செயற்பாடுகள் நிறுத்தப்படல் வேண்டும் :-

(அ) ஊவா மாகாண சபையின் 1991 ஆம் ஆண்டின் இலக்கம் 5 ஐக் கொண்ட கூட்டுறவு சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு நியதிச் சட்டம்.

(ஆ) ஊவா மாகாண சபையின் 1992 ஆம் ஆண்டின் இலக்கம் 5 ஐக் கொண்ட கூட்டுறவுச் சங்கம் மற்றும் கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழு (திருத்தம்) நியதிச்சட்டம்.

அர்த்த நிரூபணம்.

87. சொற்கள் தொடர்பாக வேறு அர்த்தங்கள் தேவைப்பட்டாலே தவிர இந்த நியதிச்சட்டத்தில் ''உபவிதி யாப்பு'' என்றால் தற்சமயம் இருக்கும் பதிவுசெய்யப்பட்ட உபவிதி யாப்பு என்ற கருத்தாகும். அந்த உபவிதி யாப்பில் பதிவுசெய்யப்பட்ட திருத்தங்கள் உள்ளடக்கப்பட்டிருக்கும்.

''அமைச்சர்'' என்பது ஊவா மாகாண சபையின் கூட்டுறவு அபிவிருத்திக்கு பொறுப்பான அமைச்சு என்ற கருத்தாகும்.

"அமைச்சின் செயலாளர்" என்றால் ஊவா மாகாண சபையின் கூட்டுறவு விடயத்திற்குப் பொறுப்பான செயலாளர் என அர்த்தப்படும்.

"பதிவாளர்" என்றால் இந்த நியதிச்சட்டத்தின் அடிப்படையில் ஊவா மாகாண சபையில் கூட்டுறவுச் சங்கத்தின் பதிவாளரின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக நியமிக்கப்பட்ட ஒருவர் என்பது கருத்தாகும்.

"செயற்குழு" என்றால் பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் பணிகள் பற்றிய முகாமைத்துவத்தை ஒப்படைக்கப்பட்ட அந்தச் சங்கத்தின் நிர்வாக சபை எனக் கருத்தாகும். பதிவுசெய்யப்பட்ட சங்கத்தின் அல்லது யூனியனின் பணிப்பாளர் சபை மற்றும் இந்த நியதிச்சட்டத்தின் 56 ஆவது பிரிவின் நிபந்தனைகளின்கீழ் பதிவாளரால் நியமிக்கப்படும் மற்றும் தெரிவுசெய்தவர்கள் அதற்கு உள்ளடக்கப்பட்டதாகும்.

"அதிகாரி" என்பது சங்கத்தின் அல்லது யூனியனின் அல்லது அங்கு ஒரு கிளையின் தலைவர், உப தலைவர், செயலாளர், பொருளாளர் அல்லது சங்கத்தின் அல்லது யூனியனின் செயற்குழுவின் அங்கத்தவர் மற்றும் சங்கத்தின் அல்லது யூனியனின் உத்தரவுகளின் மூலம் அல்லது உபவிதி யாப்பு மூலமாக அதிகாரம் வழங்கப்பட்ட வேறு எவரும் உள்ளடக்கப்படலாம்.

"அங்கத்தவர்" என்பது சங்கத்தை பதிவுசெய்வதற்காக விண்ணப்பம் செய்வதற்கு கலந்துகொள்ளும் ஒருவர், பதிவுசெய்யப்பட்ட பின் விதி மற்றும் உபவிதி யாப்பின்படி அங்கத்துவத்திற்காக உள்வாங்கப்படும் ஒரு நபர், உள்ளடக்கப்படும்.

"வங்கி" என்றால்-

(அ) பொது மக்களிடமிருந்து கோரிக்கை வைப்புகளை ஏற்றுக்கொள்ளும் அல்லது பண வைப்புத் தொழிலை இலங்கையில் நடாத்துவதற்கு சட்டபூர்வமாக்கப்பட்ட அல்லது சட்டபூர்வமான ஒரு நபர் அல்லது ஒரு ஆட்களுடனான குழு,

(ஆ) அரசாங்கத்துக்குப் பதிலாக செயற்படும் மற்றும் கடன் வழங்குதல், முற்பணம் வழங்குதல் அல்லது முதலீடு செய்வது அல்லது பொது மக்களிடமிருந்து சேமிப்புகளை ஏற்றுக்கொள்ளும் (ஒரு எழுத்து மூலமான அல்லது ஒரு விதத்தில் அமைக்கப்பட்ட) ஒரு முகவர் நிறுவனம்.

(இ) இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம்.

(ஈ) கூட்டுறவு அபிவிருத்தி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருடனான ஆலோசனையுடன் நிதி விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினால் வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளையினால் பிரகடனப்படுத்தப்பட்ட வேறெந்த ஆள் அல்லது ஆட்கள் குழு எனப் பொருள்படும்.

"தொடக்கநிலை சங்கம்" என்பது 6(1) ஆம் உப பிரிவின் (அ), (ஆ) அல்லது (ஈ) என்னும் பந்தியில் குறிப்பிடப்பட்ட ஏதேனும் குறிக்கோளுடன் அல்லது ஏதேனும் நோக்கத்திற்காக அமைக்கப்பட்ட சங்கமொன்றல்லாத பதிவுசெய்யப்பட்ட சங்கம் என பொருள்படும்.

"விதிகள்" என்பது இச்சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட அல்லது ஆக்கப்பட்டனவாக கருதப்பட்ட விதிகள் எனப் பொருள்படும்.

"வைப்பு நிதியம் அல்லது சட்டபூர்வமான சேகரம்" என்பது ஏதேனும் சங்கத்தை அல்லது யூனியனை தொடர்ந்து நடத்துவதற்காக மூலதன குறைபாடுகள் தோன்றும் வேளையில், பயன்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்ட அல்லது சேமிக்கப்பட்ட நிதியம் என பொருள்படும்.

88. இந்நியதிச் சட்டத்தின் சிங்கள, தமிழ், ஆங்கில உரைகளுக்கிடையில் முரண்பாடு தோன்றும் பட்சத்தில் சிங்கள உரையே அமுல்படுத்தப்பட வேண்டும். முரண்பாடுகள் தோன்றினால் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல்.

12-329

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.